
புதிய சமுதாயம்

KDN 0131/78 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்



வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2009 தை 28
கம்பம் 1 ∴ (10-2-1978) ∴ குடும்பம் 22

புதுமைப் பெண்

சோமசன்மா

முன்னும் பின்னுமாய் ஆடை குறைப்பவள்
முதுகு பக்கமாய் முழுதும் தெரிபவள்
கண்கள் கரையினில் மையை நிறைப்பவள்
காதல் என்பதைக் கடையில் கேட்பவள்

நாணம் என்பதை நாளும் விற்பவள்
நடையில் மட்டுமே மானை ஒத்தவள்
கான மொழியினில் கதைகள் அளப்பவள்
கணக்கில் ஆடவர் தொகையை வளர்ப்பவள்

சேலை என்றதும் முகத்தைச் சுளிப்பவள்
சிறிய ஆடையில் சுகத்தை அளிப்பவள்
ஆளை மாற்றியோர் ஆளைப் பிடிப்பவள்
அந்தக் காலத்தைப் பழித்து வெறுப்பவள்

நீண்ட தோகையை நறுக்கி முடிப்பவள்
நெற்றிக் கூந்தலைச் சுருட்டி மகிழ்பவள்
பெற்ற குடியினர் பெருமை குறைப்பவள்
பெண்மை என்பதன் பெயரைக் கெடுப்பவள்

குதிரை ஆண்டுக் குதூகலம்

சீனப் புத்தாண்டான குதிரை ஆண்டை சீனச் சகோதரர்களுடன் மற்ற இனத்தவரும் சேர்ந்து கொண்டாடினர். அதற்கு ஓர் எடுத்துக் காட்டு அட்டைப்படம்.

தங்கள் பக்கத்து வீட்டில் வசிக்கும் தமிழ்ச் சிறுவர்கள் இருவருடன் புத்தாண்டின் போது இரு சீனக் குழந்தைகள் எடுத்துக்கொண்ட படம் இது.

வண்ணப்படம்: மாயன்.

கலைக்குழுக்களின் படையெடுப்பு

கடந்த 1977-ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து இங்கு வருகைதந்தகலைக்குழுக்களின்எண்ணிக்கை மிக அதிகமாகும். இவ்வகையில் சென்ற ஆண்டை ஒரு சாதனை என்று ஆண்டு சொல்வது கூட மிகையாகாது. பொதுவாக இத்தகைய கலைப் படைப்புக்கள் நமது நாட்டுக் கலைஞர்களுக்கும் அவர்களின் கலைத் திறமைக்கும் புதிய வேகத்தையும், புதுத்தெம்பையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டுக்கு நாடு நடைபெறுகிற இத்தகைய கலைப் பரிமாற்றங்கள் ஆரோக்கியமான கலை வளர்ச்சிக்குத் துணைபுரிகின்ற அரிய வாய்ப்புக்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

கலைஞர்கள் புதிய கலை நுணுக்கங்களையும், உத்திகளையும் கற்றுக் கொள்வதற்கும், பிற நாட்டுக் கலைஞர்களின் திறமையோடு தங்கள் கலைத்திறமையை ஒப்பிட்டுக் குறை நிறைகளைத் தெரிந்து கொள்வதற்கும் போட்டி உணர்வோடு தங்களின் கலை ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும்கூட வெளிநாட்டுக் கலைஞர்களின் வருகை நமது கலைஞர்களுக்குத் துணைபுரிந்து வருகிறது. ஆகவே தமிழகத்திலிருந்து நாடகக்குழுக்களும், நடனக் குழுக்களும், மற்றும் கிராமியக் கலைஞர்களும், இசைக் கலைஞர்களும் இங்கு வருவதை நாம் களிப்புடன் வரவேற்பதிலும், அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு தருவதிலும் பொருள் இருக்கிறது.

எனினும் இங்கு வருகின்ற கலைக்குழுக்கள் அனைத்தும் தங்களின் கலைப்பயணத்தில் வெற்றிகாண முடிகிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் கிடைக்கின்ற பதில் ஏமாற்றமாகத்தான் இருக்கும். சென்ற ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் இங்கு வந்துசென்ற தமிழகக் கலைக்குழுக்களில் பெரும்பாலானவை "பயங்கரமான" படுதோல்வியையே அடைந்திருக்கின்றன. மனோகர் நாடகக் குழுஒன்றுமட்டுமே பெயர் போட்டுமனநிறைவுடன் தமிழகத்திற்குத் திரும்ப முடிந்தது. மற்றக் குழுக்களின் கதைகளெல்லாம் சோகக் கதைகளாகவும், பரிதாபக் கதைகளாகவுமே முடிந்திருக்கின்றன.

கலைக்குழுக்களை வரவழைத்தவர்களுக்கும் கைப்பொறுப்பு; அவர்களுக்கும் திருப்தி இல்லை. வந்த

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08 அஞ்சல் பெட்டி எண்: 2066, தொலைபேசி:925116.

கலைஞர்களுக்கும் ஏமாற்றம்; வெறுப்பு.

இத்தகைய கசப்பான சூழ்நிலை இனிமேல் வருகின்ற கலைக் குழுக்களுக்காவது நேரிடாமல் இருக்கவேண்டுமானால் இக்குழுக்களை வரவழைப்பவர்கள் எச்சரிக்கையோடு நிலைமைகளை நன்கு கணித்துச் செயல்படுவது முக்கியமாகும்.

குறிப்பாக இசை நாடகத்திலகம் உடையப்பாவின் நாடகக் குழுவுக்கு இங்கு ஏற்பட்ட ஏமாற்றம் கலைநிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும், கலைக்குழுக்களை வரவழைப்பவர்களும் கருத்தில் கொள்ளவேண்டிய படிப்பினைகளை வழங்கி இருக்கிறது. நல்லவேளையாக உடையப்பாகுழுவினர் ஏமாற்றத்துடனும், அதிருப்தியுடனும் திரும்பிச் செல்லாதபடி தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கமும் அதன் தலைவர் துன் வீ. தி. சம்பந்தன் அவர்களும் தக்க சமயத்தில் அவர்களுக்குக் கைகொடுத்துச் சங்கத்தின் தோட்டங்கள் அனைத்திலும் அவர்களின் நாடகங்களை நடத்தச் செய்து போதிய ஆதரவை வழங்க முன்வந்தனர். இதன் பலனாக உடையப்பா குழுவினர் மன நிறைவோடு தமிழகத்திற்குத் திரும்ப முடிந்தது. இவ்வாறு இங்கு வருகின்ற கலைக்குழுக்களுக்கெல்லாம் உதவிக்கரம் கொடுத்து "மீட்பு" நடவடிக்கைகளை மேற்கொள்வது இயலாத காரியம் என்பது வெளிப்படை.

துன் சம்பந்தன் தமது இல்லத்தில் உடையப்பா குழுவினருக்கு அளித்த பிரியாவிடை விருந்தில் கூறியிருக்கும் ஆலோசனைகளைத் தமிழகத்திலிருந்து இங்கு வருகின்ற கலைக்குழுக்கள் கருத்தில் கொள்வது நன்மையாக இருக்கும். இங்கு இருக்கிற ரசிகர்களைத் தமிழகக் கலைஞர்கள் பெரிதும் குறைத்து மதிப்பிடுவதாகவே தோன்றுகிறது. இங்கு எதையாவது பெயருக்குக் "காமாசோமா" வென்று ஆடினால் போதும். பாடினால் போதும். தங்களின் திருமுகங்களைப் பார்த்தாலே மலேசிய ரசிகர்கள் உள்ளம் குளிர்ந்துவிடுவார்கள் என்றெல்லாம் தவறாகத் தமிழகக் கலைஞர்கள் எண்ணுவதாகவே தோன்றுகிறது. பல குழுக்கள் இங்கு நடத்திய கலை நிகழ்ச்சிகளின் தரத்தைப் பார்க்கும் போது இப்படித்தான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

இனிமேலாவது இங்கு வருகிற குழுக்கள் அனைத்தும் மலேசிய ரசிகர்கள் மனநிறைவு கொள்கிறமாதிரி தரமான நிகழ்ச்சிகளைப் படைக்க முற்படும் என்று எதிர்பார்க்கிறோம். அத்துடன் கலைக்குழுக்களின் வருகையும் ஒன்றுக்குப்பின் ஒன்றாகவும் ஒரே சமயத்தில் இங்குப் பல குழுக்கள் இருக்கிற மாதிரியும் அமைந்துவிடக்கூடாது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கு ஒப்ப மலேசிய ரசிகர்களுக்குச் சலிப்பும், அலுப்பும், வெறுப்பும், கசப்பும் தட்டுகிற அளவுக்குத் தமிழகக் கலைஞர்களின் படையெடுப்பு இங்கு கடந்த பல மாதங்களில் நிகழ்ந்துவிட்டது. எதிர்காலத்தில் இத்தகைய சலிப்புக்கு இடமின்றித் தக்க இடைவெளியோடு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழு வருமானால் அவர்களின் பயணமும் வெற்றியடையும். வரவழைப்பவர்களுக்கும் பயன் கிட்டும். நமது ரசிகர்களின் மனமும் நிறையும்.

பிரதமரின் உறுதிமொழி

பத்துமலை தைப்பூசத்திற்கு இந்த ஆண்டு வருகை புரிந்த பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் தைப்பூசப் பொது விடுமுறைகுறித்துவிரைவில்மந்திரி சபை நல்ல முடிவெடுத்து அறிவிக்கும் என்னும் தித்திக்கும் செய்தியை வழங்கி அங்குக் கூடியிருந்த நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்களைப் பரவசத்தில் திளைக்கச் செய்தார்.

பிரதமரின் உறுதிமொழி நிறைவேறி அடுத்த ஆண்டு தைப்பூசத்திற்கு நாடு முழுவதும் பொது விடுமுறை அறிவிக்கப்படுமென்று மனப்பூர்வமாக நம்புகிறோம்.

பத்துமலை எதிர்நோக்கும் கல்லுடைப்பு அபாயத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நீதிமன்றத்துக்குச் செல்லும்படி பத்துமலை கோயில் நிர்வாகிகளுக்கும் பத்துமலை வட்டார மக்களுக்கும் பிரதமர் வெளியிட்டிருக்கும் ஆலோசனையைத் தேவஸ்தான நிர்வாகம் விரைவில் செயல்படுத்த முனையுமென்று எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டு தைப்பூசத்திற்குக் கல்லுடைப்பு நிறுத்தப்படுவதற்குத் துரிதமான நடவடிக்கைகள் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாஸ்போர்ட் பறிமுதல்

இந்தியாவில் மலேசியாவின் தூதராகத் தமது பதவிக் காலத்தை முடித்துக்கொண்டு கோலாலம்பூருக்குத் திரும்பிய டான்ஸ்ரீ அப்துல் காலித்தின் பாஸ்போர்ட்டும் அவருடைய மனைவி, புதல்வி ஆகியோரின் பாஸ்போர்ட்டும் மலேசிய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளால் விமான நிலையத்திலேயே "பறிமுதல்" செய்யப்பட்டிருப்பது சற்று அதிர்ச்சி ஊட்டுகிற சம்பவமாகும்.

விஸ்மா புத்ரா அதிகாரிகள் இந்த அளவு கடுமையாக நடந்து கொள்வதற்குக் காரணங்கள் இருக்கக் கூடும். புதுடில்லியிலுள்ள இந்தியத் தூதரக ராஜதந்திர அதிகாரி ஒருவர் மீது கடிகாரக் கடத்தல் சம்பந்தமாக விசாரணை நடந்து வருவதால் இத்தகைய நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டிருக்கலாம்.

என்றாலும் டான்ஸ்ரீ காலித்தின் ராஜதந்திர பாஸ்போர்ட்டை அவர் தமது இல்லத்திற்குத் திரும்பிய பிறகு யாருக்கும் தெரியாமல் திரும்பப் பெற்றுக் கொண்டிருப்பது சாத்தியமே. அப்படிச் செய்திருந்தால் மலேசியாவின் தூதராகப் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கும் டான்ஸ்ரீ காலித்துக்கும் இப்படி ஒரு தர்மசங்கடமும், சிக்கலும் நேராமல் தவிர்த்திருக்க முடியும்.

தண்ணீர்ப் பந்தல்

கடந்த 24-1-78 அன்று பத்துமலையில் தைப்பூசத் திருவிழாவைக் காண என் குடும்பத்தினருடன் சென்றிருந்தேன். அன்றைய தமிழ்மலரில் புதிய சமுதாயம் பத்துமலை அடிவாரத்தில் தண்ணீர்ப் பந்தல் போட்டிருக்கும் செய்தி அறிந்து அங்கிருந்த நூற்றுக்கணக்கான கடைகளையும் நோட்டமிட்டுக் கொண்டே தேடி அலைந்தோம். இறுதியில் தகவல் நிலையத்திற்கு எதிர்ப்புறமாகக் கம்பீரத்துடன் காட்சியளித்த "புதிய சமுதாயம்" தண்ணீர்ப் பந்தலைக் கண்டோம்.

நானும் என் குடும்பத்தினரும் அங்கு வழங்கப்பட்ட சுவையான மோரை அருந்தித் தாகம் தீர்த்துக் கொண்டோம். புதிய சமுதாயத்தின் தைப்பூச இதழையும் 50 காசு கொடுத்து வாங்கிக்கொண்டோம். அதோடு புதிய சமுதாயம் ஆசிரியரையும் அவர்தம் குழுவினரையம் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததும் எங்களால் மறக்க முடியாத ஒன்ருகும்.

அன்று காலையிலிருந்து மாலை வரைக்கும் பல்லாயிரக்கணக்கான பக்தகோடிகளுக்குப் புதிய சமுதாயம் தண்ணீர்ப்பந்தல் மூலம் செய்யப்பட்ட நீர்மோர் விநியோகத்தைப் பத்துமலைக்கு வந்த பக்தகோடிகள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

—குமாரி எஸ். இந்திராணி, ஈப்போ

விட்ட குறை

சார்லி சாப்ளினின் ரசிகன் நான். 25-1-78 இதழில் வெளிவந்த கட்டுரையில் அவருடைய மாபெரும் தயாரிப்புக்களான "த கிரேட் டிக்டேட்டர்". "சிட்டி லைட்ஸ்" போன்ற படங்களைக் குறிப்பிடவில்லையே!

—இரா. இராமராவ், தலைநகர்

சிந்தனை ஏடு

"புதிய சமுதாயம்" நமக்கெல்லாம் கருத்துக்களையும் சிந்தனைகளையும் ஏற்படுத்தக்கூடிய ஓர் ஏடென்று சொன்னல் அது முற்றிலும் உண்மை. இதில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சமும் படிக்கச் சுவையாகவும் சிந்திக்க இனிமையாகவும் உள்ளது.

—ஓ. எஸ். எஸ். சேகர்,
கோல்கொண்டா தோட்டம், கிள்ளான்

மாறிய ஊர்!

20-வது இதழின் இறுதிப் பக்கத்தில் "இயேசுவின் கையிருப்பு" என்ற தலைப்பிலான எனது துணுக்கை வெளியிட்டிருந்தீர்களே! அதில் எனது பெயரைச் சரியாக வெளியிட்டுவிட்டு வசிப்பிடத்தை மாற்றிவிட்டீர்களே! யார் உங்களுக்குச் சொன்னது, நான் கெப்போங்கில் வசிப்பதாக?

—க. குணசேகரன், செலயாங் பாரு

பிரமாத ஆரம்பம்!

தைப்பூசச் சிறப்பிதழாக மலர்ந்த "புதிய சமுதாயம்" சிறப்பாகவே இருந்தது. சா. ஆ. அன்பானந்தன் எழுதும் "உண்மைகள்" ஆரம்பமே பிரமாதம்! மற்ற அம்சங்கள் யாவும் நன்று!

—ஊதாப்பூ ராமச்சந்திரன்,
பத்தாங்காலி தோட்டம்

பூ(பா)சமலர்

தைப்பூசத்தை முன்னிட்டு வெளிவந்த "புதிய சமுதாயம்" மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. இடம்பெற்றவை யாவும் படிப்பதற்குச் சுவையாக இருந்தன. தைப்பூச சிறப்பைக்கொண்டு அமைந்த கட்டுரைகள் யாவும் இனிக்கச் செய்தன. இடம்பெற்ற சிறுகதைகளில் என்னுள்ளத்தை கவர்ந்தது "தாயாக வாழ்கிறள்." இக்கதையை வழங்கிய கதாசிரியைக்கு எனது பாராட்டுக்கள்.

—சொல்லின் செல்வன், கிண்டாவேலித்தோட்டம்
பத்துக்காஜா

வாசகர்களின் மகஜர்

ஆசிரியரின் தலையங்கங்கள், அகிலன் எழுதும் பால்மரக் காட்டினிலே, முருகுவைக் கேளுங்கள், வழிகாட்டுகிருர் வள்ளுவர் முதலான பகுதிகளை அதிகமான வாசகர்கள் விரும்பிப் படிக்கிருர்கள்.

தோட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான வாசகர்கள் சினிமாப் பக்கத்தைக் கூட்டவேண்டும் என்கின்றனர். கவிதை சாதாரண வாசகர்களின் ஆதரவைப் பெறவில்லை. தமிழறிவுப் போட்டி பலருக்குக் கடுமையாக இருக்கிறது.

வாசகர்கள் பங்குபெறும் பகுதி எப்போது வரும் என்று வாசகர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

புதிய சமுதாயத்தின் விற்பனையாளன் நான் என்னும் முறையில் வாசகர்கள் என்னிடம் கூறியவை இவை.

—கோபிநாத், பந்திங்



முந்துவைக் கேளுங்கள்

எஸ். ராஜேஸ்கோபால், மலகோப தோட்டம், கெடா

கே: ஒரு காதல் ஜோடி ஒருவர் மேல் ஒருவர் ஆசை வைத்திருக்கும் போது அந்நியர்கள் பார்த்து இந்த ஜோடியைப் பிரிக்க நினைக்கிறார்கள். இவர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: சேர்ந்திருப்பவர்களைப் பிரிக்க நினைப்பது படுமோசமான பாவம்.

எம். விமலா மனோ, ஈப்போ

கே: அண்ணா, எப்போது எங்கள் பட்டணமான ஈப்போவுக்கு வருவீர்கள்?

ப: புதிய சமுதாயத்திற்கு குறைந்தது நூறு சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்க உங்களால் முடிந்தால் உங்கள் அழைப்பை ஏற்று ஓடி வருவேன்!

என். பாலசந்திரன், மெந்தகாப், பகாங்

கே: கடந்த சில ஆண்டுகளாகப் பழகி வந்த நானும் என் நண்பரும் சமீபத்தில் மனஸ்தாபத்தால் பிரிந்தோம். அதன் பிறகு நான் பல சிரமங்கள் பட்டதையும் ஒரு விபத்தில் சிக்கிக் காயமடைந்ததையும் நேருக்கு நேராகப் பார்த்த அந்த நண்பர் என்னிடம் ஓர் ஆறுதல் வார்த்தை கூட கூறவில்லை. பின்னொரு நாள் அவர் ஒரு சில துஷ்டர்களிடம் மாட்டிக் கொண்டபோது அவரது நட்பை மறக்காமல் அவரது சார்பாக அந்த துஷ்டர்களிடம் எதிர்த்துப் பேசினேன். அதனால் நான் அந்த துஷ்டர்களுக்கும் எதிரியானேன்.

ஆனால் நண்பரோ மூன்றாவது மனிதர் வழியாக எனக்கு நன்றி தெரிவித்தார். அதன் பிறகும் நான் சிரமப்பட்டபோது என்னைப் பார்த்தும் பார்க்காதவர் போல் நடந்துகொண்டார். இதன் பிறகு நீண்டதொரு இடைவெளிக்குப் பின் இப்போது என்னுடன் நட்புகொள்ள விரும்புகிறார் அந்த நண்பர். ஆனால் என் மனச்சாட்சியோ நட்பு கொள்ள மறுக்கிறது. இதற்கு தாங்கள் கூறுவது?



ப: இந்த நண்பருக்கு நீங்கள் மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பார்க்கலாம் என்பதே எனது கருத்து. இந்தத் தடவையிலும் நட்பு இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அவர் விளங்காவிட்டால் அதன் பிறகு அவரை அறவே விலக்கிவிடவும்.

பெ. ஆனந்தராசு, சுங்கைசிப்புட்

கே: பல வியாபார நிறுவனங்கள் போட்டிகள் நடத்துகின்றன. விதிமுறைகள் எல்லா மொழிகளிலும் இருக்கின்றன. ஆனால் தமிழில் மட்டும் இல்லை. இதன் காரணம் என்ன? நமது ம. இ. கா. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

ப: விளம்பரங்களிலும் போட்டிகளிலும் பண்டங்களை விற்கும் பெட்டிகளிலும் இப்படித் தமிழைப் புறக்கணிக்கின்ற மனப்பான்மையைப் பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் கடைப்பிடித்து வருவது நமக்குப் பெரிதும் வேதனை அளிப்பதாகும். இவ்வாறு நமது தாய் மொழியைப் புறக்கணிக்கும் வர்த்தக நிறுவனங்களின் தயாரிப்புகளை நாமும் புறக்கணிக்க முற்பட்டால்தான் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு பிறக்கும். ம. இ. கா. வின் இளைஞர் பகுதியோ கலாச்சாரப் பகுதியோ இதற்கென்று ஒரு நடவடிக்கைக் குழுவை அமைத்து முனைப்பாகச் செயல்பட்டால் இந்தப் புறக்கணிப்பை விரைவில் மாற்றி அமைத்துவிட முடியும்.

ஜே. எஸ். சாமி, சுங்கை சிப்புட் தோட்டம், சுங்கை சிப்புட்

கே: அண்ணா, தோட்டப்புறத்தில் வாழும் இளைஞர்களை நகர்ப்புறங்களில இருக்கும் இளைஞர்கள் மிகவும் இழிவாகப் பேசுகிறார்களே. இதற்கு காரணம் என்ன?

ப: அறியாமையும் ஆணவமுமே காரணம்.

ஏ. சண்முகம், காராக் சீனப்பள்ளி, பகாங்

கே: நான் ஒரு லட்சியவாதி. என் மனைவி எப்படி இருக்க வேண்டும்?

ப: காரியவாதியாக இருக்கவேண்டும்.

இர. வீராசாமி, சௌந்தரவள்ளி, டோவன்பி தோட்டம், சுங்கைசிப்புட்

கே: மனிதர்களிடத்தில்தான் போட்டி என்றால் நம் நாட்டில் நம் மதத்தின் பெயராலும் போட்டியும் பொறாமையுமா?

ப: மனிதன், அதுவும் தமிழன் சம்பந்தப்படுகிற எந்த இடத்திலும் அது கோவிலானாலும், மதமானாலும், மயானமானாலும் போட்டியும் பொறாமையும் நிச்சயம் இருக்கத்தான் செய்யும். இது நம் தலைவிதி.

சு. நா. துளசிநாதன், பொண்டோலன் தோட்டம். போண்டோக் தஞ்சோங்

கே: தமிழவேள் அண்ணன் கோ. சாரங்கபாணி அவர்கள் எந்த ஆண்டில் எந்த ஊரில் பிறந்தார்?

ப: தமிழவேள் சாரங்கபாணி 1903-ஆம் ஆண்டில் தமிழகத்தைச் சேர்ந்த திருவாரூரில் பிறந்தார்.

கே: இறப்பிற்கு பின் பிறப்பு உண்டு என்று என்று சொல்கிறார்களே அது உண்மையா?

ப: உண்மையென்றே கருதுகிறேன்.

இராசிதுரை, தைப்பிங்

கே: "ராமதாஸ் மனோகரன்" அவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

ப: ஏற்கனவே பேரா மாநிலத்தில் "திரையொளி" நிருபராகப் பணியாற்றி இருக்கும் ராமதாஸ் மனோகரன் இப்போது புதிய சமுதாயம் இதழில் பணிபுரிகிறார்.

கே. ஜி. ஜெயராமன், கிரிக், பேரா

கே: மனம் பலவீனமாகி இருக்கும் போது அறிவு ஏன் துணைக்கு வருவதில்லை?

ப: மனச் சோர்வு அறிவையும் தூங்க வைத்து விடுகிறது போலும்.

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பேரா

கே: நம் இந்தியர்கள் புதுமணத் தம்பதிகளுக்கு வீட்டு முன் ஆரத்தி எடுக்கும் பழக்கம் பிற இனத்தவர்களிடம் உண்டா?



ப: எனக்குத் தெரிந்தவரை பிற இனத்தவர்களிடம் இப்பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

கே: உள்ளதைச் சொன்னால் சிலருக்குக் கோபம் வருவதேன்?

ப: உண்மை அம்பலமாகி விட்டதே என்ற பதற்றம்தான் காரணம்.

கே: இன்று உள்ள பெண்கள் தங்கள் சுதந்தர உணர்வுகளை வெளிப்படுத்தத் துடிப்பதேன் அண்ணா?

ப: ஆணுக்குப் பெண் நிகர் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை இருப்பதுதான் காரணம்.

சா. ராஜேஸ்வரன், நோர்த் ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: அண்ணா! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது, பழி வாங்க நேரம் பார்த்துக் கிடப்பது, உடன் இருந்தே குழி பறிப்பது, சிரித்துப் பேசியே கழுத்தறுப்பது, செய்நன்றி மறப்பது, செய்த நன்றிக்குப் பிரதிபலன் எதிர்பார்ப்பது இம்மாதிரி ஆறு குணங்களையும் கொண்டவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: உடல் முழுமையும் நஞ்சு படைத்த கயவர்கள் இவர்கள்!

கே: நானும் என் நண்பரும் ஒருவரையொருவர் மறவாமல் இருப்பதற்கு கடவுள் அருள் புரிய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் என் தந்தை கடும் சினேகிதம் கண்ணைக் குத்தும் என்று சொல்கிறாரே!

ப: மற்றவர் பார்த்துப் பொறுமையும் வேக்காடும் கொள்கிற அளவுக்கு நெருக்கமான சினேகிதம் கூடாது என்பதுதான் உங்கள் தந்தையின் கருத்து. மற்றபடி உங்கள் நட்பை அவர் வெறுப்பதாகக் கருதத் தேவையில்லை.

கோ. அசோதன், சித்தியவான்

கே: தோட்டத்தொழிலாளர்களின் எதிர்காலம்?

ப: சேமிப்பும் சிக்கனமும், குழந்தைகளின் படிப்பில் அக்கறையும், நிலம், வீடு போன்ற சொத்துக்களைச் சேர்ப்பதில் ஆர்வமும் இருக்குமானால் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையும்.

சி. அய்யாசாமி அமினா, பெந்தா தோட்டம், பகாங்

கே: வளரும் சமுதாயம் வழி தவறிச் செல்ல முதல் காரணம் நண்பர்களா? பெற்றோர்களா?

ப: பெரும்பாலும் கூட்டாளிகளே இதற்குக் காரணம். சகவாசதோஷம் என்று இதனைச் சொல்லலாம்.

கே: வெற்றிகளில் சிறந்த வெற்றி எது?

ப: இன்னா செய்தார்க்கும் இனிய செய்தலே பெரு வெற்றி.

ராஜகோபால், உலுதிராம், ஜொகூர்

கே: சிலர், கோழி முதலில் உற்பத்தியானதா, முட்டை முதலில் வந்ததா என்ற விவாதத்தில் இறங்குவதை விட, இனிமேல் நாம் நாட்டுக்கும் வீட்டுக்கும் என்ன செய்யலாம் என்று விவாதித்தால் நல்லதல்லவா?

ப: நீங்கள் சொல்வது மெத்தச் சரி. வெற்று விவகாரங்களில் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளாமல் உருப்படியான சிந்தனையிலும் செயலிலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்வது மிகமிக அவசியம்.

கே: மலேசியாவில் திடீர்திடீர் என்று தோட்டங்களை விற்கிறார்கள். ஆட்களைக் குறைக்கிறார்கள். இதனால் மக்கள் அவதிப்படுகிறார்கள். இதற்கு ஒரு வழி செய்தால் என்ன?

ப: துண்டாடல் தடைச்சட்டம் தோட்டத் துண்டாடலைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் நீங்கள் சொல்வது போல் திடீர் விற்பனைகளும் துண்டாலும் எப்படி நடக்கின்றன என்பது மர்மமாகவே இருக்கிறது. எந்தத் தோட்டத்தை விற்றாலும் அதனை வாங்குகின்ற முதற்சலுகை அந்தத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதே நியாயமாகும். அப்படிச் செய்தால் தோட்டத் தொழிலாளர்கள் துண்டாடலினால் பெருத்த நன்மையடைவார்கள். இவ்வாறு ஒவ்வொரு தோட்டத் தொழிலாளரும் குறைந்த பட்சம் பத்து ஏக்கர் நிலத்திற்கு உரிமையாளராக வரச் செய்வதுதான் நமது கூட்டுறவு, சங்கங்களின் எதிர்காலக் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

என். சக்ரவர்த்தி, கங்கார் பூலாய், ஜொகூர்

கே: மனம் அமைதிபெற எத்தகைய புத்தகத்தைப் படித்தால் நல்லது?

ப: பிரார்த்தனைப் பாடல்கள் மன அமைதியையும், மனத்தெம்பையும் வழங்கும்.

ஜி. என். சுகுமாறன், ஷாஆலம், சிலாங்கூர்

கே: "கல்கண்டு" இதழின் புதிய ஆசிரியர் யார்?
ப: தமிழ்வாணனின் புதல்வரான லேனா தமிழ்வாணன் எனும் லெட்சுமணன்.

கே. நடராஜன் வாணி, அலகார் தோட்டம், பேரா

கே: மகாத்மா காந்தி தமிழில் நூல் எழுதியுள்ளாரா? அவர் மற்ற மொழிகளிலும் எழுதிய நூல்கள் யாவை?
ப: மகாத்மா காந்தி தமிழில் நூல்கள் எழுதவில்லை. ஆனால் அவர் எழுதிய நூல்கள் பல தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவர் எழுதியிருக்கும் நூல்களையெல்லாம் பட்டியலிட இயலாது.

எஸ். மேகநாதன், ராஜா ஊத்தாம், சபாக்பெர்ணம்

கே: ஆசிரியரே, பல நல்ல உள்ளங்கள் உள்ள இடத்திலே ஒரு கெட்டவன் தலைவனானல் என்னவது?
ப: தீமை தலைவிரித்தாடும். நல்ல உள்ளங்கள் அடங்கி ஒடுங்கும்.

எஸ். டி. மனோ, குளுனி தோட்டம், சிலிம்ரிவர்

கே: பல காலமாக ஒரே தோட்டத்தில் பணிபுரிந்துவந்த ஒரு நபர் தன் ஐம்பத்தைந்தாவது அகவையை எட்டியதால் ஏனைய தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சனையால் தோட்ட நிர்வாகம் அந்நபரை இரண்டுவார காலத்தில் வீட்டைக் காலி செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்நபருக்கு உறவினர்களோ, நண்பர்களோ கிடையாது. மேலும் சொந்த வீடு, நிலம் என்பது எண்ணிப்பார்க்கக்கூடிய அளவில் இல்லை. இதற்கிடையில் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் பிள்ளைகள் வேறு உள்ளனர். இப்படியிருக்கும் இந்நபரின் நிலைமை, பிள்ளைகளின் எதிர்காலம் என்னவது? சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டால் இதுதான் "சட்டம்" என்கின்றனர். ஆகவே இந்நபரின் பரிதாபத் தவிப்பை தவிர்க்க ஆசிரியரின் தகுந்த ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றேன்.
ப: தோட்டத்து வீடுகளை மட்டும் நம்பி வாழும் நமது தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்புக்கு இவருடைய பரிதாப நிலை சரியான எடுத்துக்காட்டு. தோட்ட நிர்வாகம் கருணை வைத்து அவருக்கு மாற்றுக் குடியிருப்பு கிடைக்கும் வரை அவகாசம் அளிப்பது தான் நியாயமாகும். இதற்குத் தொழிற்சங்கத்தின் மூலமும் முறையீடு செய்யலாம்.

ஏ. பி. ராம்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பெண்கள் குங்குமம் வைத்துக்கொள்வது ஏன்?
ப: கண்ணுக்கு அழகாக இருக்க பெண்கள் செய்து கொள்ளும் அலங்காரங்களில ஒன்றுதான் குங்குமம்.

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: எங்கள் வட்டாரத்திற்கு எப்பொழுது விஜயம் செய்வீர்கள்?
ப: தங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள புக்கிட் அசகான் தோட்டத்திற்கு நவம்பர் மாதம் வந்திருந்தோம். இனிமேல் அந்தப் பகுதிக்கு வரும்போது தங்கள் ஊருக்கும் வருகிறோம்.

எஸ். விஜய் விஜிதாஸ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பள்ளியில் விதிக்கும் கட்டுப்பாடுகளை மதிக்கும் மாணவன் அல்லது மாணவி அவர்கள் தாய் தந்தை வீட்டில் விதிக்கும் கட்டுப்பாடுகளை ஏன் மீறிச் செல்கின்றனர்?
ப: பள்ளியில் பெட்டிப்பாம்பாய் அடங்கும் சுதந்தர உணர்வு வீட்டில் தலை விரித்தாடுகிறது போலும்!

எஸ். எஸ். வேலன் கோபால், கம்போங் ரம்புத்தான், கிள்ளான்


கே: ஒரு தாய், தன் தாய்ப்பாலை எத்தனை மாதத்திற்கு குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்?
ப: தாயின் ஆரோக்கியத்தைப் பொறுத்து ஒரு வருடம் வரையில் கொடுக்கலாம்

பெ. முத்துசாமி, சுபாங்

கே: மளிகைக் கடை வியாபாரம் செய்வதற்கு எப்படி, எங்கு லைசென்ஸ் பெறுவது?
ப: மளிகைக் கடை வியாபாரத்திற்கு முதலில் "பிசினஸ் ரெஜிஸ்டரேஷன்" என்னும் வர்த்தகப் பதிவு செய்வதோடு அந்தந்தப் பகுதியில் உள்ள ஊராட்சி மன்றங்களிடமிருந்து லைசென்ஸையும் பெறவேண்டும்.

மணியம் சுந்தராஜ், புளுவேலி தோட்டம், கேமரன்மலை

கே: மலேசிய வானொலி "ரங்காயான் மேரா"வில் ஒலிபரப்புகின்ற நிகழ்ச்சிகள் (ஒரு சிலவற்றைத் தவிர)சிறப்பானவை அல்ல. திறமையான வெளியூர் பாடகர்களுக்கு வாய்ப்பு தரப்படுவதில்லை! மலேசிய வானொலியில் பணிபுரிபவர்களே நிகழ்ச்சிகளில் அதிகம் பங்கேற்கின்றனர். இதுபோன்ற பல குறைகள் உள்ளன. அனுப்பப்பட்ட மடலுக்குப் பதிலே போடுவதில்லை. இவற்றுக்கெல்லாம் தாங்கள் கூறும் பதில் என்ன அண்ணா?



ப: இவற்றுக்குப் பதில் கூறவேண்டியவர்கள் ரங்காயான் மேரா தயாரிப்பாளர்கள். அவர்களின் பார்வைக்கு உங்கள் கருத்துக்களைச் சமர்ப்பிப்பதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய இயலாது.

மு. லெட்சுமணன், ஜெரம், சிலாங்கூர்

கே: வேலையில்லாத் திண்டாட்டத்தை நம் சமூகத்தில் குறைக்க நம்மவர்கள் கையாளவேண்டியவை யாவை?
ப: சொந்தமாகச் சிறிய மூலதனத்தோடு சிறு சிறு தொழில்களையும் வர்த்தகத்தையும் செய்வதற்கு நமது இளைஞர்களுக்குப் பயிற்சியும் ஊக்கமும் அளிக்கவேண்டும். பொது அமைப்புக்கள் மூலதனத்தைக்கூட நம்பிக்கையாக அந்த இளைஞர்களுக்கு வழங்க முன்வரவேண்டும்.

இ. மாரிமுத்து, பெல்டா, சுங்கை திங்கி, தஞ்சோங்மாலிம்

கே: பொதுத்தொண்டு புரிய இயக்கங்களில் பொறுப்புக்கு வருபவர்கள் தங்கள் உறவினர்களுக்கு முதல் சலுகை தர முயல்வது முறையாகுமா?

ப: அது முறையற்ற காரியம்.

கே: எனக்குத் தெரிந்த ஒருவர், தினமும் காலையில் குளித்தபின் சூரியனை வணங்குகிறார். தன் விருப்ப தெய்வமாக சக்தி தேவியை மனமுருகத் தொழுவார். உழைப்பிலும் சோம்பேறியல்ல. எனினும் இவரது வாழ்க்கையில் முன்னேற்றமே காணமுடிவதில்லை. இது ஏனோ?

ப: வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உழைப்பு மட்டும் போதாது. சந்தர்ப்பங்களும் சாதகமாக அமையவேண்டும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அதிர்ஷ்ட தேவதையின் கருணைப் பார்வையும் படிந்தால்தான் வாழ்க்கை முன்னேற்றம் பூர்த்தியாகும்.

கே: தாங்கள் பல தோட்டங்களுக்குச் சென்றுள்ளீர்களே! தோட்டப்புற இளைஞர்களைப் பற்றி என்ன எண்ணுகின்றீர்கள்?

ப: சமுதாயத்தின்மீது உண்மையான பற்றும் பாசமும் கொண்ட இளைஞர்களை தோட்டங்களில்தான் அதிகம் காணமுடிகிறது.

மணிவண்ணன், மணிமாறன், மணியரசன்
ரிவர்சைடு தோட்டம், கோலசிலாங்கூர்

கே: பெண்களில் சிலர் நல்ல இயக்கங்களில் துடிப்பு மிக்கவர்களாகச் செயல்படுகிறார்கள். இவர்களை நமது இன இளைஞர்கள் சிலர் இழிவாக வசைமொழி பாடுகிறார்கள். இந்த இளைஞர்களைப் பற்றி...?

ப: தனக்கென்று உருப்படியான வேலை இல்லாதவர்களே ஊரையும் உலகத்தையும் தூற்றிக்கொண்டு திரிவார்கள். அவர்களைப் பொருட்படுத்தாமல் நம் காரியத்தை நாம் பார்க்கவேண்டும்.

க. கணேசன், பெட்டாலிங் ஜெயா

கே: வாசகர்களின் குறை நிறைகளை வெளிப்படுத்தும் கேள்விகளுக்குத் தாங்கள் பதிலளிக்கையில் "சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்களும் நிறுவனங்களும் தக்க நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறோம்" என்று சொல்வதுடன் நிறுத்திக் கொள்வீர்களா? அல்லது பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் தாங்களும் நேரடித் தொடர்பு கொள்வதுண்டா?

ப: அவசியமான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அமைப்புக்களிடம் தொடர்பு கொள்வதும் உண்டு.

சரோமணியம், பிஞ்சி தோட்டம், பேரா

கே: நம் பிரதமர் எப்போது எங்குப் பிறந்தார்?

ப: நம்முடைய பிரதமர் டத்தோ ஹுசேன் ஒன் 1922-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 22-ஆம் தேதி ஜொகூர்பாருவில் பிறந்தார்.

தமிழ்ப்பாணன், தங்கா

கே "ஐயமிட்டு உண்" என்றும், "ஏற்பது இகழ்ச்சி" என்றும் முரண்பட்டு ஔவை பாடியது ஏன்?

ப: இதில் முரண்பாடு ஏதும் இல்லை. ஏற்பது இகழ்ச்சி என்னும் அறிவுரையை ஏற்க இயலாத தரித்திர நிலையில் ஒரு சிலர் இருக்கக் கூடும். அத்தகைய வறிய நிலையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்பவர்களுக்கு இட்டு உண்ணக் கூடியவர்களும் தேவை அல்லவா? அதனால்தான் இந்த இரு கட்டளைகளையும் ஔவையார் எழுதி வைத்திருக்கிறார்.

கே: சிவப்பு அடையாளக் கார்டின் விளைவால் மக்கள் இன்னல் பட்ட சமயத்தில் அவர்களுக்கு உதவும் பொருட்டு முன் வந்த இந்நாட்டு இந்திய மக்களின் பிரதிநிதி யார்?

ப: டாக்டர் பி. பி. நாராயணன்.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: வாழ்க்கையில் ஒருவனுக்கு நிம்மதி தருவது எது?



ப: படுத்தவுடன் வருகிற தூக்கம்.

கே: பணம், அன்பு இரண்டில் எதற்கு மதிப்பு அதிகம்?

ப: ஈரம் உள்ளவர்களிடம் அன்புக்கும் மற்றவர்களிடம் பணத்திற்கும் மதிப்பு அதிகம்.

ஏ. பி. பெருமாள், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பொதுவாக நகர்ப்புறங்களுக்குச் செல்லும் வாலிபர்கள் எதை அதிகம் விரும்பி ரசிக்கின்றனர்?

ப: திரைப்படங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கண்ணைக் கவரும் பேரங்காடிகள் ஆகியவற்றையே நகரங்களுக்கு வரும் வாலிபர்கள் பெரிதும் ரசிக்கின்றார்கள்.

கே: தோட்டப்புறங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் சம்பளத்தை உயர்த்தினாலும் விலைவாசியும் சேர்ந்தே உயர்ந்து விடுகிறதே! இதனால் தொழிலாளர்கள் முன்னேற முடியுமா?

ப: விலைவாசி ஏற்றம் தோட்டத் தொழிலாளர்களை மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவரையுமே திக்குமுக்காட வைத்துக் கொண்டிருக்கிறது. என்றாலும் விலையேற்றத்திற்குப் பயந்து கொண்டு மூலையில் முடங்கி உட்கார்ந்து விடக் கூடாது. இந்தச் சவாலையும் சமாளித்து முன்னேற்றம் காண்பதுதான் புத்திசாலித்தனம்.

ஏ. எஸ். சிவநேசன், பாமோல், குளுவாங்

கே. அண்ணா, புத்தாண்டில் புதிய சமுதாயத்தின் இதழ்கள் மேலும் கூடும் சாத்தியம் உண்டா?

ப: ஒவ்வொரு வாசகரும் குறைந்தது ஐந்து புதிய வாசகர்களைப் புதிய சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்பது எங்களின் புத்தாண்டுத் திட்டமாகும். எங்களின் இத்திட்டத்தை அன்பு வாசகர்கள் நிறைவேற்றுவர் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு.



புரிந்து கொள்ளணும் பெண்ணே!

—ரா. திருமலையம்மாள்,
பினாங்கு

பெண்களுக்கு இயற்கையிலேயே பல நல்ல பண்புகள் அமைவது உண்டு. இதில் அமைதியான குணமும் ஒன்றாகும்.

பெண்கள் எப்பொழுதும் அமைதியான குணம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். இந்தப் பண்பு பெண்களுக்குப் பல வகையிலும் நன்மை தரும்.

எந்த விஷயமானாலும் பெண்கள் அமைதியாக நிதானித்துச் செயல்படவேண்டும். இதனால் நிச்சயமாகத் தீங்கு ஏற்படாது. அமைதியாக இல்லாமல் பட பட வென்று செய்யும் எந்தக் காரியமும் நிச்சயமாக நமக்கு தீங்கையே விளைவிக்கும்.

பெண்கள் கூடுமான அளவு எல்லா விஷயங்களிலும் அமைதியை கடைப்பிடிக்க வேண்டும். எதிலும் அவசரம் கூடாது. இது அறிவைக் குறைத்துக் காட்டும்.

பிறர் பேசும் பேச்சை அமைதியாக கேட்கவேண்டும். அவர்கள் பேசும் பேச்சிலுள்ள நல்லது கெட்டதை புரிந்துக் கொள்ள வேண்டும். பிறர் சொல்லும் எதையும் கேட்டு அவசரத்துடன் செயல் பட்டு விடக்கூடாது. இதனால் தீமையே வந்து சேரும்.

பேச்சிலும் சரி வேறு எதிலும் சரி அமைதியாக இருக்கும் பெண்களையே பலரும் விரும்புவர். அமைதியாக இருக்கவேண்டும் என்பதற்காக பேசாமல் இருக்கவேண்டும் என்று அர்த்தம் இல்லை. பேசவேண்டிய நேரத்தில் பேசவேண்டிய விஷயத்தை அமைதியாக பேசுவது சிறப்பு.

ஆகவே பெண்களே! நாம் அமைதியான குணப்பண்பை வளர்த்து நிறைவான வாழ்க்கை வாழ்வோம்.

அன்னை

சொர்க்கம் என்பது தாயின் காலடியில் உள்ளது.

—

ஓர் அன்னை இந்த உலகில் எப்போதும் ஓர் அன்னையாகவே வாழ்ந்து மடிகிறாள்; என்றுமே அவள் தன்னை மாற்றிக்கொள்வதில்லை.

—

இந்த உலகில் மிகப் புனிதமான பொருள் ஒன்று இருக்குமானால் அது அன்னையின் இதயமாகத்தான் இருக்கமுடியும்.

தொகுப்பு: 'கிருஷ்ணா'
கோலாலம்பூர்.

பட்டாணி சோள மசாலா

தேவையான பொருட்கள்:

3 சோளக் கதிர், 1 கோப்பை உரித்த பச்சைப் பட்டாணி, 1 பெரிய தக்காளிப் பழம், 2 பெரிய வெங்காயம், 1 துண்டு இஞ்சி, பூண்டுப்பல் 3, ½ தேக்கரண்டி மஞ்சள் தூள், ½ கரண்டி கரம் மசாலா தூள், 2 தேக்கரண்டி மிளகாய்த்தூள், ½ மேஜைக் கரண்டி கசகசா, ½ கோப்பைத் தயிர், தேவையான அளவு உப்பு, வதக்குவதற்கு எண்ணெய்.

அலங்கரிக்க: சிவப்பு முள்ளங்கி.

செய்யும் முறை:

சோளக்கதிர்களை வேக வைத்துத் சோளமணிகளை உதிர்த்து எடுத்துக்கொள்ளவும். தக்காளிப் பழங்களைக் கொதிக்கும் நீரில் 2 நிமிடங்கள் போட்டு எடுத்து தோலை உரித்துசாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும். வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். இஞ்சி, பூண்டு, மஞ்சதூள், கரம் மசாலத்தூள், மிளகாய்த் தூள் இவற்றை ஒன்றாகவும், கசகசாவைத் தனியாகவும் அரைத்து கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி அது காய்ந்ததும், அதில் வெங்காயத்தைக் வதக்கிக் கொள்ளவும். அத்துடன் அரைத்துவைத்துள்ள மசாலாவைச் சேர்க்கவும். மசலா வதங்கியதும் சோளம், பட்டாணி, உப்பு, தண்ணீர் நான்கையும் சேர்த்து நன்றாக வேகவைக்கவும் சோளமும், பட்டாணியும் வெந்ததும் அரைத்து வைத்துள்ள கசகசாவையும், தயிரையும் சேர்த்து 2 நிமிடங்கள் கழித்து அடுப்பிலிருந்து இறக்கவும்

முள்ளங்கியை வட்டமான துண்டுகளாக வெட்டி அலங்கரித்து பரிமாறவும். இந்த அளவு 6 பேருக்குப் போதுமானது.

—கா. இளந்தமிழ்மாரி,
ஜோகூர்பாரு

> பெண்களால்தான் உலகம் அழியுமென்றால் தாய் ஒருத்தியால் தான் அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

கணவன் மனைவி

ஜப்பானில் கணவன்-மனைவி குறித்தும் புதுமையான ஒரு ஆய்வு நடத்திப் பார்த்திருக்கிறார்கள்.

மனைவியிடமிருந்து கணவன் என்ன எதிர்பார்க்கிறான்? கணவனிடமிருந்து மனைவி என்ன எதிர்பார்க்கிறாள்? இதுதான் அந்தப்புதுமையான ஆராய்ச்சி. இதன் வழி பல ருசிகரமான உண்மைகள் வெளியாகியுள்ளன.

கணவன் எதிர்பார்ப்பவை:

1. காலையில் அலுவலகத்துக்குப் புறப்படும்பொழுது மனைவியும் குழந்தைகளும் வாசல்வரை வந்து வழி அனுப்ப வேண்டும்.

2. கருத்து வேற்றுமைகள் ஏற்படும் விஷயத்தில் மனைவி விட்டுக்கொடுக்க வேண்டும்.

3. சம்பளத்தில் பாதியைக் கைச்செலவுக்கு எடுத்துக் கொள்ள மனைவி அனுமதிக்க வேண்டும்.

4. ஞாயிற்றுக்கிழமைகளில் தன்னைக் காலையில் அதிக நேரம் தூங்க விட வேண்டும்.

5. தாய் வீட்டுக்கு மனைவி அடிக்கடி போகக்கூடாது.

மனைவி எதிர்பார்ப்பவை:

1. சமையல் நன்றாக இருக்கிறது என்று கணவன் புகழ வேண்டும்

2. கடைகளுக்குக் கணவனும் தன்னுடன் வரவேண்டும்.

3. தனக்குப் பிறந்தநாள் பரிசு அளிக்க வேண்டும்.

4. தனக்குப் பிடித்தமான டெலிவிஷன் நிகழ்ச்சிகளைக்கணவன் நினைவு படுத்த வேண்டும்.

5. உறவினர், நண்பர்கள் முன்னிலையில் தன்னைக் கணவன் புகழ்ந்து பேச வேண்டும்.

6. "அந்தப் பெண்ணைவிட நீ இளமையோடு இருக்கிறாய். உன் கொள்ளை அழகு என்னைக் கவர்கிறது" என்று மற்றப் பெண்களுடன் ஒப்பிட்டு, தன் கணவன் அடிக்கடி பாராட்ட வேண்டும்.

பத்துமலையில்

தண்ணீர் வசதி போதவில்லை

பேட்டி: மனோ

அண்மையில் நடந்து முடிந்த பத்துமலை தைப்பூசத் திருவிழாவிற்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களில் தொடர்ந்து பல ஆண்டுகளாக தைப்பூசத்தைக் கண்டு வரும் மூன்று திருமதிகளைச் சந்தித்தோம். இவ்வாண்டுப் பூசத்தில் தங்களைக் கவர்ந்தவற்றையும் கவராதவற்றையும் அவர்கள் கூறினார்கள்; அவர்களின் கருத்து மலர்கள் இவை:

● "நம்ம நாட்டுப் பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் அவர்களைப் பத்திரிக்கைகளிலும் டி.வி.யிலும் தான் பார்த்திருக்கிறேன் இவ்வாண்டு பிரதமர் தைப்பூச விழாவிற்கு வந்திருந்த போது தூர இருந்தாலும் அவரை நேரில். பார்க்க முடிந்தது. அது என்னை மிகவும் கவர்ந்தது.



கவராதது என்று சொன்னால் தண்ணீர் வசதி போதவில்லை. தண்ணீர் இல்லாமல் மக்கள் ரொம்ப கஷ்டப்பட்டு விட்டார்கள். குகைக்கு உள்ளே முருகனுக்கு அர்ச்சனை செய்ய நம்ம பெயரைச் சொல்லி ஒரு பையைக் கொடுத்தால் அர்ச்சனை செய்துவிட்டு வேறு பையைக் கொடுத்துக் குழப்பிவிட்டார்கள். அது மனதுக்கு என்னவோ போல இருந்தது இதனை தவிர்க்க ஒரு நல்ல வழி காணுவது முக்கியமென்று நினைக்கிறேன்!" என்று கூறினார் கோலக்கிள்ளான் திருமதி ரதிதேவி கிருஷ்ணன்

● "நான் சுமார் 14 ஆண்டுகளாக தொடர்ந்து இங்கப் பத்துமலைக்கு தைப்பூச விழாவுக்காக வந்துகொண்டிருக்கிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மக்களுக்குப் பல வசதிகளை நிர்வாகஸ்தர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். பொது விடுமுறையைப் பற்றி நம் நாட்டுப் பிரதமர் உடனடியாக ஒரு நல்ல செய்தியை அளிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஏமாற்றம்தான்! அதோட பத்துமலை குகைக்கு உள்ளே பக்தர்களும் காவடி எடுப்போர் கூட்டமும் கலந்து விடுவதால் குழந்தைகளை வைத்திருப்பவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இதனைச் சமாளிக்க ஒரு புது வழி கண்டால் நல்லது" என்று கூறினார் கோலாலம்பூர் செராஸ் திருமதி ராஜேந்திரன் வள்ளி.

● "இந்த வருஷம் தைப்பூசத்தில் பெரிய அலகுக் காவடிகள் எடுப்பதை நம் பக்தர்கள் குறைத்திருப்பதை கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். ஆசிரியர் முருகு அவர்கள் எழுதியிருப்பதைப்போல மற்றவர்கள் பார்த்து பரிகசிக்கிற மாதிரி காவடி எடுக்கும் பக்தர்களும் அவர்களைச் சூழ்ந்து செல்பவர்களும் கண்டகண்டபடி ஆடுவதையும் சமயத்திற்குப் புறம்பான டப்பாங்குத்துப் பாட்டுக்களை பாடுவதையும் தவிர்க்கவேண்டும். நம் இந்து சமய நெறி முறைகளை நாம்தான் பாதுகாக்கவேண்டும். போக்குவரத்து நெறிசல் ஆண்டுக்கு ஆண்டு தொல்லையாகவே இருக்கிறது. இதற்கு ஒரு மாற்றுவழி செய்தால் நல்லது" என்று கூறினர் கோலாலம்பூர் கிள்ளான் ரோட்டைச் சேர்ந்த திருமதி நவநீதம்.



உலகத்தில் வெளியாகும் பேச்சுகளில் ஒன்பது பங்கு பெண்களின் பேச்சு! ஒரு பங்கு ஆண்களின் பேச்சு!!

—பாபிலோனியப் பழமொழி

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

வே. பா. நாதன, பீடோங், கெடா

கே: தெய்வப்புலவர் திருவள்ளுவரின் தாய் தந்தையர், ஆதி-பகவன் என்று கூறுவர். ஆக அவர் அருள் செய்த முதல் குறளான

அகரமுதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே-உலகு
(குறள்)

என்னும் குறளுக்கு உண்மையான பொருள் என்ன என்பதை விளக்கமாகத் தெரிவிக்கவும்.

ப: திருவள்ளுவரின் பெற்றோர் ஆதி-பகவன் என்பது கதையே! இக்குறளில் வள்ளுவர் ஆதி-பகவன் என்று குறிப்பிடுவது கடவுளை என்பது அறிஞர் கருத்து. "எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதன்மையாக உடையன. உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டது" என்பது இதன் பொருள். வாலறிவன் மலர்மிசை ஏகினன், இறைவன் எனப் பின்னர் அவர் குறிப்பிடுவதும் இதனை உறுதிப்படுத்தும்.

அ. முருகேசு, ஜோகூர் லாபீஸ் தோட்டம், ஜோகூர்

கே: "மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன், கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரில் பாண்டிக் கொடுமுடி, நற்றவா, உனை நான் மறக்கினும் சொலும் நா நமச்சிவாயவே!"

இப்பாடலின் கருத்து எனக்கு விளங்கவில்லை. விளக்கம் தெரிவிப்பீர்களா?

ப: ஏழாம் திருமுறையில் காணப்படும் சுந்தரர் பாடிய பாடல்களுள் இது ஒன்று. "கற்றவர் வணங்கித் துதிக்கும் துறையூரில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடி கோயில் கொண்டுள்ள நல்ல தவ வடிவினனே! எனக்கு வேறு துணையில்லாதவாறு உன்னையே மனத்தில் துணியப் பெற்றேன். அதனால் இப்பிறவி எடுத்து, இனிப் பிறவாத தன்மையும் அடையப் பெற்றேன். நான் உன்னை மறந்தாலும், எனது நா எப்போதும் உன் திருப்பெயராகிய "நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்தைக்கூறிக் கொண்டிருக்கும்" என்பது இப்பாடலின் பொருள்.

கே: சமயம் வளர இலக்கியம் துணைபுரிந்ததா? அல்லது இலக்கியம் வளரச் சமயம் துணை புரிந்ததா?

ப: சமயத்தால் இலக்கியம் வளர்ந்தது; இலக்கியத்தால் சமயம் வளர்ந்தது. ஆழ்வார், நாயன்மார் பாடல்கள் முதல் இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் வரை இந்த உண்மையைக் காணலாம்.

க. கிருஷ்ணன், தெலுக்கான்சன்

கே: திருவள்ளுவருக்கு வேறு ஏதேனும் பெயர்கள் உண்டா?

ப: நாயனுர், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் ஆகிய பெயர்களும் தமிழுலகில் திருவள்ளுவரையே குறிப்பிடுகின்றன.

கே: திருக்குறள் எந்த எந்தப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது!

ப: முப்பானூல், உத்தர வேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை ஆகிய பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகின்றது.

இல. இரமேஷ், பிரிக்பீல்ட்ஸ், கோலாலம்பூர்


கே: இராமாயணம் நமக்கு உணர்த்தும் உண்மைகளை முக்கியப் பாத்திரப் படைப்புக்களின் குண இயல்புகளின் வாயிலாக விளக்கவும்.

ப: எவ்வளவு பெரிய கேள்வியை எவ்வளவு சுலபமாகக் கேட்டு விட்டீர்கள்? சுருங்கக் கூறினல் அறத்திற்கும் மறத்திற்கும் நடக்கும் போரே இராமாயணம் எனலாம். அறத்தின் வடிவமாகவே இராமன் படைக்கப்பட்டுள்ளான். எவ்வளவு பக்தி இருப்பினும், வீரம் இருப்பினும், பிறநண்ங்கள் இருப்பினும் பிறன் மனை நயத்தால் மீட்சியே இல்லை என்பது இராவணன் மூலம் உணர்த்தப்படும் படிப்பினை.

கே: ஐம்பெருங் காப்பியங்கள் உணர்த்தும் உண்மைகள் யாவை? சிலப்பதிகாரம், மணிமேகலை இவற்றைத் தவிர்த்து எஞ்சிய மூன்று காப்பியங்களான சீவகசிந்தமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியன பற்றி தற்காலத்தவர் பரவலாகப் பேசாதது ஏன்?

ப: நிலையில்லாத வாழ்க்கையைப் பயனுள்ள வாழ்கையாக மாற்றிக்கொள்ளும் வழியையே தமிழ்க்காப்பியங்கள் பொதுவாகக் கூறுகின்றன எனலாம். அரசியலில் பிழை செய்தவர்களை அறக்கடவுள் கொல்லும், பத்தினித் தெய்வத்தை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினையினை வெல்ல முடியாது ஆகியவை சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகள். அவ்வாறே மணிமேகலை, குண்டலகேசி வளையாபதி, சீவகசிந்தாமணி ஆகியவையும் சில உண்மைகளை அறிவுறுத்துகின்றன.


சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டும் கதைத் தொடர்பு உடையவை என்பதுடன் முதலில் தோன்றிய காவியங்கள். வளையாபதியில் அறுபத்தாறு பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. குண்டலகேசி ஒரு பௌத்த காவியம். சீவகசிந்தாமணி ஒரு சமணகாவியம். கதைத் தலைவனான சீவகன் எண்மரை மணந்த கதையை இக்காவியம் கூறுகிறது. நடைமுறை வாழ்க்கைக்கு உதவும் உண்மைகள், சுவையான கதை, காவிய நயங்கள்- இவை அனைத்திற்கும் மேலாகப் பல ஆண்டுகள் தமிழறிஞர் இவற்றைப் பல வகையிலும் பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் ஆகியவை சிலம்பு, மேகலை ஆகிய இரண்டையும் அதிகம் தெரிய வைத்துள்ளன. எனினும் சீவகசிந்தாமணியும் இலக்கிய உலகில் நன்கு போற்றப்படுகின்றது.



பிரமிளா - லட்சுமி லடாய்

'வாழ்வு என் பக்கம்" படத்தில் சிறப்பாக நடித்திருந்த நடிகை லட்சுமியை நேரில் போய் வாழ்த்துக்கூற அண்மையில் சத்தியா ஸ்டுடியோவுக்கு நடிகை பிரமிளா சென்றிருந்தார்.

இவருடைய பாராட்டுக்கு ஆங்கிலத்தில் "தெங்ஸ்" கூறிவிட்டு அலட்சியமாக சென்றுவிட்டாராம் லட்சுமி. அதற்காக பிரமிளா மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டுள்ளார்.



தேன் நிலவு

"காதல் இளவரசன்" கமலஹாசன் அழகு ராணி வாணி கணபதியை எதிர்வரும் மே மாதம் 5ந் தேதி காதல்மணம் புரிந்துகொள்ளவிருக்கிறார். மேல்நாட்டு மருமகள் திரையில் இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து நடித்திருக்கிறார்கள். திருமணம் முடிந்ததும் ஜப்பான் அல்லது சுவிட்சர்லாந்துக்கு சென்று "தேன்நிலவு" அனுபவிக்க இப்போதே ரெடியாகிவிட்டார்களாம்.


ஜனார்த்தனன் மனைவி கௌரி சரியான அசடு! அந்த அசட்டுப்பெண்ணின் அப்பாவிக் குணத்தைத் தன் சுய நலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறாள் கருநாகத்திற்கொப்பான சிங்காரி!

சிங்காரி சொல்லிக் கொடுத்ததைப் போலவே ஓட்டல் அறை ஒன்றில் இருந்த நகைப் பெட்டியை கௌரி கடத்திய போது, அவள் தலையின்மீது பலமான அடி விழுகிறது! தலையில் ரத்தம் சொட்டச்சொட்ட எப்படியோ அங்கிருந்து தப்பி தட்டுத்தடுமாறி தன் வீட்டை அடைந்து, ஹாலின் மத்தியில் இருந்த அந்த சாய்வு நாற்காலியில் விழுகிறாள். விழுந்த ஒருசில கணங்களில் அவள் ஆவி பிரிந்து விடுகிறது.

ஆவிதான் பிரிந்ததே யொழிய, அவளிடைய கூரிய, அழகான, அப்பாவித்தனங்கள் நிரம்பித்ததும்பும் பால் விழிகள் அப்படியே விழித்தபடிதான் இருந்தன! அந்த பொம்மை விழிகளில் ஒளியில்லை! உள்ளத்தை நெகிழவைக்கும் இந்தக் காட்சி "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" படத்தில் வரும் உச்சக்கட்டக் காட்சியாகும்! இந்தக் காட்சியில் கௌரியாக ஸ்ரீதேவியும், ஜனார்த்தனனாக சிவகுமாரும் உணர்ச்சிகளைக் கொட்டி மிகச் சிறப்பாக நடித்துள்ளார்கள்.



"என்னம்மா சௌக்கியமா, எப்படி இருக்குது மனசு?" என்று வாணிஸ்ரீயை விசாரிக்கிறாரோ கிருஷ்ணராஜு? பாரத் பிக்சர்ஸ் இன்னும் பெயரிடாமல் தயாரித்து வரும் புதுப்படத்தில் இக்காட்சி இடம் பெறுகிறது.



22. வடக்கு மேட்டில் நடந்தது

வடக்கு மேட்டின் செங்குத்தான மண் குன்றின் மேல் நடப்பட்டிருந்தன, வ்ரிசை வரிசையாக ரப்பர் மரங்கள். குன்றின் மறு பக்கத்துச் சரிவில் ஓர் அடர்ந்த காடு. அந்தச் சூழ் நிலையில் நாள்தோறும் செல்லம் நானூறு மரங்களில் பாலெடுத்தாக வேண்டும். சம வெளித் தோட்டமாக இருந்தால் கால் வலி எடுக்காது. குன்றில் ஒவ்வொரு வரிசைக்கும் அவள் ஏறி இறங்கிப் பால் மரப் பட்டையைக் கீறி விடவேண்டும்; பிறகு பால் சேகரிக்க வேண்டும். வடக்கு மேடு வட்டமான வடிவில் அமைந்திருந்ததால், அக்கம் பக்கத்தில் பால் எடுப்பவர்களும் கண்களில் படமாட்டார்கள். இருள் நிறைந்த நடுக்காட்டின் பயங்கரத் தனிமையில் விடப்பட்டவள் போல் உணர்ந்தாள் செல்லம்.

ஒவ்வொரு நாள் பொழுது போவதும் ஒரு யுகமாகத் தோன்றியது. கைகளிலும் கால்களிலும் கணுவுக்குக் கணு வலி எடுத்தது செல்லத்துக்கு. ஒருநாள் திடீரென்று அங்கேயே எழுந்து நடக்க முடியாதபடி விழுந்தாலும் விழுந்து விடுவோமோ என்று கூட நினைத்தாள் அவள். உடம்பிலே துளிக்கூட வலுவில்லாத நிலையில் உள்ளத்தின் உறுதியால்தான் அவள் நடமாடி வந்தாள். அந்த உறுதியாக அவளுக்குள் விளங்கியவன் கணேசன். சிரம்பானில் அவனுக்குப் பெட்ரோல் பங்கில் வேலை கிடைத்துவிட்ட செய்தி இரண்டு நாட்களுக்கு முன்பு அவளுக்குக் கிடைத்தது. எப்படியாவது இன்னும் கொஞ்சம் நாள் பல்லைக் கடித்துக் கொண்டு நடமாடினால் போதும். அவளுக்கு இந்தத் தோட்டத்திலிருந்தே விடுதலை கிடைத்து விடும். "ஆனா அது வரையிலே இந்த உடம்பும் உசிரும் தாங்கணுமே!" என்று அவள் கவலைப் பட்டாள்.

தன்னுடைய அண்ணி முனியம்மா தனக்குச் செய்த போதனையை நினைத்தபோது செல்லம் மாவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. காறித் துப்பிவிட்டு அடுத்த மரத்தை நோக்கி நடந்தாள். மரப்பட்டையில் கத்தியை வைத்துக் கீறி விட்டாள். அவள் நெஞ்சிலிருந்து உதிரம் பீரிட்டுக் கொட்டுவதுபோல் மரத்திலிருந்து பால் பீரிட்டுப் பாய்ந்தது. யந்திர கதியில் அவள் கால்கள் தள்ளாடித் தடுமாறி அடுத்த மரத்தை நாடி நடந்தன.

"நீ எதுக்காக வடக்கு மேட்டுக்குப் போய் உசிரை விடணும்? "டிரஸ்ஸரை"யா சொன்னதைக் கேட்டாத்தான் என்ன கேட்டுப் போச்சு? அவர் தயவுக்காக எத்தனையோ பேர் காத்துக் கிடக்கிறப்ப, நீ இப்படி அவரை அவமதிச்சிட்டேன்னு, நாம எப்படி இங்கே பொளைக்கிறது? வாயிலே வயித்திலே எதுவும் வந்திட்டாலும் அவர் அதைக் கலைச்சுடுவார் "

"அண்ணி!" என்று வெறி பிடித்தவள் போல் கத்தினாள் செல்ல ். டிரஸ்ஸர் மாதவனைப் பற்றி அதுவரையில் அவள் தன் அண்ணியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பிறகு எப்படி முனியம்மாளுக்கு இந்த விஷயம் தெரிந்தது? மாதவனைத் தவிர வேறு யாருமே அவளிடம் இதைச் சொல்லியிருக்க முடியாது.

"இப்படி நீ வடக்கு மேட்டிலே போய்ச் சாகிறதைப் பார்த்தா எனக்கே பாவமாயிருக்கு. ஒரே ஒரு வேளை நீ அவர் சொல்லறபடி நடந்துக்கிட்டாப் போதும். இந்தத் தோட்டத்துக் கிராணிங்ககிட்ட, ஏன் துரை கிட்டகூட, எவ்வளவு செல்வாக்கு இருக்குன்னு உனக்குத் தெரியுமா?"

"இந்தப் பிறவியிலே அது நடக்காது."

"இதோ பார், நான் சொல்றதைக் கேக்கலேன்னா, அதனாலே உனக்கு மாத்திரமில்லே, எனக்கும் உங்க அண்ணனுக்குமே தொல்லை வரும். நம்ப மூணு பேரு பொளைப்பும் கெட்டுப் போகும். எப்பவாவது உன்னைத் தனியாப் பார்க்க வந்தார்னா அவர்கிட்ட கொஞ்சம் சிரிச்சுப் பேசு."

ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் பேசக்கூடிய பேச்சாக அது செல்லத்துக்குத் தோன்றவில்லை. தன்னுடைய அண்ணி முனியம்மா அப்படி ஒன்றும் யோக்கியமானவள் அல்ல என்பது செல்லத்துக்குத் தெரியும். குடிகாரனுக்கு வாழ்க்கைப் பட்டது அவளுடைய ஊதாரித் தனத்துக்கு ஒரு சாக்காகப் போய்விட்டது.

இடைவேளைக்குச் சற்று முன்னால், தன் வேலையை முடித்துவிட்டு முத்து அங்கே வந்தான். எழுபது எண்பது மரங்கள் செல்லத்துக்குப் பாக்கியிருந்தன. மளமளவென்று வேலையில் இறங்கினான் முத்து. செல்லமும் அவனைக் கண்ட உற்சாகத்தில் தன் மன வேதனையையும் உடல் வலியையும் மறந்தாள். இருவரும் சேர்ந்து மரம் வெட்டி முடித்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். தான் கொண்டு வந்திருந்த பாத்திரத்திலிருந்து கொஞ்சம் சோற்றையும் கறியையும் எடுத்து அவள் பாத்திரத்தில் வைத்தான். மேலும் வைக்கப்போனவனிடம், "போதும் அண்ணா!" என்று அவள் தடுத்து நிறுத்த வேண்டியிருந்தது.

சாப்பிட்டுக் கொண்டே செல்லம் சொன்னாள்; "அடுத்த சன்மம்னு ஒண்ணு இருந்திச்சின்னா அப்ப நான் வந்து உங்களுக்கும் பாலு சாருக்கும் தங்கச்சியாகப் பொறக்கணும். அதுதான் என்னோட ஆசை."

"இந்தச் சன்மத்திலியே நீ எங்களோட தங்கச்சிதான். எங்க வீட்டுச் செல்லத்தைப் போலே நீயும் ஒரு செல்லம். நீ எதுக்கும் கொஞ்சங்கூடக் கவலைப்படாதே நாங்க இருக்கிற வரைக்கும் உனக்கு ஒரு கஷ்டமும் வராது"

நன்றிப்பெருக்கால் செல்லத்தின் உள்ளம் அப்போது பொங்கி வழிந்தது. அவள் கண்களில் முத்துவின் மீபச்சு ஆனந்

தக் கண்ணீர் தளிர்விடச் செய்தது. அவள் வாழ்க்கையில் அப்படிப்பட்ட சகோதர பாசத்தின் வெளியீட்டை அவள் ஒரு முறை கூட உணர்ந்ததில்லை.

நேரமாகியது. ஓட்டமும் நடையுமாகத் தன் வேலைக்கு முத்து கிளம்பிவிட்டான்.

உண்ட களைப்புத் தீர்ந்தவுடன் செல்லமும் மேட்டின் அடிப்பாகத்தில் தொடங்கி, பால் சேகரித்துக்கொண்டே மேலே வந்துகொண்டிருந்தாள். சுற்றிலும் ஆட்சிசெய்து கொண்டிருந்த தனிமையின் பயங்கரத்தை அவள் அப்போது உணரவில்லை. வானத்தில் மேகமூட்டம் இருந்தால் தோட்டம் வழக்கத்தைவிட இருண்டுகிடந்தது. எங்குமே ஆள் அரவம் இல்லை. திரும்பிய பக்கமெல்லாம் வரிசை வரிசையாக மரங்கள். காற்றின் சலசலப்புக் கூட இல்லை.

திடீரென்று காட்டுப் பக்கத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

"செல்லம்!"

தூக்கிவாரிப் போட்டது செல்லத்துக்கு. அது நிச்சயமாக முத்துவின் குரல் அல்ல. வேறு யாரும் மேற்பார்வை செய்ய வருவதாக இருந்தால் கீழ்ப் பக்கத்திலிருந்துதான் அவர்கள் வருவார்கள்.

மிரண்டு போய்க் காட்டின் பக்கம் குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தாள் செல்லம். அங்கே டிரஸ்ஸர் மாதவன் நிதானமாக அடிமேல் அடி வைத்து நடந்து வந்து கொண்டிருந்தார். தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு வந்து மறு பக்கத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வருகிறாரோ? மோட்டார் சைக்கிளின் சத்தமே கேட்கவில்லையே!

வேர்த்துக் கொட்டியது செல்லம்மாவுக்கு. கையிலிருந்த பால் கிண்ணம் தரையில் விழுந்தது. நிலைகுத்திய பார்வையுடன் வெலவெலத்துப்போனாள்.

"பயப்படாதே செல்லம். நான் என்ன கரடியா, புலியா? உன்னோட அண்ணி முனியம்மா உங்கிட்ட சொல்லியிருக்குமே! நாளையிலேயிருந்தே நீ இந்த வடக்கு மேட்டிலே வேலை செய்ய வேண்டாம்" பேசிக்கொண்டே செல்லத்திடம் நெருங்கி வந்தார் மாதவன்.

அவர் பேச்சு எதுவுமே செல்லத்தின் காதுகளில் விழவில்லை. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு. அதற்குள் அவளுக்கு மிகவும் அருகில் மாதவன் வந்துவிட்டார். எட்டி அவளுடைய வலது கரத்தை மெல்லப் பற்றினார்.

அவ்வளவு தான்.

தன்னுடைய பலம் எல்லாம் சேர்த்து, "ஐயோ, அண்ணா! அண்ணா!" என்று அந்த வடக்கு மேடே எதிரொலிக்கும்படி குரல் கொடுத்தாள் செல்லம். நாலைந்து முறை உயிரைப் பிடித்துக் கொண்டு கத்திவிட்டாள்.

தன்னுடைய ஸ்பரிசத்தில் எல்லாப் பெண்களுமே துவண்டு விழவேண்டுமென்று எதிர்பார்ப்



பார் மாதவன். இது அவருக்கு வழக்கத்துக்கு மாறான அநுபவமாய்த் தோன்றியது. அவள் குரலைக் கேட்டு எந்த அண்ணன் அங்கே வரப்போகிறான்? யாரும் அங்கே வரக்கூடும் என்று அவர் நினைக்கவில்லை. எதற்கும் பாதுகாப்பாக அவள் வாயைச் சட்டென்று பொத்தினார். அவள் திமிறிக்கொண்டு காட்டுப்பக்கம் ஓட முயன்றாள். பயப்பிராந்தியில் அவளால் எதையும் நினைத்துப் பார்த்துச் செய்ய முடியவில்லை. ஓடுவதற்கு அவள் கால்களில் தெம்பும் இல்லை. மூர்க்கத்தனமாக ஓடிப் போய் அவளைப் பற்றி இழுத்து, அவள் முகத்தைத் தன் மார்பில் அழுத்திக்கொண்டார் மாதவன். பிறகு அவளைக் கீழே தள்ளினார்.

அவள் மேலே விழுந்து அவளைப் பற்றிக் கொண்டார்.

செல்லம்மாவுக்கு வெறி பிடித்து விட்டது. அவர் நெஞ்சைக் கடித்தாள்; கையைக் கடித்தாள்; திமிறினாள்; புரண்டாள்; தப்பித்துக் கொள்ள முயன்றாள்.

மாதவனுடைய வெறிக்கு அவ்வளவு எளிதாக அங்கே வெற்றி கிடைக்காதுபோல் தோன்றியது. புலியின் பிடியில் அகப்பட்ட மானின் நிலையில் இருந்தாலும், புலியின் வாய்க்குள் தன் கொம்பை விட்டுத் தப்ப முயலும் கலைமானாக அவள் மாறியிருந்தாள். தன் உயிர் போனாலும் போகட்டும் என்ற பிடிவாதமே அவளிடம் தலை தூக்கியிருந்தது. உயிரே போனாலும் மானம் போய் விடக்கூடாது.

இந்தப் போராட்டத்தில் அங்கே கேட்ட காலடி ஓசையை அவர்கள் இருவருமே கவனிக்கவில்லை.

வேர்க்க விறுவிறுக்க அங்கு அவள் குரல் கேட்டு ஓடி வந்த முத்து, நொடிப்பொழுதில் நடப்பைப் புரிந்து கொண்டான். அதன் பிறகு அவன் "சாது"வான முத்துவாகவோ "சாமியார்" முத்துவாகவோ இருக்கவில்லை; முரடன் முத்துவாக மாறிப் போனான். விசுவரூபமெடுத்து ராவணனின் தலைநகரை அழிக்க முற்பட்ட ஆஞ்சநேயராகி விட்டான். மாதவனின் தலைமயிரைப் பற்றி இழுத்து, அவர் பிடியிலிருந்து செல்லத்தை விடுவித்து முதுகுப் புறம் தரையில் படியும்படி அவரைத் தள்ளிவிட்டு அவர் நெஞ்சின் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். இரண்டு கைகளும் ஓயும் வரையில் அவர் முகத்தில் மாறி மாறி அறைந்தான். மாதவனின் மூக்கு வழியே ரத்தம் கொட்டத் தொடங்கியது. வாய் கிழிந்தது.

"இதே இடத்திலே உன்னைக் கொலை செஞ்சு போட்டிடுவேன். உன்னோட பொண்டாட்டிக்காகவும் உன்னோட பிள்ளைங்களுக்காகவும் உனக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கிறேன்னு வச்சுக்க. தோட்டத்திலே இருக்கிறவன் தங்கச்சியெல்லாம், பொண்டாட்டியெல்லாம், உன்னோட பொண்டாட்டிங்கற திமிரா உனக்கு?"

மாதவனின் மார்பைவிட்டு நிதானமாக எழுந்தான் முத்து. கைகளில் பட்டிருந்த ரத்தக் கறையைப் பக்கத்திலிருந்த மரத்தில் துடைத்துக்கொண்டான். கண்களில் அனல்கக்க மாதவனை உற்றுப் பார்த்தான். மாதவனின் நிலை அப்போது பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அவரால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. அவர் கையைப் பற்றி இழுத்துத் தூக்கிவிட்டான்.

"போ! சீக்கிரம் போய், எதையாச்சும் பொய் சொல்லி என்னைப்பத்திப் போலீசுக்குப் புகார் கொடு. நான் எதுக்கும் தயாராத்தான் இருக்கேன் போ!"

அதற்குள் அங்கே சிறு கூட்டம் கூடிவிட்டது. வடக்கு பேட்டில் வேலை பார்த்த தொழிலாளர்களில் பத்துப் பதினைந்து பேர் அங்கே குழுமிவிட்டனர். நடந்ததைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் ஆகவில்லை. அவர்கள் எல்லாருக்குமே உள்ளுக்குள் ஓர் ஆனந்தம். பலருடைய வாழ்க்கையைப் பாழாக்கிய ஒருவனுக்கு இன்று தண்டனை கிடைத்துவிட்டதல்லவா?

"உங்க வேலையை முடிச்சுட்டு, யாராச்சும் ரெண்டு பேர் எங்க மரத்துப் பாலையும் எடுத்து நிறைக்கு அனுப்புங்க. நான் கொண்டு போய்த் தங்கச்சியை வீட்டிலே விட்டுவிட்டு வர்ரேன்."

"நாங்க கவனிச்சுக்கறோம். நீ போ" என்றார்கள் ஒருமித்த குரலில்.



செல்லம் அவமானத்தால் கூனிக் குறுகியபடி முத்துவின் பின்னால் நடந்தாள். முத்து "கவலைப்படாதேம்மா. கவலைப்படாதே" என்று அவளைத் தேற்றிக்கொண்டு வந்தான்.

"அண்ணா, என்னாலே உங்களுக்கு எவ்வளவு கஷ்டம் அண்ணா!" செல்லத்தின் குரல் தழு தழுத்தது.

"நான் ஏதாச்சும் என் மனசுக்குப் புடிச்ச ஒரு காரியம் செஞ்சிருக்கேன்னா, இன்னிக்கு அந்த மன்மதப் பயலை வாட்டி எடுத்ததுதான்!"

"அவன் உங்களை என்ன செய்வானோன்னு எனக்குப் பயமா இருக்கண்ணா!"

"போலீஸ்லே சொல்லுவான். போலீஸ் கிட்டே எனக்குக் கொஞ்சம் உதை கிடைக்கும். வாங்கிக்க வேண்டியதுதான் பிறகு ஜெயிலுக்குள்ளே தள்ளுவாங்க. போயிட்டு வந்தாப் போச்சு."

எதைப் பற்றியும் கவலைப்படாதவன் போல் முத்து உற்சாகத்தோடு பேசிக்கொண்டே வந்தான். அவனே வாய்விட்டுச் சொன்னபடி தான் ஒரு நல்ல காரியம் செய்துவிட்ட பெருமிதத்தில் அவன் மனம் பூரிப்படைந்திருந்தது. அந்த

நேரத்தில், தான் அங்கே வர முடியாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ!

செல்லத்தின் வீட்டில் அவளைக்கொண்டுபோய்விட்டுவிட்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்களிடம் நடந்தைச் சொல்லி அவளைக் கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். ஒரு பையனைச் சிரம்பானுக்கு அனுப்பிக் கணேசனுக்குத் தகவல் கொடுக்கச் சொன்னான். தன் அண்ணன் பாலனுக்கும் செய்தி அனுப்பி விட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

சமவெளியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் வீட்டுக்குத் திரும்பும் நேரம் அது. செய்தி காட்டுத்தீ போல் பரவியது. மாதவன் நிர்வாகத்தில் சொல்லி, தொலைபேசியின் மூலமே போலீஸுக்குப் புகார் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தாராம். அவர் கொடுத்திருந்த புகாரோ விசித்திரமான புகார். தோட்டத்தில் வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலையை மறந்துவிட்டு முத்துவும் செல்லம்மாளும் தோட்டக்காட்டில் கட்டிப்புரண்டார்களாம். அதை மாதவன் தடுக்கப் போனபோது முத்து அவரை கொலைசெய்யத் துணிந்து விட்டானாம்.

பாலன், மாதவன் கட்டிவிட்ட கதையையும் கேட்டுக்கொண்டு, முதலில் செல்லத்தைப் பார்ப்பதற்காக அவள் வீட்டுக்குச் சென்றான். அதற்குள் அங்கே பெண்கள் கூட்டம் கூடியிருந்தது. அவளைச் சந்தித்து, "இங்கே உங்க அண்ணியோ அண்ணனோ ஏதாச்சும் பேசினா நீ நேரே புறப்பட்டு எங்க வீட்டுக்கு வந்திடு. நான் போய் என்னோட தங்கச்சியை இங்கே அனுப்பி வைக்கிறேன்" என்று ஆறுதல் கூறினான். அதற்குள் அவனையும் தோட்டத்து இளைஞர்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது. எல்லாருமாகப் பாலனின் வீட்டுக்குப் போனார்கள். அங்கேயும் ஒரு கூட்டம் இருந்தது. மாதவனைச் சிகிச்சைக்காகச் சிரம்பான் மருத்துவமனைக்கு அனுப்பியிருந்தார்கள்.

போலீஸ் லாரி ஒன்று தோட்டத்துக்குள் புகுந்தது. பிறகு ஒரு கிராணியை அதில் ஏற்றிக் கொண்டு நேரே முத்துவின் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது. வாயிலும் வயிற்றிலும் இடித்துக்கொண்டு வேலம்மாள் தன் மகன் முத்துவைப் பற்றிக் கொண்டு கதறினாள்.

(தொடரும்)

கலையுலக வினாவிடை

பதில்: பரிதாமணாளன்

பி. எஸ். சிம்மாதேவி, பத்தாங்காலி தோட்டம், பத்தாங்காலி

கே: நடிகை ஸ்ரீதேவியின் உண்மையான பெயர் என்ன? அவருடைய உண்மையான வயதென்ன?

ப: உண்மையான பெயர் ஸ்ரீதேவிதான். "16 வயதினிலே" படத்தில் நடித்துவிட்ட அவருக்குப் பதினைந்து வயதுதான்.

கே. முருகையா, தித்திசேரோங், பாரிட்புந்தார்

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதுவரை எத்தனைப் படங்கள் தயாரித்துள்ளார்?

ப: "புதிய பறவை", "வியட்னாம் வீடு", "தங்கப் பதக்கம்", "அண்ணன் ஒரு கோயில்" ஆகிய நான்கு படங்களைத் தயாரித்துள்ளார்.

கே: "கௌரவம்" படத்தின் கதை வசனம், டைரக்‌ஷன் பொறுப்பை ஏற்றிருந்த சுந்தரம் என்பவருடைய பெயருக்கு முன் ஏன் "வியட்னாம் வீடு" என்னும் அடைமொழி உள்ளது?

ப: "வியட்னாம் வீடு" ஒரு வெற்றிப் படமாகும். இந்தப் படத்தின் கதை வசனத்தை எழுதியவர் இந்தச் சுந்தரம்தான்.

எம். ஜி. குணசேகரன், சிலம்போ டிவிஷன், சுங்கைப்பட்டாணி

கே: எம். ஜி. ஆரின் கடைசிப் படம் "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனா", "அண்ணா நீ என் தெய்வமா?

ப: அவசரப்படாதீர்கள். எம். ஜி. ஆர். மீண்டும் நடிக்கவிருக்கிறார்.

தமிழன்பன் இராணி, கிண்டாவேலி தோட்டம், பத்துகாஜா

கே: இந்தியப் படங்களில் முத்தக் காட்சிகள் இடம்பெற அனுமதிக்கப்பட்டு விட்டதால் தமிழ்ப் படங்களிலும் அக்காட்சிகள் இடம் பெறுமா?

ப: ரொம்பக் கவலையாக இருக்கிறதா? அண்மையில் கமல ஹாசன் முதன் முதலாக முத்தக்காட்சி ஒன்றில் நடித்துள்ளார். அடுத்தடுத்து மற்றவர்களும் கொடுப்பார்கள். சொல்லப் போனால் முக்கால்வாசித் தமிழ்ப்படங்களில் முத்தக் காட்சிகள் இடம்பெறக்கூடும். எனவே கவலை வேண்டாம். இப்போது தமிழ்ப்படங்களில் வரும் சில காட்சிகளை விட முத்தக்காட்சி எந்த விதத்திலும் ரசிகர்களைப் பாதித்துவிடாது!

செல்வி பெ. சந்திரா, ஜின் செங் தோட்டம், பாகான்செராய்


கே: மறைந்த ராணி சந்திராவின் முதல் படமும் கடைசிப் படமும் "பத்ரகாளி" தானா? அல்லது வேறு எந்தப் படத்திலாவது நடித்திருக்கிறாரா?

ப: "தேன் சிந்துதே வானம்" படத்தில் தொடங்கிய அவர் திரைவாழ்வு "பத்ரகாளி"யில் முடிந்தது.

எஸ். வெங்கிடாசலம், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: முழுநீள நகைச்சுவை நாடகத்தை மலேசியாவில் யாரும் தயாரிக்கவில்லையா?

ப: தமிழகக் கலைஞர்களின் படையெடுப்பால் இங்கு நாடகம் தயாரிப்பதே குறைந்துள்ளது. இந்த நிலை மாறினால் இங்கு முழுநீள நகைச்சுவை நாடகமும் தயாரிக்க வழி பிறக்கும். இதற்கு முன்னும் முழுநீள நகைச்சுவை நாடகம் கோலாலம்பூரில் அரங்கேறியுள்ளது!



கல்லுடைப்பின் குத்தகை நிலவரம்

அண்மையில் பத்துமலை தைப்பூசத் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினோம். 1891-ஆம் ஆண்டில் தான் முதன் முதலில் இந்திய கோயில் ஒன்று இந்தப் பத்துமலையில் கட்டப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. 1930-ஆம் ஆண்டில் தான் பத்துமலையைப் பொதுமக்களின் பொழுது போக்கிற்குரிய ஓர் இடமாக FMS ஆட்சியில் (பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்) பிரகடனப் படுத்தப்பட்டது.

பத்துமலையில் நடைபெற்று வருகிற கல்லுடைப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நீதிமன்றத்துக்குச் செல்லும்படி தைப்பூசத்திற்குபிரதமர் டத்தோ ஹுசேன் ஒன் இந்த ஆண்டு பத்துமலைக்கு வருகைபுரிந்த போது ஆலோசனை கூறினார். இந்தக் கல்லுடைப்புக்குக் குத்தகையைப் பற்றி மேலும் விவரங்களை அறிய சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழு உறுப்பினரான மாண்புமிகு வி. எல். காந்தன் அவர்களை அணுகினோம். அவர் சொன்ன விவரங்கள் இவை.

1940-ஆம் ஆண்டில் தோட்டப்புறத் தொழிலாளர்களின் நன்கொடையைக்கொண்டு மகா மாரியம்மன் கோயிலில் பத்துமலையில் 272 படிகளைக் கட்டி முடித்தார்கள். முன்னாள் தொழில் வர்த்தக அமைச்சர் டான்ஸ்ரீ டாக்டர் லிம் சியூ ஒன் 1967-ஆம் ஆண்டு பத்துமலையை ஒரு முக்கிய உல்லாசப் பயணிகள் சுற்றிப்பார்ப்பதற்குரிய இடமாக அமைக்கத் துணை புரிந்தார். 1954-ஆம் ஆண்டு அரசாங்க கெஜட்டில் சில திருத்தங்களைச் செய்தார்கள். அதன்படி பத்துமலையின் Reservation பகுதியிலிருந்து சில பாகங்களை ஒதுக்கினார்கள். அதன்பிறகு தான் கல்லுடைப்புத் தொடங்கியதாகக் கருதவேண்டியுள்ளது.

இப்போது இந்த மலையில் மூன்று தனியார் நிறுவனங்களும் அரசாங்கமும் (J. K. R.) கல்லுடைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த மூன்று தனியார் நிறுவனங்கள்:

1. Kenneison Brothers
2. Dolomite Industry
3. Yahaya Quarry and Construction

இவற்றில் Yahaya நிறுவனம் அதன் நடவடிக்கையை நிறுத்தி விட்டது. Kenneison Brothers நிறுவனம் 2019-ஆம் ஆண்டிலும், டோலமைட் நிறுவனம் 1991-ஆம் ஆண்டிலும் தங்களது கல்லுடைக்கும் பணிகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அவற்றுக்கான ஒப்பந்தங்கள் கூறுகின்றன.

பத்துமலையில் கல்லுடைக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டிருக்கும் லைசென்சுகளுக்கு மாநில அரசே பொறுப்பாகும். ம.இ.கா. மகா மாரியம்மன் கோயில், பத்துமலை வட்டாரப் பொதுமக்கள் ஆகியோர் இப்பகுதிகளில் கல்லுடைப்பை நிறுத்துவதற்குக் கோரிக்கைகள் கொடுத்த பின்னர் சிலாங்கூர் மாநில அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலிக்கத் தொடங்கியது. இக்கல்லுடைப்பு, ஆலயத்திற்கு மட்டுமன்றி இங்கு வாழும் மக்களுக்கும் பெரிய இடைஞ்சலாக இருந்து வருவதை மாநில அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. ஆனாலும் அவர்களுக்கு உள்ள சிரமம் என்னவென்றால் இக்கல்லுடைப்பை நிறுத்த வேண்டுமென்றால் மேற்படி நிறுவனங்களுக்கு அரசாங்கம் பெரிய அளவில் நஷ்டஈடு கொடுக்க வேண்டிவரும். இதில் இழப்பீடு தரவேண்டிய பிரச்சனை பெரிய அளவில் எழும்பும்.

இவற்றையெல்லாம் மனதிற் கொண்டுதான் கடந்தாண்டு ஏப்ரல் மாதத்தில்ஓர் உயர் மட்டக் குழுவை மாநில அரசாங்கத்தின் துணைச் செயலாளர் தலைமையில் நியமித்து, அந்தக்குழு விஞ்ஞான தொழில் நுட்ப சுற்றுப்புறத் தூய்மை அமைச்சிலிருக்கும் சுற்றுப்புறத் தூய்மைப் பகுதியைக் காரியாலயமாகக் கொண்டு இந்தப் பிரச்சனையைத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது

சரிந்து விழும் அபாயம்

இந்தக் குழுவின் கணிப்புப் படி அங்கே இருக்கக்கூடிய காற்று, தூய்மையை மிகவும் பாதிக்கக்கூடிய அளவுக்குக் கல்லுடைப்பு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. அதாவது உலக சுகாதார இயக்கத்தின் பரிந்துரைக்கு மேல் கிட்டத் தட்ட மூன்றிலிருந்து ஐந்து

மட்டங்கு வரை சுகாதாரப் பாதிப்பு இருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல் இந்தக் கல்லுடைப்பினால் ஏற்படும் நில அதிர்ச்சியின் காரணமாக பத்துமலையில் இருக்கக்கூடிய சுண்ணாம்புக் குன்றுகள் சரிந்துவிழக்கூடிய அபாயம் இருக்கிறது.

இந்தக் கல்லுடைப்பினால் எழக்கூடிய தூசியின் காரணமாகக் கோலாலம்பூர் காராக் நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவோருக்கும், அவற்றுக்கு அருகில் வசிப்போருக்கும் கண்பார்வை பாதிப்புறும் அபாயம் ஏற்படுமெனக் கருத இடமிருக்கிறது. இவை எல்லாம் மனதிற்கொண்டு பார்க்கும்போது வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் அங்கு வருவதும் குறைந்துவிடும்.

சமீப காலங்களில் பத்துமலை வட்டாரத்தில் ஜனத்தொகை பெருகிக்கொண்டே வருகிறது. கடந்த ஆண்டு இறுதியில் அந்தப் பகுதியில் சுமார் 50 ஆயிரம் பேர் வசிப்பதாகக் கணக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆரம்பப்பள்ளிகள் தற்சமயம் அங்கு இருக்கின்றன. மேலும் இரண்டு கட்டப்படலாம். இந்த நிலையை நன்கு உணர்ந்து, கல்லுடைப்பைத் தடுப்பதென்றால் மாநில அரசாங்கம் பெரும் நஷ்டஈடு கொடுக்கவேண்டியிருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த மேல்மட்டக்குழு சில முக்கியமான பரிந்துரைகளைத் தீவிரமாக ஆலோசித்து வருகிறது

ஜே. கே. ஆர். கல்லுடைப்பு மூன்றாவது மலேசிய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அத்தியாவசியமாக இருப்பதாலும் அதைத் தடுப்பதற்கு நஷ்டஈடு மாநில அரசாங்கத்தால் கொடுக்கத் தேவையில்லை என்பதாலும் அவர்களுக்கு ஒரு மாற்று இடத்தில் கல்லுடைப்புச் செய்வதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் ஜெனிசன் பிரதர்ஸ்-டோலமைட் நிறுவனங்களுக்கும் மாற்றுக் கல்லுடைப்பு இடங்களை ஒதுக்கத் தற்சமயம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இந்த இடங்களைத் தயார் செய்து தனியார் நிறுவனங்களை அங்கு மாற்றி அனுப்புவதற்கு ஏறத்தாழ 50 லட்சம் வெள்ளி செலவிட வேண்டிவரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

முருகன் திருவருளால் எல்லாம் நல்லபடியாகவே முடியும் என்று நம்புவோமாக!

என்ன மிச்சம்?

இளைஞன் ஒருவன் புகை பிடித்துக் கொண்டிருந்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு முதியவர் அவனிடம் சென்று வினவினார்.

"தம்பி! ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட் புகைப்பாய்...?"

"குறைந்தது இரண்டு பேக்கேட் சிகரெட் புகைப்பேன்!"

"ஓ! இரண்டு பேக்கட் புகைப்பாயா? அப்படியானால் அதற்கு எவ்வளவு செலவாகும்...?"

"ஒரு வெள்ளி செலவாகும்...!"

"நாள் ஒன்றுக்கு ஒரு வெள்ளியென்றால், ஒருமாதத்திற்கு எத்தனை வெள்ளி?"

"முப்பது வெள்ளி"

"ஒரு வருடத்திற்கு?

"முந்நூற்று அறுபது வெள்ளி!"

"பத்து வருடங்களுக்கு...

"மூவாயிரத்து அறுநூறு வெள்ளி!"

"சரி, உன்னுடைய வாழ்நாளில் ஒரு ஐம்பது வருடங்களுக்கு புகை பிடித்து வருவாயானால் - எவ்வளவு செலவாகும் ?"

"பதினெட்டாயிரம் வெள்ளி வரும்!"

அந்தப் பதினெட்டாயிரம் வெள்ளியையும் நீ புகை பிடிக்காமல் சேர்த்துவைப்பாயானால் ஒரு வீடு கட்டலாம் என்பதை யோசித்துப் பார்த்தாயா...?"

முதியவர் கூறிய ஆலோசனையைக் கேட்ட இளைஞன் சற்று யோசித்துவிட்டுச் சொன்னான் "உண்மைதான்! ஆமாம்...பெரியவரே... உங்களுக்கு என்ன வயது ..?"

"எழுபது வயது...!" என்றார் பெரியவர்.

"உங்களுக்குப் புகை பிடிக்கும் பழக்கம் உண்டா...?"

"இல்லை தம்பி...!"

"அப்படியா...? இதுவரை நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்...?

இளைஞனின் கேள்விக்குப் பெரியவர் அமைதியாகப் பதில் கூறினார்.

"ஒன்றுமில்லை!"

-திருமதி கதீஜா சாகுல் ஹமீது
ஈப்போ

மணற்கேணி

இவ்வாண்டு எஸ். ஆர். பி., எஸ். பி. எம். / எம். சி. இ., எஸ். டி. பி. / எச். எஸ். சி. தேர்வு எழுதவிருக்கும் மாணவ மாணவியர், மலேசிய மொழியில் சிறப்பான தேர்ச்சிபெறும் பொருட்டு மணற்கேணி என்னும் பகுதி 25-2-1978 இதழிலிருந்து துவங்குகிறது.

குறிப்பாக மேற்குறித்த தேர்வுகளின் மலேசிய மொழிப் பாடம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கும், பொதுவாக மலேசிய மொழி தொடர்பான எல்லா விதக் கேள்விகளுக்கும் இப்பகுதியில் பதில் அளிக்கப்படும்.

மாணவர்கள் தங்கள் கேள்விகளைத் தமிழிலோ, மலேசிய மொழியிலோ எழுதியனுப்பலாம். உறையின் இடப்பக்க மூலையில் மணற்கேணி எனக் குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆசிரியர்,
புதிய சமுதாயம்,
அஞ்சல் பெட்டி எண்: 2066,
கோலாலம்பூர்.

பிப்ரவரி 11 முதல்
பிப்ரவரி 25 வரை

15 நாள் ராசிபலன்

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

இந்த ராசிக்காரர்களுக்கு யோக காலம் துவங்கியிருக்கிறது. எதிலும் இவர்கள் முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக் கொண்டு நிற்பார்கள். அதனால் சிலரின் விருப்பு வெறுப்புக்கு ஆளாக நேரும். பொருளாதாரம் தற்போதைக்குச் சுமாராகத்தான் இருக்கும். பெரியோர்களின் ஆதரவு நிறைய உண்டு. குடும்பத்தில் மங்களகரமான காரியங்கள் நடக்கலாம்.

மீனம் (பிப். 9- மார்ச்சு 20)

எல்லா நாட்களிலும் வெள்ளிக்கிழமை வராது. இந்த ராசிக்காரர்கள் அவ்வாறு எண்ணித்தான் சில காரியங்களைச் செய்ய முற்படுவார்கள். அதனால் தோல்வி கிட்டலாம். செய் தொழில் மேன்மையடையும். வியாபாரிகளுக்கு நன்மை விளையும் நேரமிது. கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

மேஷம் (மார்ச்சு 21 - எப். 20)

இரக்க உள்ளம் கொண்ட இவர்களைப் பிறர் எளிதில் ஏமாற்ற முயல்வார்கள். தனக்கு மிஞ்சித்தான் தருமம் என்னும் பொன்மொழியை இந்த ராசிக்காரர்கள் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். பெரியோர்களின் நேசம் அதிகமாகும். குடும்பத்திலுள்ள சிலருக்குச் சுகவீனம் ஏற்பட வாய்ப்புண்டு. பொருளாதாரச் சிரமங்கள் உண்டாகலாம். செய்தொழிலில் மேன்மை கிட்டும்.

ரிஷபம் (ஏப். 21 - மே. 20)

உதட்டில் உறவும் உள்ளத்தில் பகையும்கொண்டவர்களால் இவர்கள் ஏமாற்றப்படுவார்கள். எச்சரிக்கை தேவை. வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ளவிருந்தால் அவற்றை தற்காலிகமாக ஒத்திவையுங்கள் குடும்பஸ்தர்களுக்குப் பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பெரியோர்களின் ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்காது.

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

முன்பின் அறிமுகமில்லாதவர்களால் நன்மை கிடைக்கும். கூட்டு வியாபாரிகளுக்கு யோக காலம். வியாபாரிகளுக்குத் தங்கள் தொழிலை விரிவுபடுத்தும் சூழ்நிலை உருவாகும். ரேஸ், லாட்டரி போன்றவற்றில் பணம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. இந்த ராசிப் பெண்களுக்குச் சுகவீனம் ஏற்படலாம். தங்கள் தோழிகளால் வீண் விவகாரங்கள் ஏற்படும்.

கடகம் (ஜூன் 21- ஜூலை 20)

இந்த ராசிக்காரர்களின் தீவிர முயற்சிகளுக்கு ஏற்ப வெற்றி. கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்றாலும் ஐந்துக்கு மூன்று பழுதாகாது. வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. தொலை தூரத்திலிருந்து வரும் கடிதம் அல்லது தொலைபேசித் தகவல்களால் மேன்மை உண்டாகும். பெரியோர்களின் உதவிகள் சுமார். எதிர்கால முன்னேற்றத்திற்கு சில உருப்படியான அடிப்படைத் திட்டங்களை இவர்கள் மேற்கொள்வார்கள்.

சிம்மம் (ஜூலை 21 - ஆக.12)

கூட்டுத் தொழில் விருத்தி உண்டாகும் அதே வேளையில் இந்த ராசிக்காரர்களின் தனிப்பட்ட முயற்சிகள் குறைவான பலனையே அளிக்கும். நண்பர்களின் ஆலோசனை இவர்களுக்கு நன்மையைத் தரும். குடும்பத்தில் மனைவி மக்களால் தலைவலி ஏற்பட வாய்ப்புண்டு. உறவினர்களிடமிருந்து கொஞ்சம் ஒதுங்கியிருப்பது இவர்களுக்கு நல்லது.

கன்னி (ஆக. 22 - செப். 22)

இயல்பாகவே எதிலும் சுய முயற்சியும் தன்னம்பிக்கையும் உடைய இவர்களுக்கு பெரும்பாலான காரியங்கள் சாதகமாகவே முடியும். ஆனால் நண்பர்கள், உறவினர்கள், முதலானோரின் ஆலோசனைகளைத் தவிர்த்தல் நல்லது உடலாரோக்கியம் பாதிக்கலாம். வண்டி வாகனங்கள் வாங்க முயல்வர். சுருங்கச் சொன்னால் சொத்து எதுவும் சேரும் வாய்ப்பு உண்டு.

துலாம் (செப். 23-அக். 22)

பொருளாதாரச் சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகையால் நிதானமாகச் செலவு செய்யவும். கொடுக்க வேண்டியவர்கள் கொடாக் கண்டர்களாகவும், வாங்க வேண்டியவர்கள் விடாக் கண்டர்களாகவும் இருப்பார்கள். வாக்குச் சாதுரியத்தில் சில காரியங்கள் சித்தியாகும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த செய்திகள் வரும்.

விருச்சிகம் (அக். 23-நவ. 22)

மாட்டு வண்டி மாதிரி மெதுவாக ஓடிக் கொண்டிருந்த இவர்களின் முயற்சிகள், இனி மோட்டார் வண்டி மாதிரி ஓடத் துவங்கும். கடினமாக இவர்கள் உழைக்கவேண்டியிருக்கும். பெரியோர்கள் உதவி பூரணம். நண்பர்கள் உதவி சாதாரணம். குடும்பத்தினர் உதவியோ பூஜ்யம். உடல் ஆரோக்கியம் பாதிக்கும் வாய்ப்பிருப்பதால் கொஞ்சம் கவனமாக இருங்கள். கையெழுத்திடுவதில் கவனம் தேவை.

தனுசு (நவ. 23 - டிச. 20)

பெண் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இந்த ராசிக்காரர்களுக்குத் தோல்வி ஏற்படலாம். செய்தொழிலில் மேன்மை கிட்டும். சக ஊழியர்களின் உதவி உண்டு. கூட்டுத் தொழில் உபயோகம் தராது. பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். கடன் தொல்லை அதிகரிக்கும். இடி விழுந்தாலும் அடிபெயராமல் இருக்கும் மனவுறுதி இவர்களுக்கு இருப்பதால் எதையும் சமாளித்துக் கரையேறுவார்கள்.

மகரம் (டிச. 21- ஜன.19)

வீண் வாக்குவாதங்களினால் நண்பர்கள் பகைவர்கள் ஆவார்கள். பேசும்போது ஒன்றுக்கு மூன்று தடவை இவர்கள் யோசித்த பிறகு பேசுவது நல்லது. மேலதிகாரிகளின் விரோதம் வரும். வெளியாரிடம் இவர் எப்படி வாங்கிக் கட்டினாலும் வீட்டுக்குள் இவர்தான் ராஜா. அதனால் வீட்டில் அமைதி நிலவும். கடிதப் போக்குவரத்தில் நன்மையுண்டு

—தஞ்சை நகுலன்


தைப்பூசத்திற்குச் சென்று வந்தவர்கள். அன்றிரவு:—
"பிள்ளைங்கள்லாம் சரியா இருக்காங்களா?"
"ஐயோ! மூணாவது பயலைக் காணோமே!"
தகவல் இலாகா
பொன்னையா மகன் கண்ணையா உங்க மகன் சின்னையா இங்கே நெடுநேரம் அழுது கொண்டிருக்கிறான்...
நான் இன்னும் நல்லா கூட சுத்திப் பாக்கல. இன்னும் கொஞ்ச நேரம் என் பயலை வெச்சிருந்தா என்ன?



எங்குப்பா காணுமப்-
போயிட்டாரு, கண்ணடி
போட்டிருப்பாரு,
இன்னைக்குத்தான்
மொட்டை அடிச்சாரு
தகவல்
இலாகா
சமோ
பூசம்!
உங்க பிள்ளைங்க
பருல நாலு
குறையுதே?
தைப்பூசத்தில விட்டுட்டு
வந்துட்டேன்.
BUS
STOP
வேலவன்/78

பிப்ரவரி 24

கிள்ளானிலிருந்து காப்பார் செல்லும் ரோட்டிலுள்ள "பாத்தாக்" கம்பெனியில்தான் பவானி வேலை செய்கிறாள். கடந்த ஓராண்டு காலமாகத்தான் அங்கு வேலை செய்து வருகிறாள். அன்று விடுமுறையாகலால் வேலைக்குப் போகவில்லை. எனவே குழந்தைகளையும் அருகில் போட்டுக்கொண்டு தானும் சிறிது ஓய்வெடுத்த மாதிரி இருக்குமென்றெண்ணி சற்றே அவர்களுடன் பாயில் படுத்தாள்.

சற்றே கண்ணயர்ந்து எழலாமென்று படுத்தவளுக்கு உறக்கம் அவள் விழிகளைத் தழுவ ஏனோ மறுத்தது. குழந்தைகளெல்லாம் தாயின் அரவணைப்பில், நாம் தூங்கி விழிக்கும் வரையில் காவலாகப் பக்கத்திலேயேதான் தாய் படுத்திருப்பாள் என்ற நம்பிக்கையில் நிம்மதியாகத் தூங்கிவிட்டனர்.

பவானி மட்டும் தூக்கம் வராமல் சும்மா புரண்டுகொண்டிருந்தவள் தற்செயலாக அறையில் மாட்டப்பட்டிருக்கும் நாட்காட்டியில் தன் கண்களைப் பதித்தாள். அன்று தேதி பிப்ரவரி 23.

ஒருகணம் அவள் சிந்தனையில் தீப்பொறி போன்ற நினைவு எழுந்து கருத்தை இழுத்து நன்கு விழிக்க வைத்தது உள்ளத்தை. ஆம்! நாளை பிப்ரவரி 24-ஆம் தேதி.

அந்த நாளை நினைத்தாலே அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. 'என்னைப் போன்ற துரதிருஷ்டசாலி யாருமே இருக்கமாட்டார்கள். இருக்கவும் கூடாது. என்னோடு தொலையட்டும்' என்று என்னென்னவோ சொல்லி அப்பெண்ணின் உள்ளம் ஓலமிட்டது. நெஞ்சைக் கசக்கிப் பிழிந்து குமுறிக்கொண்டு வந்தது அழுகை. குழந்தைகள் தன் விசும்பல் கேட்டு விழித்துக் கொள்ளக்கூடும் என்றும் விழித்தெழுந்தாலும் பரவாயில்லை, தன் கண்ணீரைக்கண்டு ஒன்றும் தெரியாத குழந்தைகள் திகைக்கக் கூடும். குழந்தைகள் பார்வையில் ஒன்று பட்டுவிட்டால் அது ஆழமாக அவர்கள் மனதில் பதிந்துவிடும். பின் அவர்கள் மனதில் பெரும் குழப்பத்தை விளைவிக்கக்கூடும் என்றெண்ணி அவ்வறையை விட்டகன்று முன்னறைக்கு வந்தாள்.

என்னதான் முயன்றும் தன் துயரை மறக்க முடியவில்லை. அடக்கமுடியவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்கியிருந்தால் இந்தச் சஞ்சலம் அவளைப் பீடித்திருக்காது. பாவம்! அவள்தான் என்ன செய்வாள்? மறக்கக்கூடிய காரியமா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலிலும் அவளுக்கும் பழைய நினைப்பு வந்துகொண்டுதானிருக்குமென்றாலும் இன்று அந்த நாட்காட்டி அவளைத் தீராத் துயரத்திலாழ்த்திவிட்டது.

வாழ்விலே ஒருநாள் மங்கையரின் மனத்திலே மாறாத திருநாள். மறக்கமுடியாத புனித நாள், சுங்கைவே பகுதித் தோழியர் அனைவரும் குறும்புமொழி பேசிக் கலகலவெனக் கண்ணாடி வளையல்களைப் போலக் குலுங்கக் குலுங்கச் சிரித்து அழைத்து வந்து மங்கல மங்கையர் சூழ மங்கலமேற்ற பொன்னாள் அல்லவா? அந்நாளை எந்நாளிலும் மறக்க இயலுமா? அத்தகைய நாள்தான் இந்த பிப்ரவரி 24-ஆம் நாள் அந்த நாளைக் கண்டு குதூகலிக்க வேண்டியவள் ஏன் கலங்கவேண்டும்? பவானிக்கு இப்போது என்ன விட்டது?

இன்னும் என்னதான் வர வேண்டும் அவளுக்கு? இதை விடப் பெரிய துன்பம் இன்னொன்று இருக்கவா போகிறது? அவள் என்ன கொடுமை செய்தாளோ? அது அவளுக்குத் தெரியாது. அந்த இறைவனுக்குத் தெரிந்திருக்கும். அவனுக்குத் தெரியாதா? அதற்கு இத்தகைய கொடுமையான தண்டனையையா கொடுக்கவேண்டும். அதைத் தான் அவளால் ஏற்றுக்கொள்ள முடியுமா? எந்தப் பெண்ணால் தான் முடியும்? முடியாதென்றால் அந்த ஆண்டவர் தான் விட்டுவிடுவானா? அந்தக் கசப்பு நிறைந்த மருந்தைக் பலவந்தமாக அவள் குடித்தே தீரவேண்டுமென்று தானோ என்னவோ, அவள் பற்களை இறுகப் பூட்டியிருந்தாலும் கொடுமை நிறைந்த கோல் ஒன்றைப் பற்களுக்கிடையே வைத்து நெம்பித் திறந்து மடமடவென்று ஊற்றியே விட்டானே பாழும் இறைவன். அதை அவள் உமிழ்ந்துவிடாதபடி கசப்பு நிறைந்த மருந்தையும் தன் குழந்தை துப்பிவிடாதபடி எவ்வளவு லாவகமாக ஒரு தாய் ஊற்றிவிடுவாளோ அப்படியே



திருமதி ஜோன்

ஊற்றிய பின் அவள் எப்படித் தப்பிவிட முடியும்? அதை அவள் விழுங்கித்தானே ஆகவேண்டும். அப்படியொரு துன்பமான யாரும் விரும்பாத எதிர்பார்த்திராத சம்பவமும் அன்றேதான் நடந்து விட்டது

அதாவது கணவனுடன் சேர்ந்து குடும்பக் கலத்தைச் செலுத்த முற்பட்டு அவன் கரத்தோடு தன் கரத்தை எந்த நாளில் இணைத்தாளோ அதே நாளிலேயே கணவனின் நாடி நரம்புகள் அத்தனையும் ஒடுங்கித் தன் கரத்தினின்றும் அவள் கரத்தை விடுவித்துக் கொண்டான். அவளைத் தனியே விட்டு விட்டான். இல்லை. அவள் தனித்து விடப்பட்டாள். ஆம். அவளை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விட்டான். திடீர் என்று ஒருநாள் இறந்துவிட்டான் அவள் கணவன. அதுவும் பிப்ரவரி 24 ஆம் நாளிலேயே.

இந்தக் கொடுமையை யாரால் தாங்கிக் கொள்ள முடியும்? அவள் மண நாளைக் கொண்டாடுவாளா? மரண நாளைக் கொண்டாடுவாளா? அவளைப் பொறுத்த வரை எல்லாம் ஒன்றுதான். கல்யாணமாகி ஏழாண்டுகள் இன்பமாகக் காலம் தள்ளினர். மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்பர். ஆனால் பவானி தம்பதியர் மகிழ்ச்சிக்கு எல்லையே கண்டுவிட்டனர் எனலாம். அதுதான் சரி. இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி வாழ்க்கையைக் கழிப்பதற்குப் பதில் துன்பமே அணுகாத கூட்டு மொத்தமான இன்பத்தையே வாழ்க்கையில் முற்பகுதியாக்கிக் கொண்டனர் என்றுதான் சொல்லவேண்டும். நாளோட்டத்தில் கழிப்பதை நாழிகையாக்கி விட்டனர் போலும். பிற்பகுதி இவ்வளவு சூன்யமாக . இருக்குமென்று அவள் கண்டாளா. நாளை நடப்பது நமக்குத் தெரியுமா? இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் இடையிடையே வலிந்துகூட துன்பத்தை ஏற்றிருப்பாளே!



கணவன் மனைவியருக்கிடையே சிறுசிறு பிணக்கு காரணமாக பவானி கணவனிடம் ஊடலாக இருந்தாலும் "ஊடுதல் காமத்திற்கின்பம்" என்னும் வள்ளுவப் பெருமானின் கூற்றை மெய்ப்பிக்கப் பார்க்கிறாயா, பவானி!" என்று கிண்டலாகக் கூறுவதோடு "இதோ பார் பவானி! அந்த ஒரு ஊடலைக்கூட நான் விரும்பலே பவானி. நாம ரெண்டு பேரும் மனசுல மாசு இல்லாம மனசு நெறைஞ்சி வாழ்க்கை நடத்தணும். உன் முகம் கோணும் படியா ஒரு நாளும் நடந்துக்கமாட்டேன். உன் முகத்துல எப்போதும் மலர்ச்சியைத்தான் பாக்கணும். அதுதான் என் ஆசை" என்று ஊடல் திர்ப்பான்.


ஆம். உண்மைதான். என் முகம் கோணாதபடி நடந்துக்க முயன்றுதான் மடிந்தார். பாவி நான். அன்று அந்த மல்லிகைப் பூவைக் கேட்காமலிருந்தால் மல்லிகையின் மணம் போன்ற என் கணவர் இன்றும் என் அருகிலேயே மணம் பரப்பி இருப்பாரே. எனக்கு இந்தக் கதி நேர்ந்திருக்காதே."

மல்லிகைப் பூ வாங்குவதற்காக, அதுவும் அன்று எங்கள் மணநாளாகையால் அந்நாளில் என் ஆசையை எப்படியேனும் நிறைவேற்றி விடவேண்டும் என்ற எண்ணத்தாலும், உளம் நிறைந்த அந்நாளின் பூரிப்பையும் மகிழ்வையும் சுமந்த வண்ணம் அடுத்த ரோடு கடக்கும்போது எப்பொழுதும் மிகக் கவனமுடனேயே போக்குவரத்தை அனுசரிக்கும் என் கணவர் விபத்துக்குள்ளாகி விட்டார்.

"அத்தான்! இன்று நம்ம கல்யாணநாள் இன்னிக்கு வேலை முடிஞ்சு வரும்போது ஒருமுழம் மல்லிகைபூவாவது வாங்கிக்கிட்டு வர்றீங்களா?" அப்படீன்னு கொஞ்சிக் கெஞ்சியதால் தான் அவரும் எப்படியாவது வாங்கி வந்துடணும் என்று முயன்றிருக்கிறார். கொஞ்ச நேரத்துக்குப் பகட்டுடன் பல்லைக்காட்டி மனதை மயக்கும் மணத்தையும் பரப்பிவிட்டு, வாசமிழந்து வாடிப்போகும் பூவுக்கு ஏன் தான் நான் அவ்வளவு ஆசைப் பட்டேனோ. பாழாப் போற என் ஆசையை நான் அன்றே கொன்றிருந்தால் என் வாழ்நாள் பூராவும் மணம் பரப்பி நிற்கும் வாசமுள்ள நறுமணமுள்ள மலராம் என் ஆசை மணாளனைப் பறிகொடுத்திருப்பேனா?

சிறுவர் கதை

ஆற்றோடு...



அ. முனுசாமி
பொண்டோக் தஞ்சோங்

ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவர் அங்குள்ள குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். அதே ஊரில் ஒரு துஷ்டமான பையன் இருந்தான். அவன் கல்வி அறிவு இல்லாதவன். தக்க வயதில் அவனை அவன் பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்பாததால் மாடு மேய்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

குழந்தைகள் பாடம் படிக்கப் போவதைக் கண்ட அந்தப் பையனுக்குத் தானும் படிக்கப் போக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது ஆகவே, குருவிடம் சென்று தன்னையும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டான். அதற்கு அவர் "உனக்கு அதிக வயதாகிவிட்டது. உன்னுடைய கல்வி நிலையும் எனக்குத் தெரியாது. ஆகவே, சிறு குழந்தைகளோடு உன்னையும் அமரவைப்பது நன்றாக இருக்காது. என்னை மன்னித்துவிடு" என்று கூறினார்.

பையனுக்குக் கோபம் வந்துவிட்டது. பலமுறை முயன்றும் அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. குருவை எப்படியாவது மடக்கித் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தான்.

அந்த ஊருக்கு வரவேண்டுமென்றால் ஓர் ஆற்றுப் பாலத்தைக் கடக்க வேண்டும். அன்று ஒருநாள் ஆற்றில் வெள்ளம் அதிகம் பையனுக்கு ஒரு யோசனை தோன்றியது. குரு எப்போது வருவார் என்று காத்துக்கொண்டிருந்தான். குரு வருவதைக் கண்டதும் உடனே ஓடிப் பாலத்தில் நான்கு சட்டங்களைப் பிடுங்கிவிட்டான். பிறகு ஓரிடத்தில் மறைந்துகொண்டான்.

குரு எப்போதும்போல வந்தார். ஆற்று வெள்ளத்தைக் கண்டு பிரமித்துப்போனார். என்றுமே கண்டிராத வெள்ளப் பெருக்கு! வெள்ள ஓட்டத்தை ரசித்தவாறே பாலத்தைக் கடந்தார். வந்தவர் தவறிச் சட்டங்கள் பிடுங்கப்பட்டிருந்த இடத்தில் காலை வைத்துவிட்டார். பிறகு என்ன? வெள்ளத்தோடு சேர்ந்துவிட்டார்.

"உதவி ..! உதவி...!" என்று கூச்சலிட்டார் குரு. சமயம் பார்த்துக்கொண்டிருந்த பையன் ஓடிவந்தான். குரு, தன்னைக் காப்பாற்றும்படி அவனிடம் கேட்டார்.

அதற்குப் பையனோ, தனக்குப் பாடஞ்சொல்லிக் கொடுப்பதாக இருந்தால் காப்பாற்றுவதாகக் கூறினான். குருவுக்குக் கோபம் வந்துவிட்டது. இருப்பினும் பையனிடம் கேட்டார்.


"உன் தாத்தா படித்திருக்கிறாரா?"

"இல்லை" என்றான் பையன்.

"உன் அப்பனாவது படித்திருக்கிறானா?"

"இல்லை."

"உன்னுடைய வம்சமே படிப்புவாசனை இல்லாத வம்சம். படிப்பின் மகிமையே அறியாத வம்சத்தில் வந்த உனக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தால் செவிடன் காதில் சங்கு ஊதின கதையாகிவிடும். உனக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்து மாரடிப்பதைவிட இந்த ஆற்றோடு போவதே மேல்...!" என்று சொல்லிவிட்டு வெள்ளத்தோடு போய்விட்டார் குரு.



சாமி காப்பாத்துமா?

பி. அருள் ஆறுமுகம்

"எனக்கு வயது பத்து தானுங்க...! என்னுடைய பேரு ராமு. என்னைப் பார்த்தா பத்து வயசுப் பையன் மாதிரி தெரியாதுங்க. மூனு வயசைக் கொறைச்சி கொஞ்சம் கற்பனைப் பண்ணிப் பாருங்க... என்னைப் பார்த்தாக்கா ஏழு வயது பையனுட்டம்தான் தோணுங்க. நான் இப்பத்தான் மூணும் வகுப்பிலே படிக்கிறேன். இப்போ நான் சொல்லப்போற கதையைக் கொஞ்சம் கேளுங்க! என் கதை எப்படி இருக்குமோன்னு கவலைப்படுறீங்களா? நீங்க கொஞ்சமும் கவலைப்படாம தைரியமா எனக்காகக் கொஞ்சம் கேளுங்க சார்.

"என்னுடைய பேரு ராமுன்னு தானே சொன்னேங்க...? என்னுடைய பேரு ராமு தாங்க. ஆனா எனக்கும் ஒரு பட்டம் கொடுத்து, அந்தப் பட்டப் பெயராலேயே எல்லோரும் கூப்புடுவாங்க. நான் பார்ப்பதற்கு மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக் காட்சி தருவேங்க. அதனால பெரிய மனுசங்க முதல் சின்னச் சின்னப் பசங்களெல்லாம் என்னை "ஈக்கான் பிலீஸ்"னு கூப்பிடுவாங்க. இதுல எனக்குக் கொஞ்சம் மனவருத்தந்தானுங்க! ஏன்னா, என்னுடைய அம்மா ஆசையா அழகா எனக்கு வச்ச பேரு "ராமு"ன்னு இருக்கும்போது இவன்களெல்லாம் ஏன் எனக்குப் பட்டப்பேரு வைச்சிக் கூப்பிடுறானுங்கனு எனக்குத் தெரியலேங்க. இதுக்கு நான் என்னங்க செய்ய முடியும்? அவன்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்னு நெனைச்சி வலது காதிலே வாங்கி இடது காது வழியா காத்தில பறக்கவிட்டு விடுவேனுங்க.

"அப்புறம் கதையை மறந்திட்டேனே! நான் ஒரு அனாதைங்க!

"நானு அனாதைன்னு தான் சொன்னேன். ஆனா எனக்கு அப்பா இருக்கு. எனக்கு அப்பான்னு ஒருத்தர் இருந்தும், நானு ஒரு அனாதை மாதிரி தானுங்க. எனக்கு அஞ்சு வயசாக இருக்கும்போது, என்னைப் பெத்த அம்மா, இந்த பொல்லாத உலகத்திலே என்னை அனாதையாக்கிவிட்டு சாமியாயிட்டாங்க! 'ஆஸ்மா'னு சொல்லுவாங்க இல்லே. அந்த வியாதியால அவதிப்பட்டுக்கிட்டு இருந்த என்னுடைய அம்மா ஒரு நாளு "சாமி" ஆகடிக்கட்டும் வாங்கிக்கிட்டாங்களாம். பக்கத்து வூட்டுப் பாட்டி இதை அடிக்கடி சொல்லிக்கிட்டே இருப்பாங்க.

"எனக்கும்கொஞ்சம் கொஞ்சம் நினைவிருக்குங்க... அன்னைக்கு ராத்திரி என்னுடைய அம்மா எனக்குச் சாப்பாடு எல்லாம் கொடுத்துத் தூங்க வைச்சிட்டு அவுங்களும் "லொக்கு, லொக்குனு" இருமிக்கிட்டே போயி படுக்கையிலே படுத்துக்கிட்டாங்க. என்னுடைய அப்பா, அம்மாவைச் சரியாக்கூடக் கவனிக்கிறதில்லே. சாயந்திரம் ஆயிட்டுதுனா அப்பா வூட்டிலே தங்கமாட்டாரு, மூணுங்கட்டையிலே இருக்கிற சீனன் கடைக்குப் போயிடுவாரு. அவருமட்டுமா போவாரு? என்னுடைய அப்பாவைப் போல, பல பையன்களோட அப்பாக்களும், அந்த மூணுங்கட்டை சீனன் கடைக்குப்போயி, மூச்சுப் பிடிக்க - தலை சாயிற வரைக்கும் "சீனன் சம்சு"வைக் குடிச்சிட்டு ரோட்டிலே தள்ளாடித்தள்ளாடி வருவாங்க! எங்க அப்பாவும் அப்படித்தான். காலையிலே வேலைக்குப் போயிடுவார். சாயந்திரம் மூணுங்கட்டை சீனன் கடைக்குப்போயி நல்லா குடிச்சிபுட்டு ராத்திரிக்குத்தான் வூட்டுக்கு வருவார்.

"சம்சுவை அடியோடு ஒழிக்கப் போறாங்களாம்... பெரிய பெரிய தலைவருங்களெல்லாம் கூட அரசாங்கத்திடம் சம்சுவை ஒழிக்கணுமுனு முறையிட்டிருக்காங்களாம். பக்கத்து வூட்டுப் பாட்டி அம்மா கிட்டே சொன்னுங்க. அதுக்கு அம்மா, "மகராசன்க... நல்லா இருக்கட்டும். இந்தப் பாழாய்ப்போன சம்சுவால எத்தனைக் குடும்பங்க நடுத்தெருவிலே நிக்குது...? எத்தனைபேரு குடல், ஈரல்லாம் வெந்து வேலைவெட்டி எதுவும் செய்யமுடியாம கஷ்டப்படுறாங்க?" அம்மா அன்னைக்கு சொன்னது இன்னும் எனக்கு நினைவிருக்கு.

"அம்மா ராத்திரி பூராவும் இருமிக்கிட்டே இருப்பாங்க... மழைக்காலம்னு சொல்லவேண்டியதில்லேங்க. அம்மா கஷ்டப்படுறதைப் பார்த்து நானே கதறிக் கதறி அழுதிருக்கேங்க. அப்பா... அம்மாவை என்னா ஏதுன்னு கேட்கவே மாட்டாரு.

"அன்னைக்கி மறுநாளு காலையிலே எழுந்த நானு, "அம்மா! அம்மா! எனக்குக் கோப்பிக் கொடும்மா'னு கத்தினேன். அம்மா படுக்கையிலே படுத்திருந்தாங்க. மீண்டும் "அம்மா! எனக்குப் பசிக்குது அம்மா"னு கூறி அம்மாவை எழுப்பினேன். அம்மா எழுந்திருக்கவே இல்லை. அம்மா நல்லா தூங்கறாங்கன்னு நானு நெனைச்சிகிட்டேன். ஆனா, என்னுடைய வயிறு தடபுடா"னு சத்தம் போட்டுக்கிட்டே இருந்துச்சி. பசியை என்னால பொறுக்கவே முடியலே அம்மாவோட கையைப் பிடித்து எழுப்பினேன். அப்பவும் அம்மா எழுந்திருக்கலே.

"அம்மா! எனக்குப் பசிக்குது... எனக்குப் பசிக்குதும்மா; எழுந்துவந்து சீக்கிரம் கோப்பிப் போட்டுக் கொடு'னு கத்தினேன். நானு அழுவுற சத்தத்தைக் கேட்ட அப்பா எழுந்து வந்து, "என்னடா ராமு வேணும்"னு கேட்டாரு!

"எனக்குப் பசிக்குதுப்பா... அம்மா எனக்குக் கோப்பிக் கொடுக்கலப்பானு, தேம்பித் தேம்பி அழுதவாறே சொன்னேன். அப்பாவும் அம்மாவைப் போயி எழுப்புனாரு. அம்மா அப்பவும் எழுந்திரிக்கலே"ங்க

"லட்சுமி! லட்சுமி"னு அப்பா நாலு தடவை கூப்பிட்டாரு. என் அம்மா பேரு லட்சுமிங்க! அப்பா அப்படிக் கத்தி எழுப்பியும் அம்மா எழுந்திரிக்கவேயில்லேங்க.

"லட்சுமி! என்னை விட்டுப் போயிட்டியா?"ன்னு சொல்லிக்கிட்டே அப்பா என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாரு. எனக்கு என்னான்னு ஒன்னுமே புரியலேங்க. நானும் அப்பா கூடவே சேர்ந்து அழுதேன். நாங்க அழுவுறதைப்

பார்த்துட்டு பக்கத்து வீட்டிலே உள்ளவங்களெல்லாம் எங்க அம்மாவைச் சுத்தி நின்னு வேடிக்கை பார்த்தாங்க. கொஞ்சம் பொம்பளைங்கதான் "ஓ"னு பாட்டுப் பாடுற மாதிரி அழுதாங்க. எதிர்வீட்டுப் பாட்டி ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடிச்சுகிட்டு, "டேய் ராமு ..! உன்னை அனாதையாக்கிட்டுப் போயிட்டாடா உங்காத்தா"னு சொல்லிக்கிட்டே அழுதாங்க. நானும் அந்தப்பாட்டி அழுவுறதைப் பார்த்துட்டு அழுதேன். யார் யாரோ வந்தாங்க! அப்பாகிட்டே என்னென்னவோ சொன்னாங்க. எனக்கு ஒண்ணுமே விளங்கலேங்கே!

"மறு நாள் காலையிலே எழுந்து நானு "அம்மா! கோப்பி வேணும்'னு கத்தினேன். அம்மா இன்னைக்கும் எழுந்துவரவில்லை. அம்மா படுத்திருந்த படுக்கையைப் போய்ப் பார்த்தேன், அங்கே அம்மாவைக் காணலே! ஆனா, அம்மா தலைவைக்கிற இடத்தான்டே ஒரு காமாட்சி அம்மன் விளக்கு மட்டும் எறிஞ்சுகிட்டு இருந்துச்சி. அந்த விளக்கை நான் பார்த்திட்டே இருந்தேன்.

"ராமு! . உன் அம்மா சாமியாயிட்டா... இனிமேலே இந்த விளக்குதாண்டா உன்னோட அம்மா"னு சொன்னாரு அப்பா. ஆனா, கொஞ்ச நாளைக்குப் பிறகு ஒரு பெரிய பொம்பளையக் கூட்டிக்கிட்டு வந்து, "இது காண்டா ராமு இனிமேலே உன்னோட அம்மா"னு சொன்னாரு அப்பா. அப்பாமேல எனக்குக் கோபம் கோபமாக வந்துச்சு. எங்கம்மா-வை எனக்குத் தெரியாதா என்ன...? யாரையோ கூட்டிக்கிட்டு வந்து, இதுதாண்டா உன் அம்மானு சொன்னாக்கா எனக்குக் கோபம் வராதா என்ன... அப்பாவையே ஒரு நாளு கேட்டேன், "ஏம்பா அம்மா சாமியாயிட்டாங்கனுதானே, இன்னொரு பொம்பளைய கூட்டியாந்து இதுதான் என்னோட அம்மானு காட்டுறீங்க? அம்மாவுக்கு முன்னால நீங்கசாமியாயிட்டிருந்தா அம்மாவும் உங்களைப் போலத்தான் யாரையாவது ஒருத்தரைக் கூட்டியாந்து, ராமு... இனிமேல இவருதாண்டா உன்னோட அப்பானு சொல்லுவாங்களாப்பா'னு கேட்டேன். அப்பாவுக்கு எம்மேலே ஒரே கோபம்.

"மூளைச்சி மூணு இலை விடலே இதுக்குள்ளே இப்படியா பேசுறே... இதெல்லாம் எங்கேயிருந்துடா கத்துக்கிட்டேனு கேட்டவாறு கையைத் தூக்கிக் கொண்டே என்னை அடிக்க வந்தாரு, நான் ஓடியே போயிட்டேன்.

"கொஞ்ச நாளைக்குப் பிறகு தான் எனக்குத் தெரிஞ்சுச்சி. அவுங்கதான் என்னோட சித்தினு. அப்பா நெனச்சாக்கா ஒரு நாளைக்கு ஒரு சித்தியைக் கூட்டிக்கிட்டு வந்து என்முன்னால காட்டமுடியும்... ஆனால், என்னோட அம்மாவை அவரால் கூட்டிவர முடியுமா? நிச்சயமாக அவரால் கூட்டிக்கொண்டு வரவே முடியாது.

"சித்தி வந்த பிறகு அப்பாவும் என்னிடம் அன்பாகவே நடந்துகொள்வதில்லை. சித்தி வரும்போது ரெண்டு பிள்ளைங்களோடுதான் வந்தாங்க. எருமைக்கடா மாதிரியிருந்த அந்த ரெண்டுக்கும் நல்ல அழகான சட்டைகளும் டிரவுசர்களும் வாங்கிக் கொடுப்பாங்க சித்தி. ஆனா எனக்கு எல்லா பழசு தான். அதுவும் எலியும், கரப்பான் பூச்சியும் கடித்துக் குதறியது தான். கிழிந்ததைக் கூட தச்சு கொடுக்காமாட்டாங்க சித்தி. கிழிஞ்சி இருக்கிற இடத்திலே ஊக்கைக் குத்தி அலங்கோலமாக இருக்கும் என்னோட உடை.

"நான் என்ன செய்யறதுங்க...? எல்லாம் என் தலை எழுத்துதான். சாப்பிடக்கூட எனக்குச் சோறு போட மாட்டா சித்தி. எத்தனையோ ராத்திரி நான் பட்டினி கிடந்திருக்கேன். ஒரு நாளு பக்கத்து வீட்டுப் பாட்டி எனக்குச் சோறு கொடுத்தாங்கனு சித்தி பக்கத்து வீட்டுப் பாட்டிய கண்டபடி ஏசினாங்க! அழுவாதகுறையா பாட்டி, "ராமு... இனிமேல் இங்கேவராதேப்பா... உன்னோட சித்திக்காரி...பேயி மாதிரி என் மேலே சீறி விழுறுப்பா'னு சொன்னாங்க. அன்னைலேயிருந்து பாட்டியும் சித்திக்குப் பயந்து சோறு போடுவதில்லை.

"ஆளப்பிறந்த என் ராஜா" -ன்னு என்னுடைய அம்மா என்னைத் தாலாட்டி தூங்க வைப்பாங்க, ஆனால் இன்னைக்கி ஆளப் பிறந்த எனக்கு உண்ண உணவில்லை; உடுத்த உடை இல்லை.

"அம்மா நீ பெத்த பிள்ளையின் கதியைப் பாரும்மா! நான் சரியாகச் சாப்பிட்டு எத்தனை நாளாச்சினு உனக்குத் தெரியாதாம்மானு அம்மாவின் படத்துக்கு முன்னால் நின்னு அம்மாவிடம் கேட்டேன். அம்மா பேசவே மாட்டாங்க. அவுங்கதான் சாமியாயிட்டாங்களே...!

அப்பா இருந்தும் நான், அம்மா இல்லாத ஏன் யாருமே இல்லாத அனாதை ஐயா... அனாதை. நான் ஒரு அனாதை! எங்கம்மா சாமியாயிட்டாங்களாம். சாமி எல்லாத்தையும் காப்பாத்தும் போது... என்னைக் காப்பாத்தாதா...? ஐயா நீங்களே சொல்லுங்க. சாமி என்னைக் காப்பாத்தாதா?"



உறவுப் பயணம் 5

ராமதாஸ் மனோகரன்

கெடா. தேலைய் தோட்டத்திலும். ஆர்வார்ட் தோட்டத்திலும் 27-12-77 வியாழக்கிழமை புதிய சமுதாயம் உறவுப் பயணத்தின் சந்திப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் காலையில் புதிய சமுதாயத்தின் விற்பனையாளர்களையும், விளம்பரதாரர்களையும் சந்தித்து விட வேண்டும் என்று ஆசிரியர் கூறவே எங்கள் கார் பட்டர்வொர்த் நோக்கிப் பறந்தது.

அன்று காலை. 10 மணிக்கு ஏ. கே. சினிவாசகம் பிரதர்ஸ் தொழிற்சாலைக்கு முதலில் சென்றோம். திரு. ஏ. கே. எஸ். அவர்களின் இளவல் திரு.ஏ.கே. சந்திரகாசன் கனிவான வரவேற்புடன் எங்களுக்குச் சுவையான தேநீரையும் வழங்கினார். பின்னர் எங்களை அழைத்துச் சென்று அப்பளம், சூடம், ரோஸ் சேமியா, நல்லெண்ணெய் போன்றவை எப்படித் தயாராகின்றன என்பதை விளக்கிக் காட்டினார். அப்பளம் செய்யும் இயந்திரம் மட்டும் 1½ லட்சம் வெள்ளி மதிப்புடையது என்பதை அறிந்ததும் ஏ. கே. எஸ். அப்பளத்தின் மகிமை அப்போது தான் எனக்குப் புரிந்தது. கரூவூரிலிருந்து புதிதாக வந்திருந்த ஆட்டுக் கல்லையும் பார்த்தோம்.

அதனையடுத்து புக்கிட் மெர்த்தாஜம் மசாலை மன்னன் அழகப்பா மாவு மில்லுக்குச் சென்றோம். அந்த மாவுமில்லில் தமிழ் மங்கையர்களோடு மலாய், சீன மங்கையர்களும் பணிபுரிவதைக் கண்டோம். மசாலை மன்னன் அவசியம் மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டுத் தான் போக வேண்டுமென்று அன்புக் கட்டளை இட்டுவிட்டார். அதனையும் எங்களால் தட்ட முடியவில்லை. அதன் பின்னர் புதிய சமுதாயத்தின் ஏஜெண்டான பாகான் புக் ஸ்டோருக்குச் சென்றோம். அதன் நிர்வாகி திரு. சுல்தான் அவர்கள் ஆசிரியர் முருகு அவர்களுடன் வர்த்தகம் சம்பந்தமான பல பயனுள்ள விஷயங்கள் குறித்து உரையாடினார். சுவையான ஆரஞ்சு குளிர் பானத்தையும் எங்களுக்கு வழங்கினார் திரு. சுல்தான்.

அவரிடம் விடைபெற்றுச் சுங்கைப்பட்டாணிக்குப் பிற்பகல் 2.30மணிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அன்று மாலை 4.30 மணி அளவில் கெடா தேலைய் (தேயிலை) தோட்டத்தில் சந்திப்புக் கூட்டம் என்பதால் அதற்குள் ஒரு சிறு தூக்கம் போட்டால் "தெளிவாக" இருக்கும் என்ற எண்ணத்தில் ஆசிரியரும் எங்கள் ஓட்டுநர் திரு. இராமசாமியும் அமைதியாகப் படுத்து விட்டனர். அந்த நேரத்தில் எனக்குத் தூக்கம் வரவில்லை. ஆனாலும் அசதி உடம்பை என்னவோ செய்யத் தான் செய்தது. குளிர்ந்த நீரில் குளித்தால் கொஞ்சம் கலகலப்புப் பிறக்கும் அல்லவா? நானும் குளித்துவிட்டு வந்தேன். சிறு தூக்கம் கலைந்து எழுந்த ஆசிரியர் சிறிது நேரத்தில் பயணத்திற்கு "ரெடி"யாகி விட்டார்.


முதலில் நண்பர் எம். ஏ. இளஞ்செல்வனின் இல்லத்திற்குச் சென்று அவரையும் அழைத்துக் கொண்டு தேலைய் தோட்டம் நோக்கி விரைந்தது எங்கள் மஸ்டா கார்.

"இந்தத் தோட்டத்திலே சந்திப்புக் கூட்டத்தை யார் ஏற்பாடு செய்திருக்காங்க ..?" ஆவலோடு நண்பர் இளஞ்செல்வனைக் கேட்டேன்.

"நண்பர் மணியரசன் தான் ஏற்பாடு செய்திருக்கிறார்" என்றார் திரு. இளஞ்செல்வன்.

"சி. மு. மணியரசனா?" என்று கேட்டேன். என் குரலில் ஆச்சரியமும் ஆனந்தமும் அந்நேரம் கலந்திருந்தது. "அவரேதான்..." என்று உறுதிப்படுத்தினார் நண்பர் இளஞ்செல்வன். சுமார் ஆறு ஆண்டு காலமாக என்னுடன் கடித, தொடர்பு மூலமாக நட்பு கொண்டிருந்த நண்பர் மணியரசன் என் எழுத்துலக நண்பர்களில் ஒருவராவார். ஆனால் நாங்கள் இருவரும் சந்தித்ததே இல்லை. என் ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அதுதான் காரணம்!

நண்பர் மணியரசனின் இல்லத்தில் கனிவான உபசரிப்புக்குப் பின்னர் எல்லோரும் மனம்விட்டுச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். மாலை மணி ஐந்துக்கு தேலைய் தோட்டத்து மகா மாரியம்மன் கோயில் மண்டபத்தில் சந்திப்




தேலைய் தோட்டச் சந்திப்புக்கூட்டத்து ஏற்பாட்டாளர்களுடன் ஆசிரியர் முருகு.

புக் கூட்டம் ஆரம்பமானது. அத்தோட்டத்து மேற்பார்வையாளர் இஞ்சே தே அவர்களும், உதவி மானேஜர் இஞ்சே அன்சார் அவர்களும் சந்திப்புக்கூட்டத்தில் கலந்து சிறப்பித்தனர். மூன்று இனச் சகோதரர்களும் நிறைந்திருந்த அந்தச் சந்திப்புக் கூட்டம் ஒரு முஹிபா கூட்டம்போல இருந்தது. திரு. செல்வராஜ் வரவேற்புரை ஆற்றிய பின்னர் தே லைய் மகா மாரியம்மன் கோயில் தலைவர் திரு. எம். சுப்பிரமணியம் தலைமை உரையாற்றினர்.

அதனைத்தொடர்ந்து கவிஞர் சி. மு. மணியரசன் ஆசிரியர் முருகு அவர்களுக்குப்"பாமாலை" சூட்டி மணியான சிற்றுரையையும் ஆற்றினர். அப்பகுதிக்கான விற்பனைப் பொறுப்பையும் அவரே மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் நண்பர் இளஞ்செல்வனும், நானும் "புதிய சமுதாயத்தின்" குறிக்கோள்களை எடுத்துரைத்தோம்.

இறுதியாக ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினர். அவர் தம் உரையில் "தமிழர்களின் அவலங்களுக்கெல்லாம் அவர்களிடையே காணப்படுகிற பிளவும், பூசலுமே மூலகாரணங்களாகும். தீராப்பிணியாக நம் சமுதாயத்தை உருக்குலைத்துக் கொண்டிருக்கும் பிளவுகளுக்கும் உட்பூசல்களுக்கும் நாம் முற்றுப்புள்ளி வைத்து உறுதியாக ஒற்றுமையாக வாழவேண்டும். நாம் ஒன்றுபட்டால் இந்நாட்டில் ஆனந்தமாக மற்ற இனங்களுக்கு இணையாக மேம்பட்டு வாழலாம்" என்று கூறினர்.



ஆர்வார்ட் தோட்டத்தில் (பிரிவு 1) நிகழ்ந்த சந்திப்புக் கூட்டத்தில், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

மாலை 6 மணிக்கு நண்பர் சி. மு. மணியரசனின் நன்றி உரையுடன் சந்திப்புக் கூட்டம் இனிதே நிறைவுக்கு வந்தது.

எங்களின் அடுத்த சந்திப்புக் கூட்டம் (கெடா) ஆர்வார்ட் தோட்டத்து முதல் டிவிஷனில் மாலை 6.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் தே லைய் தோட்டத்து மக்களிடமிருந்து விடை பெற்றோம்.

ஆர்வார்ட் தோட்டம்

ஆர்வார்ட் தோட்டத்தில் சங்க இல்லத்திற்கு முன்னால் எங்கள் கார் போய் நின்றது. கனிவும் துடிப்பும் நிறைந்த இளைஞர் திரு ரோபர்ட் கண்ணனும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திரு. அம்மாசியும் ஆசிரியர் முருகு அவர்களையும் எங்களையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர்.

அத்தோட்டத்துத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவருமான நண்பர் திரு. ராபர்ட் கண்ணன் இனிய வரவேற்புரை ஆற்றி - அந்த உரையிலேயே சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வண்ணம் பல நல்ல கருத்துக்களையும் சுவைபட எடுத்துக் கூறினர். அவரைத் தொடர்ந்து இனிய நண்பர் இளஞ்செல்வனும் நானும் சிறப்புரை ஆற்றினோம்.

இடையே எங்களுக்குக் குளிர்பானங்களையும் கொடுத்துக் காலியாக இருந்த எங்கள் வயிற்றுக்கு நிறைவு சேர்த்தனர் ஆர்வார்ட் தோட்ட இளைஞர்கள். இறுதியாக எங்கள் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினர்.

இச்சந்திப்புக் கூட்டத்தில் ஆர்வார்ட் தோட்ட யூனியன் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்தோட்டத்து விற்பனைப் பொறுப்பை நண்பர் திரு. எம். குப்புசாமி மனமுவந்து ஏற்றுக்கொண்டார். [நண்பர் குப்புசாமியும் திரு. ராபர்ட் கண்ணனும் அப்பகுதியில் புதிய சமுதாயத்தின் விற்பனையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பெருக்கிக்கொண்டே வருகிறார்கள் என்பதை எங்கள் அலுவலகத்திற்கு அவர்கள் அனுப்பும் ஆர்டர் கடிதங்கள் மெய்ப்பித்துக்கொண்டு வருகின்றன]

இரவு 7.30 மணியளவில் சந்திப்புக் கூட்டம் நண்பர் ராபர்ட் கண்ணனின் கலகலப்பான நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. எங்கள் கார் சுங்கைப்பட்டாணி நோக்கி விரைந்தது.

பொங்கல் தமிழர் திருநாள்

தமிழர்கள் தனிப்பெரும் திருநாளான பொங்கலையும், அமரர் கோ. சாரங்கபாணி கண்ட பெருநாளாம் தமிழர் திருநாளையும் இணைத்து சுங்கைவே-சுபாங் வட்டாரத்தினர்கொண்டாட உள்ளனர்.

இக்கொண்டாட்டக் குழுவினரின் தலைவராக திரு. ந. க. வேலன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மற்றும் செயலாளராக திரு. ஏ.சீராளனும், பொருளாளராக திரு. ச. கோவிந்தனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அந்த வட்டாரத்தில் உள்ள ம. இ. கா., மலேசிய திராவிடர் கழகம், தமிழ் இளைஞர் மணிமன்றம், இந்தியர் இறப்புப் பொருளுதவிச் சங்கம், திருவள்ளுவர் மன்றம், பழைய மாணவர் சங்கம். ஆலய நிர்வாகங்கள் போன்ற அனைத்து இயக்கங்களும் முதன் முறையாக இணைந்து பிப்ரவரி 11, 12-ஆம் தேதிகளில் இவ்விழாவினைக் கொண்டாட உள்ளன.

"இன்றிரவு உங்கள் எல்லாருக்கும் நம்ம வீட்டுலே விருந்து" என்று அன்று மாலை நாங்கள் சந்திப்புக் கூட்டங்களுக்குப் புறப்படுவதற்கு முன்பே நண்பர் இளஞ்செல்வனும் அவரின் துணைவியார் சகோதரி சுந்தராம்பாளும் கனிவான அழைப்பைக் கொடுத்துவிட்டார்கள். அன்றிரவு சுமார் 8.15க்கு நண்பர் இளஞ்செல்வனின் இல்லம் வந்தடைந்தோம். சகோதரி சுந்தராம்பாளுடன் தில்லையப்பன் தம்பதிகளும், எழுத்சாளர் திரு. சீ முத்துசாமியும் அவர்தம் துணைவியாரும் எழுத்தாளர் திருமதி பாக்கியம் முத்துவும் அங்கே மலர்ந்த முகத்துடன் எங்களை வரவேற்றனர்.

எழுத்தாளர் தம்பதிகள் எம். ஏ. இளஞ்செல்வனும்-சுந்தராம்பாளும் எல்லோருக்கும் சுவையான விருந்தினைப் படைத்தனர். விதவிதமான உணவு வகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவையைத் தந்தன. பட்டாணியும் காளானும் மிகச் சுவையாக இருந்தன.

சிறுகதையைப் படைப்பதில் மட்டுமல்ல, சிறப்பான அறுசுவையைப் படைப்பதிலும் முன்னணி வகிக்கிறார் சகோதரி சுந்தராம்பாள் என்பதை அவரதுசமையல் மெய்ப்பித்தது. இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் பாயாசமும் எங்கள் வயிற்றில் சிலு சிலுவென இறங்கியது. அதன் பின்னர் உரையாடலும் சுவையாக நீண்டுவிட்டது.

இரவு மணி 10.15. காலையிலிருந்து பல இடங்களுக்கு காரில் சுற்றிச் சுற்றி வந்ததால் தூக்கம் எங்கள் மூவரையும் போட்டு அமுக்கிக் கொண்டிருந்தது.

எதையும் குறிப்பறிந்து சொல்வதிலும் செய்வதிலும் வல்லவரான நண்பர் இளஞ்செல்வன் எங்கள் சூழ்நிலையை புரிந்து கொண்டு அன்புடன் வழி அனுப்பி 'வைத்தார். எல்லோருக்கும் இரவு வணக்கம் கூறி நாங்கள் தங்கியிருந்த இராம முத்தப்பன் அவர்களின் இருப்பிடத்திற்குத் திரும்பினோம். அங்கே அந்த நேரத்திலும் எங்களுக்காக விழித்திருந்து படுப்பதற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார் திரு. சிங்காரம் அவர்கள்.

மறுநாள் 28-12-77 புதன் கிழமை. பிற்பகல் கெடா மாநில எழுத்தாளர்- வாசகர் கலந்துரையாடல் ஒன்றிற்கும், மாலையில் பட்டாணிப்பாரா தோட்டத்தில் சந்திப்பு கூட்டம் ஒன்றிற்கும், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முதலில் சுங்கைப்பட்டாணி கெடாரெஸ்டாரண்டில்பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் வாசகர் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குச் சென்றோம்.

எழுத்தாளர் — வாசகர்...

நண்பர் எம். ஏ. இளஞ்செல்வன் வரவேற்புரை ஆற்றினார். அதன் பின்னர் மலேசியத் தமிழ் எழுத்துலகிலும் கலையுலகிலும் பிரசித்தி பெற்ற தலைசிறந்த எழுத்தாளர் திரு சி. கோன் அவர்களின் மறைவுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு



பெண் எழுத்தாளர்கள்
திருமதி பாக்கியம்முத்து
திருமதி சுந்தரம்பாள்


சுங்கைப்பட்டாணி முஸ்லிம் லீக் தலைவர் திரு அப்துல் காதர் தலைமை தாங்கி உரையாற்றினார் ஆசிரியர் முருகு அவர்களின் எழுத்துத் திறமையை எடுத்துக்கூறியதோடு அரசியல், சமூகம், சமயம், கலை, இலக்கியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நடுநிலைமையோடு புதிய சமுதாயத்தில் செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன என்றும் கூறினார் திரு. அப்துல் காதர்.

அதன் பின்னர் நான் பேசினேன். அடுத்து எங்கள் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினார்.

அவர் தம் உரையில் இந்நாட்டு எழுத்தாளர்களுக்கு நல்ல பல ஆலோசனைகளை எடுத்துக் கூறினார்.

"தற்சமயம் நம் நாட்டுத் தமிழ் எழுத்துலகிலே எழுத்துப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது போலத் தெரிகிறது. பல முதிய எழுத்தாளர்கள் எழுத்துலகிலிருந்து ரிட்டையராகி விட்டதைப் போலத் தெரிகிறது. இந்தத் தேக்க நிலையைப் போக்குதற்கும் எழுத்துப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கும் எழுத்துலகம் வளர்வதற்கும் நாடெங்குமுள்ள எழுத்தாளர்கள் விடாமுயற்சியுடன் நிறைய எழுத வேண்டும். இன்றைய உலக மாற்றங்களை- மாந்தரின் தேவைகளை - சமூக நிலைகளை உணர்ந்து சிறந்த தரமான படைப்புக்களைப் படைக்கும் பணியில் நம் எழுத்தாளர்கள் ஈடுபடவேண்டும்" என்று கூறினார் ஆசிரியர் முருகு.

அண்மையில் நம் நாட்டு எழுத்தாளர் திரு. சீ. முத்துசாமியின் சிறுகதை ஒன்று "குமுதம்" இதழில் பரிசு பெற்றிருப்பது நம் எழுத்துலகிற்குக் கிடைத்த ஓர் இனிக்கும் செய்தி



சுங்கைப்பட்டாணி கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.

ஆகும். இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது முத்தமிழ் வித்தகருக்கு முன்னால் தமது நினைவுப் பரிசு ஒன்றினை சி. முத்துசாமிக்கு வழங்கி வாழ்த்துக் கூறினர் நண்பர் இளஞ்செல்வன்.

அதன்பின்னர் கலந்துரையாடல் நடைபெற்றது. எழுத்தாளர்களும் வாசகர்களும் நல்ல பல கருத்து மலர்களைத் தூவி நிகழ்ச்சியில் தமிழ்மணம் பரப்பினர்கள்.

திருவாளர்கள்: எம். ஏ. இளஞ்செல்வன், சி. முத்துசாமி, வ. முனியன் வேணுகோபால், ராபர்ட் கண்ணன், திருமதி பாக்கியம் முத்து போன்றவர்கள் கருத்துக்களும் ஆலோசனைகளும் கூறியது சுவையாகவும் இருந்தன; சூடாகவும் இருந்தன! இறுதியாக மாலை 4.15க்கு திரு. கே. சுப்பிரமணியம் அவர்களின் நன்றியுரையுடன் சுங்கைப்பட்டாணி கலந்துரையாடல் நிகழ்ச்சி சுவையாக ஒரு நிறைவுக்கு வந்தது.



சுங்கைப்பட்டாணி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் சி. முத்துசாமிக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார் எம். ஏ. இளஞ்செல்வன்.

பட்டாணிப்பாரா தோட்டம்

மாலை 5.30 மணிக்கு பட்டாணிப்பாரா தோட்டத்தில் புதிய சமுதாயம் அறிமுகக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு நாங்களும் போய்ச் சேர்ந்தோம். பட்டாணிப்பாரா தோட்ட விளையாட்டு மன்றத்தினர் விளையாட்டு சங்க மண்டபத்தில் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தனர். தேநீர் விருந்துக்குப் பின்னர் இளைஞர் பகுதித் தலைவர் திரு. ஏழுமலை வரவேற்புரை ஆற்றினர். அதனை அடுத்துத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்க பட்டாணிப் பாரா கிளைச் செயலாளர் திரு. பீர் கான் அவர்கள் சமுதாய மறுமலர்ச்சி குறித்தும், சேமிப்பின் உயர்வு குறித்தும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வண்ணம் பல கருத்துக்களை எடுத்துக் கூறினர். நண்பர் எம். ஏ. இளஞ்செல்வனும் நானும் உறவுப் பயணத்தின் நோக்கங்களை எடுத்துரைத்தோம். அடுத்து பட்டாணிப்பாரா தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் திரு. சுப்பிரமணியம் சிற்றுரை ஆற்றினர். இச்சந்திப்பிற்கு பட்டாணி பாரா தோட்டத்து கிராணியார் திரு. எல்லப்பன் அவர்களும் சிறப்பு வருகை மேற்கொண்டிருந்தார்.

யுபி டிவிஷன் திரு. பி. கே. நாராயணனும் தே லேய் தோட்டத்தைச் சேர்ந்த திரு. சி. மு. மணியரசனும்கூட இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்கள். ஆசிரியர் முருகு அவர்கள் சிறப்புரையாற்றினர். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடந்தது. இரவு மணி 7.15க்கு பட்டாணிப்பாரா இளைஞர் மன்றத்துச் செயலாளர் திரு. கி. கணேசன் நன்றியுரை கூற சந்திப்புக் கூட்டம் இனிதே முடிவுற்றது. ஏற்பாட்டாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூறிவிட்டுச் சுங்கைப்பட்டாணி நோக்கித் திரும்பினேம்.


பினங்கில்

மறுநாள் (29-12-1977) பினங்கில் மாலை 7 மணிக்கு பினங்கு விஞ்ஞான பல்கலைக் கழக விரிவுரையாளரும் சிறந்த எழுத்தாளருமான திரு. ரெ. கார்த்திகேசு அவர்களும், கவிஞர் சி. அன்பானந்தம் அவர்களும் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பதை நினைவு கூர்ந்தார் எங்கள் ஆசிரியர். அதனல் இன்றிரவு சீக்கிரமே படுத்து மறுநாள் காலையில் சீக்கிரம் எழுந்து விட வேண்டும் என்ற முடிவுடன் நண்பர் இளஞ்செல்வனை அவரது இல்லத்தில் விட்டுவிட்டு இரவு வணக்கத்துடன் எங்கள் இருப்பிடம் சென்றேம்.


பத்துமலையிலே காவடி எடுத்து 272 படிகளையும் ஏறி இறங்கியது போல ஒரே களைப்பும் அசதியும் எங்களை வாட்டி எடுத்தது. அந்த அசதியோடு படுக்கைக்குச் சென்றேம்.

(இன்னும் வரும்)

பட்டாணிப் பாரா தோட்டச் சந்திப்பில் திரு. பீர்கான் பேசுகிறார். வலமிருந்து இடம்: தமிழாசிரியர் சுப்பிரமணியம், பெரிய கிராணியார் எல்லப்பன், ஆசிரியர் முருகு.



பரிசு பெற்ற பார்த்தசாரதி



இந்திரா பார்த்தசாரதி

சென்ற வருடத்தின் சாகித்ய அகாதமி பரிசு பெற்றிருக்கும் இந்திரா பார்த்தசாரதியை நிறையப்பேர் ஒரு பெண் எழுத்தாளர் என்றே நினைத்துக் கொண்டிருந்தார்கள். பெண் பெயரில் எழுதும் ஒரு சில ஆண் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். மிகவும் சமீபத்தில் எழுத ஆரம்பித்துக் குறுகிய காலத்திலேயே புகழ் பெற்றவர் இவர். "இலக்கிய வட்டத்தில்" இவர் "இ.பா" என்றே அழைக்கப்படுகிறார்.

நாற்பத்தேழு வயதாகும் திரு. ஆர். பார்த்தசாரதி, சில வருடங்களுக்கு முன்பு தஞ்சை மாவட்டம் கீழவெண்மணியில் நாற்பத்து மூன்று ஹரிஜனங்கள் உயிரோடு கொளுத்தப்பட்டதை அடிப்படையாக வைத்து எழுதிய நாவல் குருதிப்புனல். இந்தக் "குருதிப் புனல்" என்கிற நாவலுக்குத்தான் சென்ற வருடத்தின் சாகித்ய அகாதமி பரிசு கிடைத்திருக்கிறது

"தமிழில் ஏற்கெனவே ஒரு பார்த்தசாரதி (நா.பார்த்தசாரதி) இருப்பதால் பெயர்க்குழப்பம் வரக்கூடாதே என்பதற்காக என் மனைவியின் பெயருடன் என்னுடைய பெயரையும் சேர்த்த இந்திராபார்த்தசாரதி என்று வைத்துக்கொண்டேன்"– என்கிறார் இ.பா. சொந்த ஊர் தஞ்சாவூர் மன்னார்க்குடிக்கருகேயுள்ள ஒரு சிற்றூர். கும்பகோணம் உயர்நிலைப்பள்ளியைத் தொடர்ந்து அரசினர்க் கலைக் கல்லூரியில் பி.ஏ. முடித்துவிட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. முடித்தார். தலைநகரான டில்லியில் இருபத்திரண்டு வருடங்களாக வசிக்கும் இ.பா. டெல்லிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

"பிரபல நாவலாசிரியர் தி. ஜானகிராமனின் மாணவன் நான்" என்று பெருமையுடன் குறிப்பிடும் இ.பா சிறுகதைகள், நாவல்கள் மட்டுமல்லாமல் நாடகங்கள் சிலவும் எழுதியுள்ளார். இவற்றில் "போர்வை போர்த்திய உடல்கள்", "மழை" ஆகியன நாடக மேடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தின. இவரது "ஔரங்கசீப்" நாடகம் உருதுவில் மொழியாக்கம் செய்யப்பெற்று இதுவரை பதினாறுமுறை மேடையேறியுள்ளது. "மழை" மராத்தியிலும், "போர்வை போர்த்திய உடல்கள்" ஹிந்தியிலும் கூட மொழி பெயர்க்கப்பெற்று மேடையேறியுள்ளன. "மழை," "ஔரங்கசீப்" இரண்டும் மராத்தியில் புத்தகங்களாக வந்துள்ளன. பரிசு பெற்ற நாவலான குருதிப்புனல் ஆங்கிலத்தில் தற்போது அச்சாகிக் கொண்டிருக்கிறது.

சமுதாய அவலங்களையும், உள்மன வேஷங்களையும், போலித் தனங்களையும் "முகத்தில் அறைவது" போன்ற நடையில் சொல்வது இவருடைய பாணி. தனிமனித சபலங்களையும், பகட்டுக்களையும் இவர் துகிலுரித்துக்காட்டும் பொழுதும், கார்த்துப்பும் பொழுதும் சரேலென்று விலகிக் கொள்ளத் தோன்றும்.

பெரும்பாலும் எல்லாக் கதைகளுமே டில்லிச் சூழலைப் பின்னணியாகக் கொண்டவையே. "தந்திர பூமி, சுதந்திர பூமி. வேஷங்கள். திரைகளுக்கு அப்பால், ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கிவிட்டன, தீவுகள்" இவை இந்திரா பார்த்தசாரதியின் மற்ற நாவல்கள் ஆகும்.

–அமுதவன்

எழுத்தாளர்களுக்கு...

சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் குறித்தும், நமது சிறுகதை எழுத்தாளர்களின் சிந்தையைக் கிளறிய அவர்களின் கதைகளின் கருப்பொருட்கள் குறித்தும் மிக முக்கியமான ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதும் பணிக்குத் தங்களது முழுமையான ஒத்துழைப்பை இதன் வழி வேண்டுகிறேன்.

இதுவரையில் தங்களது கதைகளைத்தொகுத்து நூலாக்கியுள்ள எழுத்தாளர்கள் தயவு செய்து சிரமம்பாராமல் ஒரு பிரதியை அனுப்பி உதவ வேண்டுகிறேன். அப்பிரதிகளை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோ அனுப்பலாம். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியான கதைகளைச் சேகரித்து வைத்துள்ள எழுத்தாளர்கள் ஒரு சில கதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பிரதிகளை அனுப்பி உதவ வேண்டுகிறேன். பிரதிகளைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பவும்.

இராம. வீரசிங்கம்
87, SAGO GARDEN,
KULIM, KEDAH

இரத்த மனிதர்கள்

நள்ளிரவு.

தன் இடது கரத்து மணிக்கட்டில் கட்டியிருந்த கடிகாரத்தை ஒருமுறை உன்னிப்பாக கவனிக்கின்றார் கந்தையா. மணி சரியாகப் பன்னிரண்டு ஐந்து! "அனேகமாக இன்னும் கொஞ்சம் நேரத்தில் சப் இன்ஸ்பெக்டர் சுந்தரவேலு வந்திடுவார்... அதற்குள் இந்தப் பகுதியை மீண்டும் ஒரு முறை சுற்றி விடலாம்" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டு வேகமாக அந்த தெருவில் குறுகிய தெருக்கோடியை நோக்கி நடந்தார்

ஒரு முறைக்கு இரண்டு முறையாக சுற்றிவிட்டார். ஆனால்... அவருக்கு எந்த ஓர் தடையோ. இடைசலோ இருப்பதாக தெரியவில்லை! அவர் பணிபுரிய வந்த இந்த மூன்று மாத காலத்தில் எந்தவொரு நிகழ்ச்சியோ, சம்பவமோ அவரிடையே நிகழாமலிருப்பது அவருக்கே புரியாத புதிராக இருந்தது. அவருக்கு முன் இருந்த ஒருவர் கூட அந்தப் பகுதிகளில் சில பயங்கரவாதிகள் நடமாடுவதாக கூறிய போது, கந்தையாவுக்கு அவரின் மனத்திரையில் அவருக்கே அறியாமல் ஒருவித பயம் அவரை ஆட்கொண்டது என்னவோ உண்மைதான். ஆனால் அதனை இப்பொழுது நினைத்தால் கூட அவரை அறியாமல் சிரிப்புத்தான் வருகிறது.

அவர் பணிபுரிய வந்த இந்த மூன்று மாத காலத்தில் இதுவரை அப்படி எதுவும் நேராமல் இருப்பது அவருக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. இருப்பினும் அவரிடம் இதுவரை எந்தவொரு மாற்றமுமே தென்படவில்லை.

"ருக்குன் தெத்தாங்காவில் சேருங்கள்" என்று எப்பொழுது அவருக்கு அழைப்பு வந்ததோ, அப்பொழுதே அப்பணியை ஏற்றுக்கொண்டவர் கந்தையா. அவர் வந்த சில நாட்களில் அவருடைய சுறுசுறுப்பும், ஒத்துழைப்பும், முறைகளும் சப் இன்ஸ்பெக்டர் சுந்தரவேலுவுக்கு அதிகம் பிடித்துவிட்டதால், "கந்தையா! இனிமேல் இந்தப்பகுதிக்கு நீதான் லெப்டெனன்ட் மாதிரி!" என்று கூறிவிட்டார். கந்தையாவும் அதை ஏற்றுக்கொண்டு விட்டார். கந்தையா இந்த மூன்று மாத காலத்திலே, அவருடைய இந்த ருக்குன் தெத்தாங்கா பணியில் அவரையும் அறியாமல் அவருடைய விழிகளை ஒருநாள் கூட உறங்கவிட்டதேயில்லை. அவ்வளவு கணக்கானவர். இரவு பத்து மணிக்கு ஆரம்பித்தாரென்றால் நள்ளிரவு மணி இரண்டுவரை ஓயமாட்டார். எத்தனையோ தடவைகள் அப்பகுதியையே வலம்வந்து விடுவார்.

அப்பகுதியில் அவருக்குத் துணை வேலுதான். வேலுவை ஒரு தெரு சந்திப்பில் வைத்துவிட்டு கந்தையா மற்ற பகுதிகளை சுற்றுவார். அவர்கள் கைகளில் எப்பொழுதும் ஒரு தடி இருக்கும். வேலுவும் கந்தையாவைப் போலத்தான்! பணியில் நல்ல கண்டிப்பானவன்தான். இருந்தாலும் அவன் வாலிபன்.

அங்கிருந்த அடுக்கு மாடி வீடுகளையும், கடைத் தெருக்களையும் சுற்றியபின் அமைதியாக வந்து ஓரிடத்தில், ஒரு சுவரோரத்தில் அவரது கால்களை நீட்டிப் போட்டு சாய்ந்து உட்கார்ந்து கொண்டவர், வானத்தை அண்ணாந்து பார்க்கிறார் கந்தையா. வானத்தில் நிலவு கால் அப்பம் போல் காய்ந்து கொண்டிருந்தது! மங்கலான விளக்கொளி போல் காய்ந்தது. அதிலும் தெருவிளக்கும் மங்கலாக இருந்தது.

அவர் விரல்கள் இரண்டும் ஒரு சிகரெட் துண்டை பற்றியிருந்தன சிகரெட் துண்டை இதழ்களில் பொருத்திவைத்து, வரும் புகையை "குபு குபு"வென்று மேல் நோக்கி ஊதித் தள்ளுகிறார். குளிர்ந்த நிலவு,

பொன். சசிதரன்

குளிர்ந்த சென்றலை அவர் உடலில் வீசி, வியர்வையை உலரவைக்கின்றது. அப்படியே அமர்ந்த வண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவர், அவரின் சிகரெட் துண்டு புகைந்து சாம்பலாகிக் கொண்டிருந்ததுகூட தெரியாமல் அப்படியே அமர்ந்திருந்தார்.

நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டு சுய நினைவிற்கு வந்தவர், சிகரெட்டை கீழ் நோக்கி வீசி, பின் மிதித்து அணைத்தார். யாரோ தூரத்தில் நடமாடுவதை உன்னிப்பாக கவனித்தார். அது வேலுவைத்தவிர வேறு யாருமல்ல என்பது அவருக்கு தெரிந்ததே!

கந்தையாவுக்கு ஒரு புறம் கோபம்தான் வந்தது. இன்னுள்ள நாய்கள் குரைக்கும் சத்தத்திலேயே எதிரிகள் தப்பித்துவிடுவார்கள் என்பது முதலாவது சிந்தனை,... ஆனாலும் அப்பகுதிகளில் இருப்பதே இரண்டே நாய்கள்தாம். ஆகலால் அவைகளை யாரும் குறைகூறுவதாக இல்லை என்பது இரண்டாவது சிந்தனையாக இருந்த அதே நேரத்தில்...

ஓர் உருவம், அவர் அமர்ந்திருக்கும் அந்த இடத்திலிருந்து சுமார் முப்பத்தைந்து கெஜ தூரத்தில் "விடு விடு" என்று அசைந்து செல்வதைப் பார்த்ததும் திடுக்கிட்டார் கந்தையா. அவர் வந்த இந்த மூன்று மாத காலத்தில் இன்றுதான் அப்படி ஓர் உருவத்தை அவர் இரு விழிகளாலும் பார்த்திருக்கின்றார். அது அவருக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்த போதிலும் அவர் உடல் இலேசாக அவரையும் அறியாமல் நடுங்குவது அவருக்கே பெருத்த ஆச்சரியத்திலும் ஆச்சரியம்தான்! மனதை திடப்படுத்திக் கொண்டு அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தவர் இப்பொழுதுதான் மெதுவாக எழுந்தார். அவ்வுருவத்தை உற்று நோக்குகிறார்.

மங்கலான நிலாவெளியில் அதிலும் தெரு விளக்கொளியிலும் அந்த உருவம் நன்றாக

அவரது பார்வைக்கு புலப்பட்டதும்தான் பெரிய ஐயம் ஒன்று அவர் உள்ளத்தில் எழுகின்றது. ஆம்! ஒரு பெண். குட்டையான ஸ்கேர்ட். ஒரு வெள்ளை நிற ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். ஒரு கணம் "யார் அவள்?" என்ற கேள்வி அவர் மூளையில் தோன்றி இதழ்கள்வழி வெளிவராமல் வெளி வந்தது. அவளைப் பின் தொடர்ந்தார் கந்தையா. பெண்களைப் பற்றி அவருக்கு அனுபவமும் நிறைய உண்டு!



அவர் சட்டைப் பாக்கெட்டிலிருந்து அவர் கைப்பிடிக்குள் அடங்கும் ஒரு சிறிய டார்ச் லைட்டை எடுக்கிறார். ஆனால் அதனை அவர் இயக்கவில்லை! அவள் நடந்து அந்த சாலை முற்றத்தில் திரும்பி மற்றொரு பக்கமாக திரும்பி நடந்தாள். அது ஒரு சாலை சந்திப்பு. சாலை திருப்பத்தில் புகுந்து ஒரு லோரோங்கில் புகுந்தாள் அந்தப் பெண்.

கந்தையா அவரது நடையை வேகப்படுத்தினார். அந்த லோரோங்கில் அவர் புகும் போது அவள், அவர் கண்களுக்கு புலப்படாமல் இருந்தது அவருக்கு ஏமாற்றமாகியிருந்தது. ஆம்! அவளை காணவில்லை. நாய்கள் மட்டும் குரைத்துக் கொண்டே இருந்தன! அவர் சுற்றிலும் விழிகளை அலையவிட்டார். யாருமே கந்தையாவின் கண்களுக்கு புலப்படவில்லை. கந்தையாவின் மூளையில் எங்கே அவள்? என்ற கேள்வியே தலைதூக்கி நின்றது.

வேலுவையும் காணவில்லை. "வேலு அவளை நிச்சயமாக பார்த்திருப்பான்..." என்று ஓர் எண்ணம் அவர் மனதில் தோன்றிய பின்புதான் அவர் முகத்தில் ஒரு தெளிவு பிறந்திருக்க வேண்டும்.

கந்தையா திரும்பி நடந்தார். அவர் முதலில் அமர்ந்திருந்த அந்த இடத்திற்கு மீண்டும். திரும்பி நடந்து வந்து அமர்ந்தபோது அவர் முகத்தில் ஏற்பட்ட தெளிவு இப்பொழுது இல்லை! "எந்த நேரத்திலும் சப் இன்ஸ்பெக்டர் வந்திடுவார்" என்ற அந்த சொல்மட்டும் அவர் இதழ்வழி வெளிவந்தது. முதலிலேயே அவர் அந்தப் பெண்ணை சத்தம் போட்டு நிறுத்தி விசாரித்திருந்தால் இந்நேரம் இந்த சிரமம் இல்லை. அப்பொழுதே அவளை விசாரித்தாலும், அவள் ஏதாவது சொல்லி தப்பித்து விடுவாள். ஆதலால் அவள் வந்த காரணம் தெரியாமல் போய்விடும், என்று. அப்பொழுதே அவர் எண்ணியதும் அவருக்கு நியாயமாகத் தான் பட்டது.

"பப்ளிக் டெலிபோனில் போலீசுக்கு புகார் கொடுத்தால் என்ன?...ம்..." என்ற எண்ணம் ஒருபுறம் இருக்க, இறுதியாக ஒரு முடிவோடு மீண்டும் அவள் சென்ற அதே தெருவில் திரும்பவும் நடந்தார் கந்தையா. நாய்கள் மட்டும் குரைப்பதை நிறுத்திய பாடில்லை.

தெருக்கோடியில் இருந்த காம்பவுண்டில் நுழைந்தார் அங்கிருந்த ஒரு வீட்டை ஐயத்துடன் நோக்கினார், டார்ச் லைட்டில் வீட்டை மேலும் கீழும் ஒருமுறை கூர்ந்து பார்த்தார். வீட்டின் உட்புறம் இருள் படர்ந்து காணப்பட்டது. வீட்டின் கதவை அணுகி மெதுவாகத்தட்டினார். வீட்டினுள். யாரோ பேசும் சப்தம் கேட்டது. பிறகு ஓய்ந்தது. தொடர்ந்து வீட்டின் விளக்கு தட்டப்பட்டது. கதவும் திறக்கப்பட்டது.

கதவைத் திறந்து கந்தையாவின் எதிரே நிற்கும் அந்த மனிதனைப் பார்த்ததும் திடுக்கிட்டார். மறுகணமே அவருக்கே எல்லாம் புரிந்துபோய், ஏன்தான் கதவைத் தட்டினோம் என்றிருந்தது. அவ்வுருவத்தைப் பார்க்கிறார்... வியர்வைத் துளிகள் உடலிலும், முகத்திலும் முத்தாகி வடிந்தது. "இந்த வீட்டுக்கு, கொஞ்ச நேரத்துக்கு முன்ன யாராவது பொண்ணு"ங்க வந்திச்சா?..." என்று கந்தையா முடிக்கவில்லை...

"ஏய்...யாருக்குன் தெத்தங்கா..! உங்களுக்கெல்லாம் நேரகாலம் தெரியாதா?..." என்று முனகியவாறு மீண்டும் கதவைத் தாளிட்டுக்கொண

டான் அந்த மனிதன்.

கந்தையா பேயறைந்தது போன்று அப்படியே அசையாமல் நின்றிருந்தார்.

"பாவம் அந்த வாலிபன்... புதுத்தம்பதி போலும்..." வீணை அவன் பொன் போன்ற இன்பத்தை தொலைத்து விட்டதற்காக மிகவும் வருந்தினார் கந்தையா. மேலும் யாரையும் விசாரிக்காமல் மீண்டும் அவள் புகுந்த அதே லோரோங்கில் புகுந்தார். செடிகளும், மரங்களும் அடர்ந்திருந்தன!

யாரோ பேசும் குரல் கேட்டு அசையாது அப்படியே நின்றவர், யாரென்று உன்னிப்பாக கவனித்ததும் வியப்பால் அவரது புருவங்கள் அகல விரிந்தன! ஆம்! அவர் சற்று முன் தேடிவந்த அதே பெண்ணும் ஒரு வாலிபனும் ஒரு மரத்திற்கு பின்னால் நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். வாலிபன் யாரென்று இப்பொழுதுதான் கந்தையாவுக்கு தெரிந்தது. ஆம்! வேலுதான்!

"டேய்! வேலு!" என்று குரல் கொடுத்தார். வேலு அவர் எதிரே தலை குனிந்த வண்ணம் வந்து நின்றான்.

"ஏண்டா வேலு! இது என்னடா வேலை!... நான் அப்பவே நினைச்சேன்... உன்னை மாதிரி பசங்களை இப்படித்தான். காவலுக்கு வந்தியா? காதலிக்க வந்தியா? ஏண்டா? இன்னும் கொஞ்ச நேரத்திலே இன்ஸ்பெக்டர் வந்திடுவாருன்னு நான் தவியா தவிச்சிக்கிட்டு இருக்கிறேன். நீ என்னடானா... ஏண்டா! யாருடா அந்தப் பொண்ணு?"... என்று அடுக்கினார் கந்தையா "ஐயா!... அவள் இங்கேயே உள்ளவள்தான். பேரு... வசந்தி!... நாளைக்கு அவள் அவுங்க அண்ணன் வீட்டுக்கு, தைப்பிங் போகிறாளாம்... இனிமே அவள் ரெண்டு வாரங்கழிச்சுதான் வருவாளாம்" என்று அழாக் குறையுடன் கூறி முடித்தான். கந்தையாவின் மனம் இளகியது.

"சரி சரி! இன்னும் ஒரு ரெண்டு நிமிஷத்திலே அவளை அனுப்ப வைச்சிட்டு, உன் வேலையைக் கவனி!"... கந்தையா பழைய இடத்திற்கு பெயர்ந்தார். அவர் கூறியபடி இரண்டு நிமிஷத்தில் அந்தப் பெண்ணும் திரும்பி வந்தாள். அவள் அவரைப் பார்த்ததும் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அவர் அவள் அருகில் சென்றார். "ஏம்மா... பொண்ணு இது உனக்கே நல்லாருக்கா... சொல்லு!... அவன் ஆகான்னு உனக்கு தெரியாதா?" என்றவர் அவளை, உடல் முழுவதையும் அவரது பார்வையால் ஊடுருவினார். அவரது பார்வை அவளது நெஞ்சப்பிளவுக்குள் பாய்ந்து வெளிவருகிறது.


அவரிடம் இருந்து விடை பெருமலேயே அவள் நகர்ந்து விட்டாள். ஆடி ஆடி செல்லும் அவளை கண்ணசைக்காமல் பார்த்து நிற்கிறார் கந்தையா. அவரை அறியாமல் அவர் கொண்டுவிட்ட அந்த மோக உணர்வை அவர் முதலில் அறிந்ததாகத் தெரியவில்லை! அவரது எண்ணம் சுழன்றது. அவர் அங்கே ஒரு வீட்டில் கண்ட வாலிபனையும் நினைவு கூர்கிறார். அப்படியே அசையாமல் நின்றிருந்த அவரை அதே நேரத்தில் "மிஸ்டர் கந்தையா" என்று சப் இன்ஸ்பெக்டர் அவரை நோக்கி வந்த போது, கந்தையாவின் முகத்தில் இவ்வளவு வினாடி ஏற்பட்டிருந்த அந்த மோகரேகை இப்பொழுது முற்றாக வெளிறிப்போயிற்று!

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.
8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
10. இறுதிநாள் 10-3-1978.
11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.
P. O. Box. 2066

தமிழறிவுப் போட்டி-12 பரிசு $100



முடிவு நாள் 10-3-78

பெயர். ____________________

அடையாள அட்டை எண். ____________________

முகவரி ____________________

____

____
கையொப்பம்.

மேலிருந்து கீழ்:-

1. ஒரு வகை நோய்
2. தலைகீழாகப் பார்த்தால் புராணங்களில் வரும் அசுரர்களின் பெயரோடு அநேகமாக இந்தப் பெயர் இணைந்திருக்கும்.
3. இது இல்லாத அரசனா?
4. பரத நாட்டியங்களில ரசிக்கக் கூடிய ஓர் அம்சம்.
5. செல்வத்துக்குரிய கடவுள்.
6. திருமால் இதுவரை எடுக்காத அவதாரம்.
7. கணவன்.

இடமிருந்து வலம்:-

1. உருண்டையானது.
3. இதை விரும்பாத தமிழ்ப் பெண் திருமணத்தின்போது பயன் படுத்தித்தான் ஆக வேண்டும்.
4. இந்தப் பெயரை முதலடியாய்க் கொண்டு, இரண்டு தமிழ்க் கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள்.
6. ஒரு வாத்தியம்.
7. இது கூட சமயங்களில் சகுனம் சொல்லுமே!
8. மர்ம நாவல் படிக்கும்போது இந்த உணர்வு ஏற்படும்!
9. ஆயுதம்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

19-2-78- புதிய சாம்ராஜியம் எழுத்து: பெர்லிஸ் கே. அஞ்சலை.

26-2-78- உறவுக்கு அழிவில்லை. எழுத்து: தலைநகர் கிருஷ்ணம்மா

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

11-2-78 நினைவுகள் காத்திருக்கின்றன. கோலக்கிட்டில் கியாக் செங் டிவிசன், டி. லெட்சுமணன் எழுதியது.

18-2-78 நீதியின் முன்னே. தலைநகர் சந்திரா சண்முகம் எழுதியது.

25-2-78 நமக்குள் இருக்கட்டும். கம்பார் எஸ். வேலுமதி எழுதியது.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

11-2-78 கங்கார் எஸ். கமலா சங்கர் எழுதிய மாமனார் மெச்சிய மருமகன்.

18-2-78 தலைநகர் பகவீபன் எழுதிய இது அத்தான் வேலை தானோ?

25-2-78 பெந்தோங் வி. பத்மா தேவி எழுதிய மாறிப் போச்சு நெஞ்சம்.

இஸ்லாமிய நாடகம்

(வியாழன் தோறும் இரவு 8.30க்கு ஒலிபரப்பாகிறது)

16-2-78 லாபு எஸ்.ஓ.ஏ. சைட் ஜபார் பாஷா எழுதிய நேர்க்கோடு.

சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

12-2-78 பிள்ளையின் அருமை. எழுத்து: எஸ். வேலுமதி கம்பார்.

19-2-78 மாறியது உள்ளம். எழுத்து: ந. வரதராசன் தைப்பிங்.

சிறப்பு நாடகம்

20-2-78 நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தநாள் சிறப்பு நாடகம். எழுத்து: தலைநகர் ப. மு அன்வர்.

முன்னோட்டம்

rtm

தொலைக்காட்சி

11-2-78 சனிக்கிழமை மாலை மணி 4.08க்கு இந்திப்படம்- "டோலி"

16-2-78 வியாழக்கிழமை மாலை மணி 5.32க்கு இந்திப்படம் "அவ்ராட்"



18-2-78 சனிக்கிழமை மாலை மணி 4.08க்கு தமிழ்ப்படம்- "வாழையடி வாழை" முத்துராமன், பிரமிளா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இந்தச் சமூகப்படத்தினை இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்துள்ளார். இதுதான் நடிகை பிரமிளாவின் முதல் படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

23-2-78 வியாழன் மாலை மணி 5.32க்கு தமிழ்ப்படம்-தாய்ப்பாசம் சிவகுமாரும் பிரமிளாவும் நடித்துள்ளார்கள். "முத்துமகன் வந்துனக்குப் பொறப்பான்" "என்னோடு கண்ணன் ஏன் பேசவில்லை" போன்ற புகழ்பெற்ற பாடல்கள் இப்படத்தில் இடம் பெற்றுள்ளன.

ரங்காயான் மேரா நிகழ்ச்சித் தொகுப்பு:

திங்கள்தோறும்: காலை 7.13க்குக் காலைக் கதம்பம், மாலை 6.31க்கு நமது விருந்தினர், இரவு மணி 7.15க்கு நல்ல குடும்பம், இரவு 8.45க்கு அந்தி மலர்.

இரவு 9.15க்கு விளையாட்டு அரங்கம்.

வெள்ளிக்கிழமைதோறும்: இரவு மணி 10க்கு 'பழம் பாடல் நேயர் விருப்பம். (பழைய படங்களிலிருந்து நேயர்கள் விரும்பிக் கேட்கும் பாடல்களின் அரைமணிநேரத் தொகுப்பு)

சனிக்கிழமைதோறும்: இரவு மணி 8.10க்கு நெஞ்சின் அலைகள். (தயாரிப்பு: பார்த்திபன்)

கண்ணோட்டம்

நேயர் விருப்பம்

ஞாயிற்றுக் கிழமைகளில் ஒலியேறும் வட்டார வாழ்த்து நேயர் விருப்பத்தைப்பற்றி ஒன்றை இங்குக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

திருமண வாழ்த்துக்கும் சரி, பிறந்த நாள் வாழ்த்துக்கும் சரி, சொல்லி வைத்தாற்போல் ஒவ்வொரு கிழமையும் ஒரே மாதிரியான பாடல்களையே ஒலிபரப்புகின்றனர். இது சலிப்புத்தட்டி அலுப்பை உண்டாக்குகிறது.

பாடல்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுப் போய்விட்டதோ என்று எண்ணவும் தோன்றுகிறது. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இதைக் கவனத்திற்கொண்டு வெவ்வேறு மனங்கவரும் பாடல்களை ஒலியேற்ற முனைவாரென நம்புகிறேன்.

இரா. இராமராவ்
தலைநகர்

உண்மைகள்

௨ம் பகுதி

சா. ஆ. அன்பானந்தன்

பையைத் தூக்கிக் கொண்டு அப்பா நிமிர்ந்ததும் அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன் உயிரை எமன் வந்து தூக்கிக்கொண்டு போவது போல உணர்ந்தாளோ என்னவோ, ஓடிவந்து அப்பாவின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் அம்மா.

"ஏந்தே! எங்களப் பிரிஞ்சு தான் போவப் போறியா? இந்தாப் பாருதே! ரெண்டு பொண்ணுங்களையும் ரெண்டு பிள்ளைகளையும் விட்டுட்டுப் போவப் போறியா? நான் ஒண்டி பொம்பள என்னமா இதுங்கள காப்பாத்தப் போறேன்! சொல்லுதே! சொல்லு!"

அம்மா கதறி அழுவதை விவரம் தெரியாத என்னாலும் என் தம்பி வரதனாலும் கூட புரிந்து கொள்ள முடிந்தது. என் மூத்த அக்காள் பாக்கியமும் சின்ன அக்காள் தனமும் விவரம் தெரிந்தவர்கள். அவர்களும் "ஓ"வென்று கதறத் தொடங்கி விட்டார்கள். நானும் தம்பியும் நடக்கக்கூடாத ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை உணர்ந்து கொண்டோம் எங்களுக்கும் எல்லாரும் அழுவதைப் பார்த்துப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நாங்களும் "ஓ" என்று அழத் தொடங்கிவிட்டோம்.

அப்பாவோ தூக்கிய பையைப் பிடித்தவாறே தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்.

"இந்தா முருவம்மா" அழாதே! நீ அழறதப் பார்த்து பிள்ளைங்களும் அழறதப்பாரு! நாம என்ன செய்ய இருக்கு! நம்பள இப்படி ஆட்டிக் வைக்கணும்னு விதி இருக்கே! அவன் எழுதிய மனுசங்க நாம அழிச்சு எழுதிட முடியுமா? உங்கள எல்லாம் விட்டுட்டு என்னாலதான் போய்ட முடியுமா, முருவம்மா! சொல்லு உயிர விட்டுட்டு உடம்பு மட்டும் போய்ட முடியுமா?" அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்ட அப்பா பேசினார் இப்படி.

"ஐயோ! என்ன அநியாயம் அந்த கடவுளுக்குக் கூட கண்ணு கெட்டுப் போச்சா! மனசு இரும்பாப் போச்சா! இரக்கங்கிறதே இல்லையா? இந்தப் பாவி சப்பாங்கார பசங்கள ஒரே அடியா அழிச்சுட மாட்டானா? எங்க வயிறு எரிய எரிய குலை துடிக்கத் துடிக்க எங்க தாலிய அறுக்கிறானே பாவி! அவன் உருப்படுவானா! அவன் தலையில இடிவிழாதா? இப்படி எங்கள

> நில அமைப்பில் இறக்கம், ஏற்றம் இருப்பது உண்மைதான். ஆனால் வாழ்க்கையில் பெரும்பகுதி மக்களுக்கு இறக்கம் மட்டுமே சொந்தமாகவும், இருள் மட்டுமே உரிமையாகவும் இருப்பதை எதைக் கொண்டு மறுக்க முடியும்.

அனாதையா ஆக்கிப்புட்டு எங்க புருசனுங்கள கூட்டிக்கிட்டுப் போறானுங்களே!"

அம்மா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுவதைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருந்தது.

சயாமுக்கு முதன் முதலாக ஆள் திரட்டிக் கொண்டிருந்தார்கள் ஜப்பானியர்கள். அந்த வரிசையில் உலுகலிடோனியா தோட்டத்துக்கும் வந்துவிட்டார்கள். அவர்கள் உத்தரவை யார்தான் மீற முடிந்தது. அந்தக் காலத்தில் அதன்படிதான் எங்கப்பாவும் ஒருவராக அழைக்கப்பட்டிருந்தார்.

என்ன செய்வது! இந்தக் காலத்தில் நம்மைக் காப்பாற்ற எப்படி ஒரு நாதியும் கிடையாதோ, அப்படியே அந்த நாளிலும் நமக்காகப் பேச நாதி இருந்தது கிடையாது.

"கவலைப்படாதே முருவம்மா! எல்லாத்துக்கும் கடவுள் இருக்கிறான். வேலைக்குத் தானே போறோம். சீக்கிரமா திரும்பி விடுவோம். சாமிய வேண்டிக்க, நல்லபடியாக திரும்பிடுவோம் பிள்ளைகளைப் பார்த்துக்க! அய்யாவும் வரதனும்..."


அப்பாவால் அதற்கு மேல் பேச முடியவில்லை. பையைக் கீழே போட்டுவிட்டு அவருடைய கால்களைப் பிடித்திருந்த என்னையும் தம்பி வரதனையும் அப்படியே ஒரு சேர அணைத்துக் கொண்டு அப்பா குமுறியபோது எங்கள் பிஞ்சு மனங்களும் குலுங்கின.

அப்பா அணைத்தார்... அந்த அணைப்பு... இப்போது நினைத்தாலும் அதன் மகிமையை மறக்க முடியவில்லை. உரமேறிய உடம்பானாலும் எங்களுக்கு அந்த உடம்புதான் பஞ்சு மெத்தை. சுகமேடை. சொர்க்கத்தில் இன்பம். அப்பா அழ நாங்கள் அழ - நாங்கள் அழ, அப்பா அழ, எங்கள் வீடே ஓர் எழவு வீடு போல...

"மாமா! பார்த்தீங்களா மாமா! எங்கள தனியா விட்டுட்

டுப் போறாரு இதுக்கு ஒரு முடிவு காலம் வராதா மாமா" அம்மா தாத்தாவைப் பார்த்து அழத் தொடங்கி விட்டாள்.

"முருவம்மா; இந்தா பாரும்மா! கவலைப்படாதே. நாம்ப எப்பவும் சிரிச்சிக்கிட்டிருந்த சனங்க இல்லேம்மா! எப்பவும் அழுதுகிட்டிருக்கிற சனங்க தான். நாம்ப என்னைக்கு நல்லா இருந்தோம். இன்னைக்கு மட்டும் சந்தோசமா இருக்க.. சீனிக்குக் காக்கா, ஒட்டம்னு "பேமானி" பசங்க கூட்டிக்கிட்டு வந்து கண்ணைக் கட்டி காட்டுல உட்ட மாதிரி இங்க கித்தாக் காட்டுல உட்டுட்டானுங்க! இப்ப நம்பள சயாமுக்கு கூட்டிக்கிட்டுப் போறானுங்க! நாள பின்னே எங்க கொண்டு போறானுங்களோன்னு நம்பிப் படைச்ச கடவுளாலகூட சொல்ல முடியாதும்மா!"



தாத்தா சமாதானம் சொன்னாலும் அவர் மனத்தில் சமாதானம் வேலை செய்யவில்லை என்பதை அவர் குரல் எடுத்துக் காட்டியது. அவர் விழிகளில் கவலை வேஷம் போட்டிருந்தது. அவர் உதடுகள் அவலத்தை நடித்துக் கொண்டிருந்தன. அவரின் கைகள் பதற்றமுடன் நடுங்கிக் கொண்டிருந்தன.

நானும் தம்பி வரதனும் அப்பாவின் கால்களைவிடவில்லை. அப்பா குனிந்து பார்த்தார். நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தார். அம்மாவோ துக்கம் தாங்காமல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

தாத்தா அம்மாவின் தலையைக் கோதிவிட்டவாறு பேசினார். "முருவம்மா! நேரம் ஆச்சும்மா! அந்தக் கட்டப் பசங்க காட்டுப் பண்டி மாதிரி "கர்ருபுர்"ருன்னு உறுமிக்கிட்டு நிக்கிறாங்களாம். நம்ப மாசிலாமணி கங்காணி வந்து சொல்லிட்டுப் போனாரு. பாப்பாத்தியும் உன்னை மாதிரிதான் அழுது பொரண்டா! ஆனா, என்ன பண்றது. அவன் எழுதுன எழுத்த நம்பளால அழிச்சு எழுதிட முடியுமான்னு அனுப்பி வைச்சுட்டா! அவளுக்கு என்ன வயசுன்னு உனக்குத் தெரியாதாம்மா! நான் மட்டும்தான் பாப்பாத்திக்குத் துணை! இருந்தும் உட்டுட்டுப் போறேன்... திரும்பி வர்ரப்ப..." தாத்தாவால் பேச முடியவில்லை. பைப்பைத் திறந்தால் ஓடிவரும் தண்ணீர் போல் அவர் கண்களில் கண்ணீர் ஓடிவந்து கொண்டிருந்தது.

தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார். கித்தா மர இடுக்கில் கோட்டை விட்டு ஓடும் பாலை மண் கொண்டு அடைக்க அடைக்க அதையும் மீறி வெளிப்படுகிற பாலைப் போல அவர் கண்களிலிருந்து துடைக்கத் துடைக்கக் கண்ணீர் பெருகிக் கொண்டே இருந்தது.

"சயாம்" பயணத்தை எவரும் விரும்பவில்லை என்பது இதிலிருந்து நன்றாகத் தெரிந்தது. அந்தப் பாப்பாத்தி பாட்டிக்கு எவ்வளவு துயரம் இருக்கும்...

"மாமா! நீங்கள் இப்படி அழுதா! நாங்களெல்லாம் எப்படித்தான் சமாளிக்கப் போறோம்" அப்பா தாத்தாவின் தோளைப் பிடித்தார்.

சாமிநாதா! என் பேரே உறங்காப் புலிதாண்டா, கலங்கி அறியாதவன்தாண்டா! ஆனா வயதானவள் தனியா உட்டுட்டுப் போகப் போறேனேன்னு நினைக்கும் போது மனசு தாங்கலே.

இம்! அழுது ஒண்ணும் ஆகப் போறதில்ல. பெட்டிய தூக்கு... புறப்படுவோம். முருவம்மா! தைரியமா இரு... கலங்காதே. எல்லாத்துக்கும் கடவுளு ஒருத்தன் இருக்கான்."

தாத்தா முகத்தை அழுத்தித் தேய்த்துக் கொண்டார். துண்டின் நுனியால் கண்களைத் துடைத்துக் கொண்டார். அம்மாவைக் கைகொடுத்துத் தூக்கி நிறுத்தினார்.

தாத்தாவால் அம்மாவைத் தூக்கி நிறுத்தத்தான் முடிந்ததே தவிர ஒட்டுககன்றிலிருந்து ஒடுகிறபாலைப்போல் ஊற்றுகிற தண்ணீரை நிறுத்த முடியவில்லை. ஏன் எங்கள் தோட்டத்து மாரியம்மன் சாமியால்கூட அது ஆகாது போலிருக்கிறது.

"சரி! முருவம்மா, அய்யாவு... வரதா, பாக்கியம், தனம்! அப்ப போய்ட்டு வர்ரேன்டா! அழாதீங்க, டேய் அய்யாவு, நீங்க சாண்பிள்ளையானலும் ஆண்பிள்ளைங்கடா! அம்மாவப் பாத்துக்கங்க. அக்காமார்களைப் பார்த்துக்கங்க" என்று சொல்லி விட்டு அப்பா பெட்டியை மீண்டும் தூக்கி நடந்தார் வாசல் வரை.

அவ்வளவுதான் மீண்டும் அம்மா அலறத் தொடங்கி விட்டாள். அதன்பிறகு எங்களாலும் சும்மா இருக்கமுடியவில்லை. நாங்களும் அப்பா, அப்பா எனக் கத்தினோம். தாத்தா எங்கள் கைகளைப்பிடித்துக் கன்னத்தைத் துடைத்துவிட்டு அமைதிப் படுத்தினார்.

"டேய்! சாமிநாதா. என்னடா பண்ணிக்கிட்டிருக்கிற! எம்மாம் நேரமா கத்திக்கிட்டிருக்கிறது. இப்பவே ரெண்டு பேரு வாங்கிக்கிட்டானுங்க!" மூச்சுவாங்க ஓடிவந்த தாத்தா முருகன் கங்காணி பரபரத்தார்.

மேக்கடையை விட்டு அப்பா கீழிறங்கினார். அவரைத் தொடர்ந்து தாத்தா உறங்காப் புலியும் கீழே இறங்கினார். நாங்கள் இறங்கவில்லை. ஏறத்தாழ படிக்கட்டில் உருண்டு வந்து கீழே விழுந்தோம் என்றுதான் சொல்லவேண்டும்.

அப்பாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை...

"முருவம்மா! அழாதேம்மா! அம்மாவுக்குப் பிறகு நீதான்மா எனக்கு அம்மா! உன்னைப் பிரிஞ்சுப் போறது எனக்கு மட்டும் சந்தோசமாவா இருக்கும். அழாதே! அதோ பாரு! தனமும் பாக்கியமும் எப்படி அழுவுதுங்க! இங்க பாரு அய்யாவும் வரதனும் எப்படி அழுறானுங்க? நீ தைரியமா இருந்தாதானே பிள்ளைங்களும் தைரியமா இருப்பாங்க. அழாதே! வந்துடுவேன். சீக்கிரமா வந்துடுவேன். உங்களை எல்லாம் பிரிஞ்சு என்னால ரொம்ப நாளைக்கு இருக்கமுடியாது" அப்பா அம்மாவுக்கு ஆறுதல் சொல்லும் போதே மாசிலாமணி கங்காணி மீண்டும் கத்தினார்.

"இந்தாம்மா முருவம்மா. விடும்மா அவன! அவன் எங்கே போகப் போறான். வேலைக்குத் தானே போறான், போகும் போது இப்படி நடந்துக்கப் படாதுன்னு உனக்குத் தெரியாதா நாங்கள்ளாம் இல்லியா! இம். விடும்மா. டேய் பொடுசுகளா. அப்பாவை விடுங்கடா! உன் அப்பங்காரன் திரும்பி வரும்போது ரொம்ப ரொம்ப முட்டாய் சட்டை எல்லாம் வாங்கி வருவான்... வழியனுப்பி வையுங்கடா" என்று எங்கள் கைகளை அப்பாவிடமிருந்து விடுவித்தார். அம்மாவும் ஓரளவு சமாதானம் அடைந்தாள். தடுத்துத்தான் ஆகப் போவது என்ன!

விடைசொல்லிக் கொண்டு அப்பா முன்னே போனார். தாத்தா உறங்காப்புலியும் கங்காணி மாசிலாமணியும் பின்னே போனார்கள். நாங்கள் எல்லாரும் அவர்கள் பின்னால் சென்றோம். எங்கள் மேக்கடை லயத்தைக் கடந்ததும் ஒரு பெரிய இறக்கம் இருந்தது. பிறகொரு ஏற்றம். இந்த மேட்டிலிருந்து அந்த மேட்டில் என்ன நடக்கிறது என்று நன்றாகப் பார்க்க முடிந்தது.

ஐந்தாறு லாரிகள் நின்று கொண்டிருந்தன. நம் இராமாயணக் கூத்தில் இராவணன் மாதிரி இடையில் கத்தி சகிதமாய் ஜப்பானியர்கள் தொப்பியும் அதன் மத்தியில் முத்திரையுமாக நடந்துகொண்டிருந்தார்கள். சிலர் லாரியில் ஏறிக் கொண்டிருந்தார்கள். "பெட்டி காம்பரா"விலிருந்து லாரியில் தூக்கிப் போடப்படும் "பேல்" பெட்டிகளைப்போல லாரிக்குள் சிலர் தூக்கிப் போடப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அம்மாவைப்போல மேலும் பல அம்மாக்கள் அழுதுபுலம்புவது நன்றாகத் தெரிந்தது; கேட்டது.

நில அமைப்பில் இறக்கம் ஏற்றம் இருப்பது உண்மைதான். ஆனால் வாழ்க்கையில் பெரும்பகுதி மக்களுக்கு இறக்கம் மட்டுமே சொந்தமாகவும் இருள்மட்டுமே உரிமையாகவும் இருப்பதை எதைக் கொண்டுதான் மறுக்க முடியும்.

நாங்கள் இறங்கினோம். சின்னதொரு மரப்பாலம். அதனடியில் ஓர் ஓடை. அந்த ஓடைநீர் ஸ்டோரிலிருந்து வரும் பால்கலந்த தண்ணீரும் கலந்து தெளிவும் தெளிவில்லாமலும் ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் வாழ்க்கையும் அப்படித்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அந்த வயதிலேயே தில் நினைத்துக்கொண்டேன்.

பிறகு ஏற்றம் ஏறினோம். இரவு பெய்த மழையால் மேட்டுப்பாதையும் வழுக்கியது. ஏழைகளுக்கு எப்போதும் இறக்கமும் வழுக்குகிறது. ஏற்றமும் வழுக்குகிறது.

குமாரி யாங் ஃபெங் ஹுவான் தைவானைச் சேர்ந்த ஒரு கல்லூரிப் பெண்ணவாள். இவர் தன் தாயைப் பீடித்திருந்த புற்றுநோயைக் குணமாக்கத் தன்னுடைய கரத்தின் சதையைக் கொஞ்சம் வெட்டி அதனுடன் ஒருவகை சீன மருந்தைக் கலந்து, சமைத்துத் தாய்க்குக் கொடுத்தாள். ஏதோ ஒரு பழைய சீனக்கதையில் கண்ட மருத்துவத்தைப் பின்பற்றியதாக அவள் கூறினாள். ஆனாலும் அம்மருத்துவ முறை வெற்றியளிக்கவில்லை.

"இள வயதில் நான் வேலை தேடி அலைந்தேன். கிடைக்கவில்லை. என் பெற்றோர்களைக் காப்பாற்ற வேறு வழியின்றிப் பெண்களுக்கான உள்ளாடைகளைத் தயாரிக்கும் வேலையில் சேர்ந்தேன். நாளொன்றுக்கு 20 உருப்படிகள் வரை தயாரித்திருக்கிறேன். வயிற்றுப் பிழைப்பிற்காக நான் அப்படிச் செய்யவேண்டி வந்தது" இப்படிக் கூறுபவர் யார் தெரியுமா? இந்தோனேஷியாவின் அதிபர் சுகார்த்தோ தான்!

ஹாங்காங்கின் கேண்டன் நகரத்தினருகில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மனித எலும்புக்கூடுகளை அகழ்ந்தெடுத்துள்ளனர். இதன் மூலம் கி.மு. 475-221 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்து வாழ்க்கை நிலைமைகளை அறிந்து கொள்ளமுடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

ஒருவாறு பிரட்டுக்களத்துக்கு வந்துவிட்டோம். முன்னுல்ஆபீஸ் இருந்தது. அதற்குப் பக்கத்தில்தான் பிரட்டுக்களம் இருந்தது. அங்கேதான் லாரிகளும் இருந்தன. ஜப்பானியர்களும் நின்று கொண்டிருந்தனர்.

மூட்டை முடிச்சுக்களோடு சயாமுக்குப் போகிறவர்கள் லாரியிலும் கீழும் குவிந்து கிடந்தனர். எங்களைப்போலும் சின்னஞ்சிறிசுகளும் அழுகையும் சளியும் மூக்கில் வழியும் வேதனையோடு தேம்பிக் கொண்டிருந்தனர்.

"பிகில்" ஊதப்பட்டது. ஜப்பான்காரன் ஒருவன் முறுக்கைக் கடிப்பதைப்போல "கர்ரு புர்ரு" என்ருன். அவ்வளவுதான். ஜப்பானிய வீரர்கள் ஒவ்வொருவரும் சுறு சுறுப்பு அடைந்தார்கள். லாரியில் கீழே இருந்தவர்களையும் ஏறச் சொன்ஞர்கள்.

அப்பாவும் அம்மாவிடம் சொல்லிக்கொண்டார். எங்கள் ஒவ்வொருவரையும் அணைத்து முத்தங்கொடுத்தார். அப்பாவின் உதடு துடித்தது. கண்ணீர் சுட்டது. மீண்டும் ஏன் அழுதோம்? எங்களுக்கு மீண்டும் அழுகை வந்தது. விவரம் அப்போது தெரியவில்லை. இப்போது தெரிகிறது. ஆம்! அதுதான் ரத்த பாசம்.

அப்பா லாரியில் ஏறினுர். ஒவ்வொரு அப்பாமாரும் இப்படித்தான் விடைசொன்ஞர்கள். அத்தனைபேரும் அப்படித்தான் நடந்துகொண்டார்கள். நான்கு ஐந்துபேர் மட்டும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்கள் காலியாட்கள். கால்கட்டா, கைகட்டா? தாயா பிள்ளையா? ஏதுமில்லாதவர்கள். நிரையை விட்டு விலகி, பீஞக்காட்டில் முளைத்த மரங்கள் அவர்கள்.

சிலர் குடும்பத்தையே கூட்டிக் கொண்டார்கள். அவர்களுக்கு ஏதோ ஒரு நம்பிக்கை இருந்தது. குடும்பமாகவே சம்பாதித்துக் கொள்ளலாம் என்கிற நோக்கமோ அல்லது கெட்டது எதுவாஞலும் ஒன்ருகவே அனுபவிக்கலாம் என்கிற முடிவோ தெரியவில்லை.

மீண்டும் ஒரு "பிகில்" ஊதப்பட்டது. எல்லாரும் ஏறிக்கொண்டார்கள். லாரி புறப்பட்டது: ஆட்டைக்கவ்விக்கொண்ட புலி உறுமிக்கொண்டு போவது போல் லாரி நம்மவர்களை எல்லாம் ஏற்றிக் கொண்டு புறப்பட்டது.

வண்டி புறப்பட்டதும் நாங்கள் மட்டுமல்ல, எல்லாருமே ஒருசேர அழத் தொடங்கிவிட்டோம்.

சவ வண்டியைப் போக விடாமல் தடுப்பது போலவும், வண்டியைத் தடுக்கப்போய். சிலர் தடுத்து இழுத்து வருவது போலவும் வண்டி போகையிலே தரையில் விழுந்து புரண்டு அழுவது போலவும் நாங்கள் லாரிகளைத் தடுத்தோம். அதிலிருந்து நாங்கள் விடுவிக்கப்பட்டோம். வண்டி நகர்ந்ததும் எங்கள் அம்மாமார்கள் தரையில் புரண்டதும்... இப்பொழுது நினைத்தாலும் பொறுக்க முடியவில்லை.

நாங்கள் "அப்பா! அப்பா!" என்று பின்ஞலேயே ஓடினேம். "அப்பாவும், "அய்யாவு, 'வரதா' தனம், பாக்கிய , முருவம்மா" என்று கூவிக்கொண்டே இருந்தார் வண்டி வேகமடைந்தது. மிஷினுக்குள் போகிற சேட்டிப் பாலைப் போல லாரி போய்க் கொண்டே இருந்தது.

லாரிகளின் "எக்சோஸ்" குழாய்கள் கரும் புகையைக் கக்கின. ஆம்! புகை மண்டலம் எங்கள் கண்களை எரித்தது... நாங்கள் நின்ருேம்; ஆஞல் லாரிகள் போய்விட்டன...

திருப்பி வந்து பார்த்த போது கணவன்மார்களைப் போர்க்களம் அனுப்பிவிட்டுத் தனித்துவிடப்பட்ட பெண்களை போ. எங்கள் உலு கலிடோனி யாவும் அப்படிப்பட்டவர்களைக் கண்டது...

இந்தத் துயரப்புகை எங்கள் நெஞ்சை மட்டுமல்ல, கண்களையும் அப்பிக்கொண்டபோது எங்களின் பார்வையும் கறுவடைந்தது...

"அத்தான்!" குரல் கேட்டுத் திரும்பினேன்... மனைவி கண்பணி கையில் தேநீரோடு நின்ருள். ஆமாம், இதுவரை கடந்துபோன அந்த உலகத்தில் தான் மூழ்கி இருந்தேன். கண்களைத் துடைத்துக்கொண்டு தேநீரை வாங்கிக்கொண்டேன். அதை வாயில் வைத்தபோது அதுவும் சுடத் தவறவில்லை.

(வளரும்)

சிரிப்புக்குப் பஞ்சமில்லை!



ஒருமுறை ஹாலிவுட்டின் பிரபல கதாசிரியரான சார்லஸ் மேக் ஆர்த்தர் நகைச்சுவைக் காட்சிகளை அமைப்பதில்தான் மிகவும் கஷ்டப்படுவதாக நகைச்சுவை மன்னர் சார்லி சாப்ளினிடம் கூறினுர்.

"பெருத்த உருவமுடைய ஒரு மாது சாலையில் நடந்து போவதாக ஒரு காட்சி. இதில் நகைச்சுவையை எப்படிப் புகுத்துவது? அந்த மாது ஒரு வாழைப்பழத் தோலில் கால் வைத்து வழுக்கி விழுவதாக அமைக்கலாம். ஆஞல் இது போன்ற காட்சிகள் ஆயிரக் கணக்கான தடவைகள் படமாக்கப்பட்டுவிட்டன. அல்லது முதல்காட்சியில் வெறும் வாழைப் பழத் தோலைக் காட்டிவிட்டு, அடுத்த காட்சியில் அந்தத் தடித்த மாதைக் காட்டிவிட்டு. மூன்ருவது காட்சியில் திடீரென்று அவர் வழுக்கி விழுவதாகக் காட்டுவதா? எப்படித்தான் மக்களைச் சிரிக்க வைப்பது?" -என்று மேக் ஆர்த்தர் குறைபட்டுக்கொண்டார்.

உடனே சார்லி சாப்ளின் அமைதியாகக் கூறினுர். "இரண்டு முறைகளும் வேண்டாம். முதல் காட்சியில் வாழைப்பழத் தோலைக் காட்டுங்கள். இரண்டாவது காட்சியில் அந்த மாது வாழைப்பழத் தோலை நெருங்குவதாகக் காட்டுங்கள். மூன்ருவது காட்சியில் அந்த மாது வாழைப்பழத் தோலில் கால் வைக்காது தாண்டிச், சென்று சாலையோரமாகத் தோண்டப்பட்டிருக்கும் குழியில் போய் விழுவதாகக் காட்டுங்கள். அப்புறம் பாருங்களேன்! சிரிப்புக்குப் பஞ்சமிருக்காது"

பிரதமர் வசனம் எழுதுகிறார்!



இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் விரைவில் திரைப்பட வசனகர்த்தாவாகப் போகிறார். ராமானந்த சாகர் டைரக்ட் செய்யப் போகும் "மகாபாரதம்" படத்திற்குத்தான் மொரார்ஜி வசனம் எழுதப்போகிறார்.

இதில் சசிகபூர் கிருஷ்ணனாகவும், ஹேமமாலினி திரௌபதியாகவும், தர்மேந்திரா அர்ஜுனனாகவும் நடிப்பார்கள். இத்தகவலை "மார்னிங் எக்கோ" வெளியிட்டுள்ளது.

ஊறுகாய்

நடிகர் ஸ்ரீகாந்துக்கு மிகவும் பிடித்தமான சாப்பாடு தயிர் சாதமும் பச்சை மிளகு ஊறுகாயும்தான்! படப்பிடிப்பு நேரங்களில் அவருக்கு வீட்டிலிருந்து அனுப்பப்படும் பகல் சாப்பாட்டில் இவை இரண்டும்தான் பிரமாதமாக இருக்கும்! பகல் சாப்பிட்டானதும் மேக் அப் அறையிலேயே ஒரு சிறு தூக்கம் போடுவார். அப்பொழுதான் அவரால் மேற்கொண்டு சுறுசுறுப்பாக நடிக்க முடியும்.

முதலமைச்சர் நடிக்கிறார்!

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். முதல் மந்திரி பதவியில் இருந்து கொண்டே தமிழ்த் திரைப்படங்களில் நடிக்க முடிவு செய்துள்ளார். மே திங்கள் முதல் தேதி முதல் அவர் படப்பிடிப்பில் கலந்து கொள்வார். இதுவரை ஒப்புக் கொண்ட படங்களிலும், மற்றும் சில புதுப்படங்களிலும் "மக்கள் திலகம்" எம். ஜி. ஆர். நடிப்பார்.



"நான் அப்பவே நெனைச்சேன்... நீங்க இந்த முடிவுக்குத்தான் வருவீங்கன்னு!" என்று "பொன்மனச்செம்மல்" எம். ஜி ஆருக்கு வரவேற்பு கூறுகிறாரோ பத்மபிரியா? தயாரிப்பிலிருக்கும் "நல்லதை நாடு கேட்கும்" திரையில் இக்காட்சி வருகிறது.

முத்தமா? OK

இந்தியப் படங்களில் அவசியமானால் முத்தக்காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று மத்திய ரேடியோ மந்திரி எல். கே. அத்வானி நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். என்றாலும் படங்களில் ஆபாசம், அருவருப்பான எண்ணங்களைத் தூண்டும் வகையில் முத்தக்காட்சிகளை அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறியுள்ளார். அண்மையில் சென்னையில் நடைபெற்ற கனகாம்பரா என்ற கன்னடப்படத்தில் முத்தக்காட்சி ஒன்றை தணிக்கை அதிகாரிகள் அனுமதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எலியும் பூனையும்

இந்தி நடிகை மௌசுமியும் கவர்ச்சி நடிகை ரேகாவும் இந்திப்படவுலகில் எலியும் பூனையும் போன்றவர்கள். அண்மையில் ரேகாவைப்பற்றி அபிப்பிராயம் கேட்டபோது மௌசுமி ஒரு நிருபரிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்.

"ரேகாவுக்கும் நடிப்புக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. கன்னங்கரேல் என்று இருக்கும் அவளுக்கு மேக்கப் போட்டு முடியவே மூன்று மணி நேரம் வேண்டும். செட்டுக்கு வெளியே நன்றாக நடிப்பாள். அவ்வளவுதான்!"

14 பெயர்கள்

லில்லி, ரோஸி, ஜிக்கி, பன்னி, டும்பு, ராஜா, ஜோதி, பிளம்பி, டிட்டு, மிக்கி, ஷயிட்டி, பிளாக்கி ரவி, ஜூலி இந்த 14 பெயர்களும் யாருடையவை? இவை நடிகை ஜமுனா வளர்த்துவரும் நாய்களின் பெயர்கள்.

தடை செய்க!

இத்தாலிய திரைப்பட நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்படும் "மவுண்டன் இன் தி ஜங்கள்" எனும் ஆங்கிலப்படத்திற்கான சில காட்சிகளை அண்மையில் பத்துமலையில் படம்பிடித்தார்கள். ஏறக்குறைய நிர்வாணமான நிலையிலுள்ள சில மலாய், இந்திய இளைஞர்கள் அக்காட்சிகளில் இடம் பெற்றிருப்பதாகவும், மேலும் சில காட்சிகள் ஒழுக்கக்குறைவாக இருப்பதாகவும் எடுத்துக்காட்டி மேற்படி படத்தை இங்கு எடுப்பதற்குத் தடைவிதிக்கும்படியும் உள்துறை அமைச்சுக்கு "செனிமான்" எனும் மலேசிய கலைஞர்கள் சங்க ஆலோசகர் ஹாஜி இட்ரீஸ் இப்ராகிம் கடுமையான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொகுப்பு: 'ராஜா மகன்"

வழிகாட்டுகிறார் வள்ளுவர்-11

உலகமே மகிழும்

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள் இல்லறவியலில் ஏழாவது அதிகாரத்தின்கீழ் இடம் பெற்றிருக்கும் 68-வது குறளாகும்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது (68)

இந்தக் குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு: "தம் மக்களின் அறிவுடைமை தமக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்"

குழந்தைச் செல்வம் குறித்து வள்ளுவர் தந்திருக்கும் பத்துக் குறள்களும் பத்து முத்துக்கள் என்று போற்றக்கூடிய மதிப்பு நிறைந்தவை ஆகும்.

அதிலும் இந்தக் கட்டுரைக்காக நாம் எடுத்துக்கொண்டிருக்கும் குறள் படிக்குந்தோறும், சிந்திக்குந்தோறும் புதிய புதிய கருத்துக்களை வெளிப்படுத்தும் அரிய புதையலாக அமைந்திருக்கிறது.

முக்கியமாக, குழந்தைகளின் கல்வி மேம்பாட்டில் வள்ளுவருக்குள்ள இணையற்ற அக்கறையையே இந்தக் குறளும், மற்றும் மக்கட்பேறு அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பல குறள்களும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவரின் குறள் வழியாகச் சமுதாயத்திற்குக் குழந்தைகளின் கல்வி குறித்து வழங்கப்பட்டிருக்கும் இக்கட்டளைகள் இன்றைய சூழ்நிலையில் மேலும் பன்மடங்கு அழுத்தத்துடன் வலியுறுத்தப்படவேண்டிய கட்டாயம் இருப்பதை நாம் நினைவு கூர்தல் நன்மையாகும். வள்ளுவர் காலத்தில் நமது சமுதாயம் சான்றோர்கள் நிறைந்த சமுதாயமாக- படித்தவர்களின் விழுக்காடு பெருகி நின்ற சமுதாயமாகத் திகழ்ந்திருக்கவேண்டும் என்பதில் நமக்கு ஐயப்பாடு இல்லை.

சங்ககால இலக்கியங்களில் காணப்படுகிற சமுதாய நெறிகளையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எண்ணிப் பார்க்கும்போது மனித நாகரிகத்தின் முதிர்ச்சியை- சிகரத்தை எட்டிப்பிடித்த பெருமிதமான நிலையை ஒரு காலத்தில் நாம் எய்தி இருந்தோம் என்பது கண்கூடு. அத்தகைய உச்சநிலையை எய்திய ஒரு சமுதாயம் கால ஓட்டத்தில் எந்த அளவுக்குச் சரிந்து விழுந்துவிட்டது என்பதை இன்று நாம் எதிர்நோக்கும் வாழ்வியல் பிரச்சனைகள் நமக்கு நன்கு அறிவுறுத்துகின்றன.

படிப்பை நிறுத்துகிற பிள்ளைகள்

பிள்ளைகளின் படிப்பில் முழு அக்கறை கொண்ட பெற்றோர்கள் நம்மிடையே மிகக் குறைந்துவிட்டனர். ஆரம்பக் கல்வியைக்கூட சரிவர முடிக்காமல் இடையிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிடுகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கையும் நமது சமுதாயத்தில் அதிகம். தம் பிள்ளைகளின் படிப்பைக் கெடுத்து பால்வெட்டுக்கு உதவியாக அவர்களைத் தம்மோடு அழைத்துச் செல்கின்ற மோசமான நிலை நமது தோட்டப்புற மக்களிடையே இன்னும் இருந்து வருவது வேதனை தருவதாகும். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் புறநானூற்று வரி அறிவுறுத்துகிறபடி தமது பிள்ளைகளைக் கல்வியில் மேம்படுத்திச் சிறக்கச் செய்கின்ற பெற்றோர்களின் எண்ணிக்கை நம்மிடையே பெருகுவதற்கு எல்லா வகையாலும் சமுதாயத்தில் முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இப்பொழுது குறிப்பிட்ட ஒரு விழுக்காடு மட்டுமே கல்வி மேம்பாட்டில் அக்கறைகொண்டு தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி நிலையங்களுக்கு அனுப்பி ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிலும் பயிலச்செய்து டாக்டர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் மற்றும் பல்வேறு துறை நிபுணர்களாகவும் உருவாக்கி வருகின்றனர். தங்கள் குழந்தையைச் சான்றோனாக்கிக் கற்றோர் கூட்டத்தில் முதலிடத்தில் இருக்கச் செய்து தாமும் மகிழ்ந்து தமது மக்களின் கல்வியறிவால் மற்றவர்களையும் மகிழ வைக்கின்ற இத்தகைய பெற்றோர்களின் முன்மாதிரியைச் சமுதாயத்திலுள்ள எல்லாப் பெற்றோர்களும் பின்பற்றுகின்ற நிலைமை பிறக்கவேண்டும். அதற்குக் கூட்டு முயற்சியும் கடுமையான பிரச்சாரமும் தேவைப்படும்.

நல்ல ராஜபாட்டை...

வள்ளுவர் இந்தக் குறள் மூலம் நமக்கு உணர்த்துவது யாது? பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும். அரைகுறையாகப் படிப்பை ஆரம்பப் பள்ளியிலோ இடைநிலைப் பள்ளியிலோ நிறுத்திவிடாமல் ஒரு நிறைவான பட்டத்தைப் பெறுகிற வரையில் பிள்ளைகளை விடாமுயற்சியோடு படிக்கவைக்கவேண்டும். மற்றச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு குழந்தைகளின் படிப்புக்குக் குடும்பச் செலவில் முதலிடம் கொடுக்கவேண்டும். அவ்வாறு தம் குழந்தைகளை உயர்கல்வி பெற்றவர்களாக ஆக்குகின்றவர்கள், தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்கு ஒரு நல்ல ராஜபாட்டையை அமைத்துத் தந்துவிடுகின்றனர். அந்தப் பிள்ளை வாழ்க்கையில் சொந்தக் காலில் நிற்பதற்கும் தக்க வருவாயைத் தேடுவதற்கும் சமுதாயத்தில் பிரகாசிப்பதற்கும் அந்த ராஜபாட்டை துணை புரியும். அதுமட்டுமன்று, பெற்ற தாய் தந்தையரும் தங்கள் கடமையைச் செம்மையாக நிறைவேற்றிய பூரிப்பில் திளைக்கவும் முடியும். தங்கள் பிள்ளை ஓர் உயரிய பதவியில் சிறந்த அந்தஸ்தில் கண்ணுக்கு இனிமை

முருகு சுப்பிரமணியன்

யாக அமர்ந்திருப்பதைக் கண்டு அந்தத் தாய் தந்தையர் ஆனந்தம் கொள்ளவும் முடியும். "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்னும் குறள் சுட்டுகிற உவகை இன்பத்தையும் அந்தத் தாய் தந்தையர் எய்த முடியும். "இவன் தந்தை என் நோற்றான் கொல்" என்று ஊரார் பார்த்துப் பெருமிதமும் வியப்பும் அடைகின்ற நிலையும் அந்தத் தாய் தந்தையருக்குத் தேனாக வந்து தித்திக்கும்.

இதற்கு மேலும் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு விளைவிக்கின்ற பயன்கள் உண்டு என்பதே இந்தக்குறள் எடுத்துரைக்கும் சிறப்பான நிலையாகும். உயர் கல்வி, பயின்றவனைச் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் அமர்த்துகிறது. அவனுக்குக் கவலையற்ற வாழ்க்கை நலன்களை வழங்குகிறது. அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையரையும் இன்பக் கடலில் ஆழ்த்துகிறது. அதற்கும் ஒரு படி மேலாக உலக மக்களுக்கெல்லாம் அந்தப் படிப்பு இனிமை பயக்கிறது. இன்பம் சேர்க்கிறது, பயன் விளைக்கிறது என்பது வள்ளுவரின் தீர்க்கமான கருத்தாகும். ஆகவே உங்கள் குழந்தையை உயர்கல்வி பயிலச் செய்து அவனைப் பட்டதாரியாக, கல்விமானாக ஆக்குவது உங்கள் குடும்பத்திற்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் செய்கிற உதவி மட்டுமல்ல பரந்து விரிந்து கிடக்கும் மனுக்குலத்திற்கே செய்கின்ற உதவியாகும் என்கிறார் வள்ளுவர்.

சர் சி. வி. ராமன் போன்ற விஞ்ஞானிகளைப் பெற்றெடுத்துக் கல்வியில் அவர்களை மேம்பட வைத்த அவர்களின் பெற்றோரை எண்ணிப் பாருங்கள். சர் சி. வி. ராமன் போன்ற விஞ்ஞானிகளால் அவர் குடும்பத்திற்கும் தனிப்பட்ட முறையில் அவருக்கும் ஏற்பட்ட நன்மைகளைவிட மனித குலத்திற்கு அவருடைய விஞ்ஞான சாதனைகள் மூலம் ஏற்பட்டிருக்கும் நன்மைகள் மிகுதி. அதனால்தான் தமது மக்களுடைய அறிவு மேம்பாடு அவர்களைப் பெற்ற தாய் தந்தையரைக் காட்டிலும் உலக மக்களுக்கெல்லாம் இனிமைபயப்பது என்னுங் கருத்தை வள்ளுவர் கூறுகிறார்.

டாக்டராக ஒரு பிள்ளை

சர் சி. வி. ராமன் போன்ற மேதைகள் ஒரு சிலரே இருப்பர் என்னும் வாதம் எழக்கூடும். சாதாரண நிலையில் டாக்டராக ஒரு பிள்ளை படித்து முடித்து வேலைக்கு அமர்ந்துவிட்டால் அவனுடைய கல்வியறிவினால் அவனுடைய குடும்பத்திற்கும் தனிப்பட்ட முறையில் அவனுக்கும் ஏற்படுகிற பயன்களை விட சுற்றியுள்ள சமுதாயத்திற்கு ஏற்படுகிற பயன்கள் அதிகம் என்பதை நாம் நடைமுறையில் கண்டு வருகிறோம். அண்மையில் மாஸ் விமான விபத்தில் மாண்டுவிட்ட டாக்டர் புவன் என்னும் மகப்பேறு மருத்துவ நிபுணரின் நிலையை எண்ணிப் பார்த்தாலும் வள்ளுவர் கூறுகின்ற கருத்தின் சிறப்பை நாம் உணர முடியும்.

இந்தக் குறளின்படி தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளுக்கு அரும்பாடுபட்டு வழங்குகின்ற உயர்கல்வி அந்தப் பிள்ளைகளுக்கும் அவர்களின் குடும்பத்துக்கும் செய்கின்ற உதவியாக மட்டும் அமையாமல் மனித குலத்திற்கே செய்கின்ற திருத்தொண்டாக அமைந்து விடுகிறது. அவ்வாறு உயர்கல்வி பெற்ற குழந்தைகளின் கல்வியறிவு பெற்ற தாய் தந்தையருக்குப் பயக்கின்ற நன்மையைவிட சுற்றியுள்ள சமுதாயத்திற்கும் இன்னும் சொல்லப் போனால் மனுக்குலத்திற்கும் பயக்கின்ற நன்மை மிகமிகப் பெரிதாகும்.

மற்றொரு நயம்

இந்தக் குறளில் மற்றொரு நயமும் பொதிந்திருக்கிறது. பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோரைவிட அவர்களின் குழந்தைகள் படிப்பில் உயரிய நிலையை அடைவது இயல்பே ஆகும். தலைமுறைக்குத் தலைமுறை கல்வி மேம்பாடு உயர்ந்துகொண்டே செல்லும். தந்தை எல். சி. இ., எம். சி. இ. போன்ற கல்வித் தகுதியையும் அவருடைய பிள்ளைகள் பி. எஸ். சி., எம். எஸ். சி., எம். பி. பி. எஸ். போன்ற பட்டங்களையும் பெற்றிருப்பதை நாம் பல குடும்பங்களில் இப்போது காணமுடியும். அடுத்த தலைமுறை இன்னும் கல்வித் துறையில் நிபுணத்துவத்தையும் தனிச் சிறப்புக்களையும் பெற்றிருப்பது உறுதி. இந்த நிலையில் பெற்றோரை விட பிள்ளைகள் படிப்பில் மேம்பட்டு நிற்பது நடைமுறையில் நாம் காண்கிற உண்மையாகும்.

இப்படித் தனது பிள்ளை தன்னைவிட படிப்பில் சிறந்து விளங்குவது கண்டு எந்தத் தந்தையும் பொறாமைப்படுவதில்லை. அதற்கு மாறாகத் தமது குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் எல்லாப் பெற்றோருக்குமே மகிழ்ச்சியை வழங்குகிறது. இது உலக மாந்தருக்கெல்லாம் பொருந்துகிற பொது விதியாகும். உலகிலுள்ள எல்லாப் பெற்றோர்களும் தம்மை விட தமது குழந்தைகள் படிப்பில் மேம்பட்டு நிற்பதையே விரும்புவர். அந்நிலை குறித்துப் பெருமிதமும் அடைவர்.

வள்ளுவரின் இந்தக் குறள் உணர்த்துகிற உண்மைகளை நாம் மனத்தில் கொள்வோம். குறிப்பாக நமது பெற்றோர்கள் அழுத்தமாக எண்ணிப் பார்க்க வேண்டிய பல கருத்துக்களை இந்தக் குறள் உள்ளடக்கியிருக்கிறது. உயர் கல்வி பெற்ற பிள்ளைகளை ஒவ்வொரு குடும்பத்திலும் உருவாக்க உறுதி எடுத்துக் கொள்வோம். கல்வியில் பின்தங்கிய சமூகம் என்னும் நிலையை மாற்ற நாம் எல்லா வகையாலும் முழுமூச்சாகப் பாடுபடுவோம்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது (68)



ஆசிரியர்: திரௌபதி கூந்தலை அவிழ்த்து ஏன் சபதம் செய்தாள்?
மாணவன்: தலை வாரும் தொல்லையிலிருந்து கொஞ்ச நாளைக்காவது தப்பிக்கத்தான்!